தமிழ் இதழ்கள் - விடுதலைக்குப்பின்

முனைவர் வே. சசிகலா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

தமிழ் இதழ்கள்-
விடுதலைக்குப்பின்

முனைவர் வே. சசிகலா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113.

டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளைச்
சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர்: டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார்)

வரிசை எண் : 9 நாள் : 25-10-2006

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Tamiḻ Itaḻkaḷ-Viṭutalaikkuppiṉ
Author	:	Dr. V. Sasikala M.A., M.Phil., Ph.D. Reader in Tamil Sri Parasakthi College Courtallum-627 802.
General Editor	:	Dr. M. Rajendran Director (Full Addl. Charge) International Institute of Tamil Studies Tharamani, Chennai-600 113.
Publisher & ©	:	International Institute of Tamil Studies II Main Road, C.I.T. Campus, Tharamani, Chennai-600 113. Ph: 22542992
Publication No.	:	563
Language	:	Tamil
Edition	:	First
Year of Publication	:	2006
Paper Used	:	18.6 Kg TNPL Maplitho
Size of the Book	:	1/8 Demy
Printing type used	:	10 Point
No. of Pages	:	x + 126
No. of Copies	:	1200
Price	:	Rs. 40/- (Rupees Forty Only)
Printed by	:	Sri Venkateswara Offset 36/19, New Street, Thousand Lights, Chennai-600 006.
Subject	:	Journalism

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் ம. இராசேந்திரன்
இயக்குநர் (முழுக் கூடுதல் பொறுப்பு)
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

அணிந்துரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் பல அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றுள்ளன. அறக்கட்டளைகள் மூலம் சொற்பொழிவுகளை நிகழ்த்தி அவற்றை நூல்களாக வெளியிடுவது இந்நிறுவனத்தின் பணிகளில் ஒன்றாக உள்ளது. அண்மைக் காலத்தில் சொற்பொழிவு நாளிலேயே அச்சு நூலும் வெளியிடப்பட்டு வருகிறது. இவ்வாறே தமிழ் இதழ்கள்– விடுதலைக்குப் பின் எனும் இந்நூல் அறக்கட்டளைச் சொற்பொழிவு நாளிலேயே (25-10-06) வெளிவருகிறது. இச்சொற்பொழிவு நூலின் ஆசிரியர் முனைவர் திருமதி வே. சசிகலா அவர்கள் மிகுந்த பாராட்டுக்குரியவர்.

தமிழக வரலாற்றுப் பண்பாட்டுச் செல்வங்கள் மற்றும் அரிய தமிழ் ஆவணங்கள் போன்றவை பாதுகாக்கப் பெறவும் அவை சிறப்பாக ஆய்வு செய்யப் பெறவும் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளை நிறுவப்பெற்றுள்ளது. இதழியலைப் பொதுமக்களுக்கான- குறிப்பாக அடித்தள மக்களுக்கான ஊடகமாக்கும் அரிய பணியை மேற்கொண்டு வரும் அவர்களின் நோக்கம் நிறைவேறும் பொருட்டு இதழியல் பற்றிய சொற்பொழிவாக இது அமைவது குறிப்பிடத் தக்கது.

விடுதலை காலத்திற்கு முற்பட்ட தமிழ் இதழ்களை ஆய்ந்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நான்கு தொகுதிகள் வெளியிட்டுள்ள நிலையில், விடுதலைக்குப் பின்னர்த் தமிழ் இதழ்கள் குறித்த பொழிவு நூலாக இது அமைகிறது. இதழியலின் தோற்றம், தமிழ் நாளிதழ்களின் அமைப்பு, தமிழில் வெளிவரும் காலமுறை இதழ்கள், சிற்றிதழ்கள் ஆகியவை குறித்து இச் சொற்பொழிவு அமைந்துள்ளது. தமிழகத்தின் பண்பாட்டு வரலாற்று ஆய்வுக்கு இதழ்களின் பங்களிப்பு எந்த அளவு தவிர்க்க முடியாததாக உள்ளது என்பதைக் கிடைத்துள்ள புள்ளி விவரங்கள் மற்றும் முடிவுகள் வழி இந்நூல் தெள்ளத் தெளிவாக உணர்த்துகிறது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் முதன்முறை தமிழக முதல்வராக விளங்கிய காலத்தில் இந்நிறுவனத்தைத் தொடங்கி வைத்துள்ளார்கள். தொடர்ந்து இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வழிநடத்தி வருகிறார்கள். தற்போது இந்நிறுவனத் தலைவராகவும் திகழ்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தை நெறிப்படுத்திவரும் பாங்கினைத் தமிழகம் என்றென்றும் நன்றியுடன் பாராட்டும்.

இந்நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் சிறப்பு ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர்-தமிழ் வளர்ச்சி-பண்பாடு (ம) இந்து சமய அறநிலையத் துறை- திருமிகு இரா. கற்பூர சுந்தர பாண்டியன் இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவைச் செப்பனிட்டு, மெய்ப்புத் திருத்திச் சிறப்பாக நூல்வெளிவருவதில் குறிப்பிடத்தக்க வகையில் பங்களித்துள்ள முனைவர் ஆ. தசரதன் அவர்களும் இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்களும் இந்த அறக்கட்டளைச் சொற்பொழிவின் எழுத்துருவை இந்நிறுவனத்தில் ஒளிஅச்சுக்கோப்புச் செய்த திருமதி பி.கௌசல்யா அவர்களும் இந்நூலை அழகுற அச்சிட்டுத்தந்த ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஆப்செட் அச்சகத்தாரும் பாராட்டிற்குரியவர்கள்.

சென்னை
13-10-2006

இயக்குநர்

நன்றியுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவப் பெற்றுள்ள டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளையின் ஒன்பதாவது பொழிவினை நிகழ்த்துவதற்கு வாய்ப்பளித்த நிறுவன இயக்குநர் முனைவர் ம.இராசேந்திரன் அவர்களுக்கு முதற்கண் என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இந்நிறுவனம் தமிழில் பல உயராய்வுகளை மேற்கொண்டு வருகின்றது என்பதையும், இங்கே பல அறக்கட்டளைகள் நிறுவப்பெற்றுள்ளன என்பதையும் அறிவேன். அவற்றுள் ஒன்றான டாக்டர் பா. சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளைச் சொற்பொழிவை 'இதழியல்' தொடர்பாக நான் நிகழ்த்தவும், இப்பொழிவு நிகழ்வின்போதே அதன் அச்சு நூலை வெளியிடவும் செய்த இந் நிறுவன இயக்குநர் அவர்களுக்கு மீண்டுமொருமுறை என் நெஞ்சார்ந்த நன்றி.

வளர்ந்துவரும் இதழியல் மற்றும் மக்கள் தொடர்பியல் பற்றிய என் சிந்தனைகள் இச்சொற்பொழிவின் மூலம் முழுவடிவம் பெற்றுள்ளன. இதற்குக் காரணமான உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பேராசிரியப் பெருமக்களுக்கும், நிறுவனப் பணியாளர்களுக்கும், என் அன்பு மாணவச் செல்வங்களுக்கும், என்னுடன் பணியாற்றும் பேராசிரியப் பெருமக்களுக்கும், என் கல்லூரி நிருவாகத்தினர்க்கும் என் நன்றிகள்.

தமிழில் அமைந்துள்ள ஒப்பற்ற வரலாற்றுப் பண்பாட்டுச் செல்வங்களைப் பாதுகாக்கும் நோக்கத்தில் அவற்றை முறையே ஆவணப்படுத்த வேண்டுமென்று நிறுவப் பெற்ற டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அறக்கட்டளையின் சீரிய நோக்கங்களுள் இதழியலும் ஒன்றாகும். அதை நிறைவேற்றும் பொருட்டு எனது **தமிழ் இதழ்கள்–விடுதலைக்குப் பின்** என்ற இப் பொழிவு அமைவதாக நம்புகிறேன். இதற்குக் காரணமாகவிருக்கும் இவ் அறக்கட்டளையை நிறுவிய பெருந்தகை டாக்டர் பா.சிவந்தி

ஆதித்தனார் அவர்களுக்கும், இம் மாபெரும் அறக்கட்டளையைப் பெற்று இந்நிறுவனத்திற்குத் தந்த திரு நெல்லை நெடுமாறன் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள்.

இதழியல் கல்வி என்பது இன்றைய காலக்கட்டத்தில் மிகவும் இன்றியமையாத ஒன்றாக அமைந்துள்ளது. அதனால் இவ் இதழியல் நூலில் அனைத்துக் கருத்துகளும் இடம்பெற வேண்டும் என்ற முனைப்பில் இந்நூல் ஆக்கப் பெற்றுள்ளது.

இதுகாறும் இதழியலில் யான் பெற்றுள்ள பயிற்சியின் மூலம் இச் சொற்பொழிவு நூலை ஆக்கியுள்ளேன். இதற்கு உறுதுணையாக அமைந்த கல்விக் கூடங்களுக்கும் அன்பு நெஞ்சங்களுக்கும் என் நன்றி.

என்னைப் பெற்றெடுத்து, ஆளாக்கி, அருங்கல்வி தந்து, அரவணைத்து, என் மேன்மை கண்டு நினைவிலிருந்து மகிழும் என் அன்புப் பெற்றோர்க்கும் என் நன்றிகள். என்னுடைய அனைத்து எழுத்து முயற்சிகளுக்கு உறுதுணையாகவும், பக்கபலமாகவும் இருந்து ஊக்கம் தரும் என் கணவருக்கும், அன்பு மகள் தௌம்யாவிற்கும் என் நன்றி.

10-10-06 வே. சசிகலா

ஆசிரியரைப் பற்றி

முனைவர் திருமதி வே. சசிகலா அவர்கள் கோவை மாவட்டம் தாராபுரம் அருகேயுள்ள சூரியநல்லூரில் பிறந்து, ஏழாயிரம் பண்ணை நாடார் மகமை உயர்நிலைப்பள்ளியில் கல்வி கற்று, மதுரை லேடி டோக் கல்லூரியில் தமிழில் இளங்கலை பயின்று, குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியில் முதுலை முடித்தார். அக்கல்லூரியில் தமிழ்த்துறை இணைப் பேராசிரியராகவும் துறைத் தலைவராகவும் தற்போது உள்ளார். இதழியல் மற்றும் மக்கள் தகவல் தொடர்பியலில் முதுகலைப் பட்டமும் பெற்றவர். இவற்றுடன் ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்டமும் பெற்றுள்ளவர். இளங்கலை மற்றும் முதுகலை அளவில் 34 ஆண்டுகள் ஆசிரியப் பணியாற்றி வருகிறார். இப் பணியினூடே 25 ஆய்வில் நிறைஞர் மாணவர்களுக்கும் 8 முனைவர் பட்ட ஆய்வாளர்களுக்கும் நெறியாளராகவும் இருந்துள்ளார்.

ஆசிரியப் பணியல்லாது, சமூகப் பணிகளிலும் ஆட்சிப் பணிகளிலும் இவர் ஈடுபாடுடையவர். திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகப் பேரவைக் குழு உறுப்பினராகவும் இவர் இருந்து வருகிறார். இப் பல்கலைக் கழகப் பாடத்திட்ட புனரமைப்புக் குழுவிலும் இப்பல்கலைக் கழக மற்றும் திருநெல்வேலி மாவட்ட என்.எஸ்.எஸ். சேவைப் பிரிவுகளிலும் ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார்.

தன்னாட்சி பெற்றுள்ள குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியில் கல்விக்குழு மற்றும் மாணவியர் சேர்க்கைக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். இக்கல்லூரியின் பல்வேறு பணிகளிலும், குழுக்களிலும் பங்கேற்றுச் சிறப்பாகப் பணிபுரிந்து வருகின்றார். இக்கல்லூரி தொடர்பான கருத்தரங்குகளை ஏற்பாடு செய்து நடத்தியுமுள்ளார். இவற்றுள் மாநில அளவிலான வரலாறு மற்றும் பண்பாடு தொடர்பான கருத்தரங்கம் (2003),

நாட்டுப்புறவியல் கருத்தரங்கம் (2004) போன்றவை குறிப்பிடத்தக்கன. இக் கல்லூரி திருப்பதி தேவஸ்தானத்துடன் இணைந்து 2005, 2006ஆம் ஆண்டுகளில் நடத்திய கருத்தரங்குகளின் அமைப்பாளராகவும் இவர் இருந்துள்ளார். பல்கலைக் கழக நிதி நல்கைக் குழு ஏற்பாடு செய்த மனித உரிமைக் கருத்தரங்கிலும் பங்கேற்றுள்ளார்.

இவர் வெளியிட்ட நூல்கள்

1. **தினமணியில் செய்தி மொழிபெயர்ப்பு**, விஜயா பிரிண்டர்ஸ், சென்னை, 1984.
2. **சஞ்சிகைகள் (தகவல் தொடர்பியல் அடிப்படைகள்)**, மீடியா பப்ளிகேஷன்ஸ், 52, வீரமுத்து கார்டன், ஸ்ரீநகர் (விசாலம்) ஆனையூர் அஞ்சல், மதுரை-626 017.
3. **பெண்ணிய நோக்கில் இரு பெண் பாத்திரங்கள்**, (தமிழிலக்கியத்தில் பெண்ணியச் சிந்தனைகள்) (கட்டுரைத் தொகுப்பு), தேனருவி வெளியீடு, தமிழ்த்துறை, ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.
4. **சித்தர்கள் தத்துவம்** (இந்தியத் தத்துவங்கள்) (கட்டுரைத் தொகுப்பு), ஸ்ரீப்ராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.
5. **சங்கத் தமிழர்களின் நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்களும்** (சங்க இலக்கியத்தில் . . .) (கட்டுரைத் தொகுப்பு), தேனருவி வெளியீடு, தமிழ்த்துறை, ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்.
6. **வள்ளிமயில்** (புதிய கற்போருக்கான சிறுகதை), BGVS வெளியீடு, மதுரை.

சிறப்பு வெளியீடுகள்

பெரியாழ்வார் பாசுரங்களும் அன்னமாச்சாரியாரின் கீர்த்தனைகளும் (Selected and Published in the Tamil Journal 'சப்தகிரி'), Printed and Published by T.T. Devasthanams, Thiruppathi, Edition (July, 2005, Issue).

இவற்றையன்றி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்திய தமிழறிஞர் வரிசைக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு, டி.கே. சிதம்பரநாதனார், வெள்ளகால் பா. சுப்பிரமணிய முதலியார், வ.வே.சு. ஐயர் பற்றிக் கட்டுரைகளை அளித்துள்ளார். மேலும் சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரி & என்.சி.பி.எச். இணைந்து நடத்திய நவீன இலக்கியத்தில் **பெண்ணியம்** - மகளிர் தினக் கருத்தரங்கத்தில் கலந்து கட்டுரை அளித்துள்ளார்.

பராசக்தி கல்லூரி வெளியீடான- (தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, பெருங்கதை, கம்பராமாயணம் ஆகிய நூல்களில் காணப்படும் தகவல் தொடர்பு முறைகளை விளக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய நூலில்) **தமிழிலக்கியத்தில் தகவல் தொடர்பு** என்ற பெயரில் பங்களிப்புச் செய்துள்ளார்.

பொருளடக்கம்

		பக்கம்
	அணிந்துரை	
	நன்றியுரை	
	ஆசிரியரைப் பற்றி	
1.	முன்னுரை	1
2.	நாளிதழ்கள்	19
3.	கொள்கை இதழ்களும் சாதி இதழ்களும்	40
4.	சஞ்சிகைகள்	42
5.	சிறப்பு இதழ்கள்	53
6.	முடிவுகள்	114
	இணைப்புகள்	
	துணை நூல்கள்	

முன்னுரை

“செய்தித் தொடர்பின் விரிவு மக்களாட்சியின் வளர்ச்சி” என்பார் ரோமாண்டு வில்லியம்ஸ் என்னும் அறிஞர். செய்திப்பரவல் மனித இன வளர்ச்சியின் முக்கிய அறிகுறியாகும். இந்தியாவைப் பொறுத்த மட்டில் இந்த வளர்ச்சி கணக்கிட முடியாத அளவிற்கு வளர்ந்துள்ளது. தமிழகத்திலும் இதழ்களின் வளர்ச்சி அபரிமிதமானதாக உள்ளது. விடுதலைக்குப்பின் அச்சுவழி ஊடகங்களான இதழ்கள் மிகப்பெரிய சாதனையை நிகழ்த்தியுள்ளன. இந்திய இதழ்கள் வரலாற்றில் இந்திய மொழி இதழ்களின் வரலாறு தனித்துப் பேசப்படுவது; அறிந்து கொள்வதற்குச் சுவையானது; ஆர்வத்தை ஊட்ட வல்லது. இந்திய மொழி இதழியலின் தந்தை என்று அழைக்கப்படுபவர் மிகச் சிறந்த சமூகச் சிந்தனையாளரும், சீர்திருத்தவாதியுமான ராஜாராம் மோகன்ராய் ஆவார். (நாதிக். கிருஷ்ணமூர்த்தி, இந்திய இதழியல், ப.219, 1996)

அவர் வகுத்த பாதையால் வீறு கொண்டெழுந்த இந்திய மொழி இதழியலின் வீச்சு இன்று பிரம்மாண்டமானதாய் விளங்குகிறது. பல்வேறு மொழிகள் பேசப்படும் நம் தாய் நாட்டின் வித்தியாசமான அமைப்பால் ஆங்கில மொழி இதழ்கள் ஒருபுறம் தழைத்துள்ளன எனினும் அவற்றிற்குச் சற்றும் குறைவில்லாமல் இந்தியமொழி இதழ்களும் ஆல்போல் தழைத்துள்ளன.

அச்சுவழி ஊடகத்தின் அடிப்படைத் தேவையான ‘அச்சடித்தல்’ இந்தியாவில் காலூன்றத் தலைப்பட்ட காலத்தில் நடந்த நிகழ்வுகள் இந்திய மொழி இதழ்களுள் தமிழ்மொழி இதழ்கள் இதழியலுக்கு மகுடம் சூட்டுவது போல அமைந்துள்ளன என்பதை இதழியல் வரலாறு உணர்த்துகின்றது. இந்திய மொழி ஒன்றில் முதல் முதலில் வெளியான அச்சுப்பிரதி தமிழில் வெளிவந்தமைதான் அதற்குக் காரணம். 1578ஆம் ஆண்டில் கேரளப் பகுதியில் உள்ள கொல்லத்தில் போர்த்துக்கீசிய பாதிரிமார்கள் 16 பக்கங்களைக்கொண்ட ‘கிறிஸ்டியன்

டாக்டிரின்' என்ற தமிழ்ப்பிரசுரத்தை வெளியிட்டனர். இந்திய மொழிகளில் முதன் முதலில் வெளிவந்த அச்சுப்பிரதி தமிழில் வெளியிடப்பட்ட கிறிஸ்டியன் டாக்டிரின் என்று பி.எஸ். கேசவனும் குறிப்பிடுகிறார். (**இந்தியாவில் அச்சடித்தல் பதிப்பித்தல் வரலாறு**, தொகுதி I, ப. 18-19). தமிழில் உருவான அச்சடித்தல் வசதி இதழுலகில் மாபெரும் மாற்றத்தைப் புகுத்தியது. தமிழில் இதழியல் வரலாற்று வளர்ச்சியினை விடுதலைக்கு முன்னரும் பின்னரும் என்று இரு முக்கிய நிலைகளில் நின்று ஆராயலாம். இந்திய விடுதலைக்குப் பின்னர் நேர்ந்த மாற்றங்கள் மிக வீச்சுடையனவாக விளங்குகின்றன.

அச்சுவழி ஊடக வளர்ச்சி

இந்தியாவில் அச்சுவழி ஊடகம் வளர்ச்சிப் பாதையில் உள்ளது. பெரும்பாலான ஆசிய நாடுகளிலும் இந்த நிலைதான் உள்ளது. ஆனால் வளர்ந்து வரும் நாடுகளில் காணப்படும் இந்நிலை வளர்ச்சி பெற்ற நாடுகளில் இல்லை என்று குறிப்பிடுகிறார் இந்துப் பத்திரிகையின் ஆசிரியர் என்.ராம். ஐதராபாத்தில் நடந்த பத்திரிக்கையாளர் கூட்டத்தில் உரையாற்றிய அவர் வளர்ச்சி பெற்ற நாடுகளில் அச்சுவழி ஊடகங்கள் மறைந்து வருவதாகக் குறிப்பிடுகிறார். அதன் இடத்தை மின்னணு ஊடகங்கள் பிடித்துக் கொள்வதே அதன் காரணமாகும்.

இந்தியாவில் அச்சுவழி ஊடகங்கள் பெருக்கத்திற்குச் சில காரணங்களைக் குறிப்பிடலாம்: முதன்மையாக மக்களிடையே வாங்கும் சக்தி பெருகியிருக்கிறது. தங்கள் வருவாயில் ஒரு மிகச் சிறிய பகுதியை வாசகர்கள் இதழ்களை வாங்குவதற்கு ஒதுக்குகிறார்கள். தேசிய வாசகர் கணக்கெடுப்பின்படி (National Readership Survey) சிறிய நகரங்களிலும் வாசகர்கள் பெருகியிருக்கிறார்கள் என்பதை அறிய முடிகிறது. அரசியல் போக்குகளும், நிகழ்வுகளும் பிற காரணங்களாகின்றன. மூன்றாவதாகத் தொழில் முனைவர் பெருக்கத்தைக் குறிப்பிடலாம். (Aggressive Entrepreneurship) (இணையத்தளத் தகவல்). 'வேன்' (WAN) (World Association of News Papers Survey) என்னும் அமைப்பின் கணக்கெடுப்பு உலகின் 5 செய்தித்தாள் சந்தைகளில் மூன்றை ஆசிய நாடுகள் பெற்றுள்ளன என்று தெரிவிக்கிறது.

சீனா	-	93.5 மில்லியன் பிரதிகள்
இந்தியா	-	78.8 மில்லியன் பிரதிகள்
ஜப்பான்	-	70.4 மில்லியன் பிரதிகள்
அமெரிக்கா	-	55.6 மில்லியன் பிரதிகள்
ஜெர்மனி	-	22.1 மில்லியன் பிரதிகள்

என்று கணக்கெடுக்கப்பட்டுள்ளது. அது ஆசிய சந்தைகளில் அச்சுவழி ஊடகம் ஏறுமுகத்திலும், மேலை நாடுகளில் அது இறங்கு முகத்திலும் இருக்கக் காணலாம். இந்தியாவில் இணையத்தளப் பயன்பாடு மிகவும் குறைவு. இதுவும் அச்சுவழி ஊடகத்தின் பெருக்கத்திற்கு ஒரு காரணமாகும்.

வளர்ந்து வரக்கூடிய பல நாடுகளுடன் ஒப்பிடும் பொழுது இந்தியாவில் விடுதலைக்குப் பின்னர் இதழ்களின் வளர்ச்சி அபரிமிதமானதாகக் காணப்படுகிறது. இந்தியாவில் 100 மொழிகளில் 5,264 நாளிதழ்கள் வெளிவந்ததாகத் தகவல்கள் கூறுகின்றன. (இணையத்தளத் தகவல்). இதழ்களைப் பற்றிய தகவல்களைத் தொகுக்கவும், இதழ்களைப் பதிவு செய்யவும் இதழ்ப் பதிவாளர் அலுவலகம் மும்பையில் 1956இல் நிறுவப்பட்டது. (R.N.I.) 1998இல் அது வெளியிட்ட அதனுடைய 43வது அறிக்கை தகவலின் படி இந்தியாவில் 43,828 நாளிதழ்கள் வெளிவந்தன என்று அறிய முடிகிறது.

உலகிலேயே நாளிதழ் விற்பனையில் முதலிடத்தைப் பெறுவது சீனா என்று அறிய முடிகிறது (85 மில்லியின் பிரதிகள்). சீனாவிற்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்தைப் பெறும் இந்தியா 72 மில்லியன் பிரதிகளின் விற்பனையைப் பெற்றுள்ளது. தொழில் நுட்பத்தில் மிகவும் முன்னேறியுள்ள நாடுகளாகக் கருதப்படும் ஜப்பானும் (75 மில்லியன் பிரதிகள்), அமெரிக்க ஐக்கிய நாடுகளும் (55 மில்லியன் பிரதிகள்) முறையே மூன்றாவது, நான்காவது இடங்களைப் பெறுகின்றன.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் இதழ்களின் பெருக்கம் மிகச் சீராக வளர்ந்து வந்திருப்பதைக் காண முடிகிறது. 1961இல் ஏபிசி. தகவலின்படி ஒரு மையத்துக்கு மேல் வெளிவந்த இதழ்கள் மொத்தம் 12 ஆகும். அவற்றுள் நான்கு தமிழ்மொழி இதழ்களாகும். 1976இல் அதே கணக்கெடுப்பின்படி ஆறு

மையத்திற்கு மேல் வெளிவந்த நாளிதழ்கள் 21 என்று குறிப்பிடுகிறது. அவற்றுள் 14 தமிழ் மொழி இதழ்களாகும். (ராபின் ஜெஃப்ரி, முன்னது, ப99).

தமிழ் மொழியின் இந்த இதழ்ப் பெருக்கத்திற்கு அடிப்படையான காரணம் தமிழ் இதழ் வெளியீட்டில் நிகழ்ந்த மாற்றங்களேயாகும். வாசகர்களைக் கவர்வதற்கும், விற்பனையைப் பெருக்குவதற்கும் தமிழ் இதழ்கள் பல முயற்சிகளை மேற்கொண்டன. எனினும் இதழ் மொழிநடை மாற்றம் மிக முக்கியமான பங்கு வகித்ததை வாசகர் பெருக்கத்திற்கு மொழிநடையுடன் சமரசம் செய்து கொள்ளும் சூழல் உருவானது. 'விற்பனைப் பெருக்கமும் தேவை! மொழித் தூய்மையையும் தக்கவைத்தலும் என்று எண்ணுதல் பொருந்தாது' என்பது இதழியலாளர்களின் கருத்து. விற்பனைப் பெருக்கத்தை விரும்பிய தமிழ் இதழ்கள் எளிய மக்கள் புரிந்து கொள்ளும் மொழிநடையை உருவாக்கியது மட்டுமின்றி அவர்கள் விரும்பும் செய்திகளையும் தெரிவு செய்து வெளியிட்டனர். எனவே தனி மொழிநடை உருவானது. அதனால் தமிழ் இதழ்களின் வெளியீடும் விற்பனையும் பெருகின.

2005ஆம் ஆண்டு அறிக்கையின் படி 55,780 செய்தித்தாள்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவற்றின் விற்பனை 142 மில்லியன். கடந்த மூன்று ஆண்டுகளில் நாளிதழ்கள், பருவ இதழ்களின் விற்பனை 179 மில்லியன்களிலிருந்து 200 மில்லியன் வரை உயர்ந்திருக்கிறது. தேசிய வாசகர் கணக்கெடுப்பு அறிக்கையின் படி 2003, 2004 ஆகிய ஆண்டுகளில் நாளிதழ்களின் எண்ணிக்கை முறையே 31,410,000, 33,93,000. பருவ இதழ்களின் எண்ணிக்கை 2003, 2004ஆம் ஆண்டுகளில் முறையே 8,70,7000, 14,92,0000.

எழுத்தறிவு

இதழ்களின் உற்பத்தி எழுத்தறிவில் தொடங்குகிறது எனலாம். எழுத்தறிவு பெற்றவர்கள் மட்டுமே அச்சு ஊடகங்களாகிய இதழ்கள்வழித் தகவல்களைப் பரிமாறிக் கொள்வதுடன் சமூகம் சார்ந்த கருத்துகள், கலாச்சாரப் பகிர்வுகள் போன்றவற்றை நிகழ்த்த முடியும். இதுவே அவர்களுடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு வழி வகுக்கிறது. நம் மக்களிடையே எழுத்தறிவின்மை காணப்படும் அதே வேளையில் இதழ்களில்

வெளிவருவனவற்றை அறியும் ஆர்வம் இருக்கிறது. ஏனெனில் பலர் அரசியல் செய்திகளைத் தெரிந்து கொள்ள விழைகின்றனர். எழுத்தறிவின்மையால் கிராம மக்களிடையே இதழ்களை வாசிப்போரின் எண்ணிக்கை குறையும் வாய்ப்புண்டு. இதனால் இந்திய மொழி இதழ்களின் வளர்ச்சி ஓரளவிற்குத் தடைப்படும் போக்கு இருந்தது. இந்தியாவில் வெளிவரும் 55% இதழ்கள் மாநிலங்களின், முக்கிய நகரங்களில் விற்பனையாவதாகப் பிரஸ் கமிஷன் அறிக்கை கூறுகிறது (**இந்தியப் பத்திரிகைகள் 1955** முதல், பக். 18-22). இதில் வியத்தகு தகவல் யாதெனில் மொழியுடன் உணர்வுப் பூர்வமாகப்பற்று வைத்திருக்கும் மக்களிடையே தான் எழுத்தறிவின்மையும் மிகுதியாகக் காணப்படுகிறது என்பதே. இதழ்களைப் படிக்க ஓர் இடம், இதழ்கள் வாங்கும் சக்தி ஆகியவை தேவை. ஆயின் இவையெல்லாவற்றையும் விட எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டிய தேவையே முதன்மையானதாகிறது. இதழ்களின் விற்பனை என்பது எழுத்தறிவை உள்ளடக்குகிறது.

இந்தியாவில் 1951இன் கணக்கெடுப்பின்படிக் கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை 50 விழுக்காடாகும். கல்வி பெற்றவரும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் ஆங்காங்கு வாழ்ந்து வந்தனர். எழுத்தறிவு பெற்ற இவர்களனைவருக்கும் இதழ்களை வாங்கும் சக்தியில்லை.

பல விதச் சிக்கல்கள் நிறைந்த இந்தச் சூழ்நிலை மிக விரைவில் மாறத் தொடங்கியது. அதற்கு அடிப்படைக் காரணம் எழுத்தறிவு விகிதத்தின் உயர்ச்சியேயாகும். 1951-1991க்கு இடையே எழுத்தறிவு விகிதம் 7 மடங்கு உயர்ந்தது. அதிலும் 1971 முதல் 1981 வரை உள்ள காலக்கட்டத்தில் கல்வி கற்றவர் எண்ணிக்கை 100 மில்லியனிலிருந்து 234 மில்லியன் வரை உயர்ந்தது. இந்த எண்ணிக்கை 1991இல் 352 மில்லியன் வரையும் உயர்ந்தது என்பது இந்திய அரசின் அறிக்கைகள் தெரிவிக்கும் தகவல்களாகும்.

எழுத்தறிவு பெற்றோரின் எண்ணிக்கை உயர்ந்ததற்கு அடிப்படையான காரணம் யாதெனில் மத்திய, மாநில அரசுகளின் எழுத்தறிவு இயக்க முயற்சிகளே ஆகும். வளர்ந்து வரும் நாடுகளில் கிராமப் புறங்களில் ஐந்து வீடுகளுக்கு ஒரு நபர் மட்டுமே எழுதப்படிக்கத் தெரிந்தவராக இருப்பர். (**இந்தியப் பத்திரிகைகள் 1955** முதல், ப74). 1988இல் தேசிய எழுத்தறிவகம்

(National Literacy Mission) நிறுவப்பட்டது. இதன் தொடர் முயற்சிகளால் 1991இல் 52.5 சதவிகிதமாக இருந்த எழுத்தறிவு விகிதம் 2001இல் 65.4 சதவிகிதமாக உயர்ந்தது.

தமிழகத்தில் எழுத்தறிவு விகிதம் 73.5 சதவிகிதமாக உள்ளது. இது தேசிய சராசரியை விட உயர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது. கிறித்தவப் பாதிரிமார்களின் கல்வித் தலையீடு இருந்த மூன்று மாநிலங்களில் தமிழ் நாடும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது. (கே.ஏ.எப். டெமாக்ரசி ரிப்போர்ட், 2005). இதனால் தமிழகத்தில் இதழ்களின் பெருக்கம் நாளுக்கு நாள் வளர்ந்தது. எழுதப் படிக்கத் தெரிந்த 1000 பேருக்கு 574 பிரதிகள் விற்பனையானதாக இந்திய அரசின் கணக்கெடுப்பு குறிப்பிடுகிறது. இந்தி பேசும் மாநிலங்களை விடத் தமிழ்நாட்டில் எழுத்தறிவு விகிதம் அதிகம். அதனால் வாசகர் பரப்பும் மிகுதி. வடக்கை விடத் தெற்கில் நாளிதழ் வாங்குவோரின் தொகையும் அதிகம். இதனைத் தமிழில் வெளியாகும் தினத்தந்தி நாளிதழும், குமுதம் சஞ்சிகையும் உறுதிப்படுத்துகின்றன. அண்மையில் வெளிவந்த வாசகர் கணக்கெடுப்பின் படி நாட்டிலேயே தினத்தந்தி மூன்றாவது இடத்தையும், குமுதம் நான்காவது இடத்தையும் வகிக்கின்றன என்பது தெரியவருகின்றது.

பொதுவாகவே மொழி இதழ்களில் வட்டாரப் படுத்தும் போக்கு புதிய கற்போருக்கு (Neo literates) வாசிக்கும் ஆர்வத்தை அதிகப்படுத்தும். இந்திய இதழ்களிடையே 1977களில் வட்டாரப்படுத்தும் (localization) முயற்சி தீவிரமானது. ஆனால் தமிழகத்தில் 1950களிலேயே அம்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. வட்டாரப் பேச்சு மொழி போன்றவற்றை இதழ்கள் பயன்படுத்தும் போக்கு தமிழ் இதழுலகில் பரவியது. தயாரிப்பு, உள்ளடக்கம், மொழி யாவும் வட்டார மயமாக்கப்பட்டன. வட்டாரப் படுத்துதலில் இன்றளவும் கவனம் செலுத்தப்பட்டு வருவதைக் காணமுடிகிறது. அதற்குத் தினமலரின் தலைப்புச் செய்திகளும், பக்கத் தலைப்புகளும் தகுந்த சான்றுகளாகின்றன. மத்திய அரசும்கூட நாளடைவில் தன் வசம் உள்ள மின்னணுச் சாதனங்களுக்கு வட்டார மயமாக்கலை அறிவுறுத்தியது (ஐ.என்.ஆர்.வி.இ., ப.103). விளம்பரங்களைப் பெறுவதற்கும் அதன் வழி இலாபத்தை ஈட்டுவதற்கும் வட்டாரமயமாக்கல் அடிப்படைத் தேவையாயிற்று. இன்றளவும் இணையத்தளத்தில் இடம்பெற்றுள்ள தலை சிறந்த இந்திய நாளிதழ்களின் வரிசையில்

தினத்தந்தி தொடர்ந்து இடம் பெறக் காரணம் அதன் வட்டார மயமாக்கல் முயற்சிக்குக் கிடைத்த சிறப்பாகும். தினத்தந்தியின் நிறுவனர் அமரர் சி.பா.ஆதித்தனார் பாமரரும் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் எழுதும் தமிழைத் தன் இதழ் பயன்படுத்த வேண்டும் என்ற முனைப்புடன் இருந்தது மட்டுமின்றி அதற்காகவே ஓர் இதழாளர் கையேட்டினையும் உருவாக்கினார் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. (சி.பா. ஆதித்தனார், **இதழாளர் கையேடு**).

வாசகர்கள்

தொடக்கக் காலத்தில் இதழ்கள் வாசகர்களைத் தேடிச் செல்லும் நிலைமை மாறி இன்று வாசகர்கள் இதழ்களைத்தேடும் நிலைமை உருவாகியுள்ளது. வாங்கும் சக்தி அதிகரிப்பு, கல்விப் பெருக்கம், தகவலறியும் ஆர்வம் போன்றவை வாசகர் பெருக்கத்திற்கு அடிப்படைக் காரணங்களாகும். வாசகர்களை நாட்டில் நிகழும் அரசியல் மாற்றங்கள், வளர்ச்சிகள், போக்குகள் ஆகியன பெரிதும் ஈர்க்கின்றன. நாளிதழ்களை நோக்கி வாசகர்கள் செல்வதற்கு இது மிக முக்கியக் காரணமாகிறது.

வாசகர்களில் தற்காலத்தில் பல வகையினர் உருவாகியுள்ளனர். வெகு ஜன இதழ், திரை இதழ், ஆன்மீக இதழ், சோதிட இதழ், சிற்றிதழ் போன்ற பலவகைப்பட்ட இதழ்களுக்கும் தனித்தனி வாசகர்கள் இருப்பதைக் காணமுடிகிறது.

பயணங்களில் இதழ்கள் படிக்கும் வாசகர்கள் தமிழ் நாட்டில் மிகுதியாகக் காணப்படுகின்றனர். தமிழ் நாட்டில் மிகுந்த அளவில் மக்கள் பேருந்துகளையும், இரயில்களையும் போக்குவரத்துக்குப் பயன்படுத்துகின்றனர். அவர்கள் தங்கள் பயணங்களில் இதழ்களைப் படித்துப் பயணப் பொழுதைக் கழிக்கின்றனர்.

விற்பனை

தமிழ் நாளிதழ்களின் விற்பனை விடுதலைக்குப்பின் குறிப்பிடத்தகுந்த அளவு உயர்ந்துள்ளது. இந்தியாவின் மிக அதிக விற்பனையைப் பெற்றுள்ள பத்து நாளிதழ்களுள் தமிழ் மொழி நாளிதழான தினத்தந்தியும் ஒன்று என்பது தமிழ் மொழி இதழியலுக்குப் பெருமை சேர்க்கும் தகவலாகும். (இணையத்தளத் தகவல்)

இதழ் வெளியிடுதல் தொண்டு நிலையிலிருந்து மாறித் தொழில் என்னும் நிலையை நோக்கி நகர்ந்த போதே இதழ்கள் விற்பனையில் கவனம் செலுத்தத் தொடங்கிவிட்டன. இந்திய அரசின் கணக்கெடுப்பின்படி தமிழ் நாளிதழ்களின் விற்பனை 1955ஆம் ஆண்டு முதல் 40% அதிகரித்துள்ளது. அதாவது 1952-1979 ஆகிய ஆண்டுக்கால இடைவெளியில் தமிழ் நாளிதழ்களின் விற்பனை நான்கு மடங்காக உயர்ந்துள்ளது என்பது அரசு வெளியிட்டுள்ள தகவல். 25 இலட்சம் பிரதிகள் விற்பனையாகிக் கொண்டிருந்த நாளிதழ்கள் இக்கால இடைவெளிக்குள் பதின் மூன்று கோடியே இருபத்தொன்பது இலட்சமாக அதிகரித்தன. (எஸ்.சி.பட் **இந்தியப் பத்திரிகைகள்** 1955 முதல், ப.47)

இதழ்கள் முகவர் முறையைக் கையாண்டு வெற்றிகரமாக விற்பனையைச் செய்யத் தொடங்கின. தற்போது மிகுதியாக இம்முறையே நடைமுறையில் உள்ளது. தமிழ் இதழியல் உலகில் 'சுதந்திரச் சங்கு' முகவர் முறையைப் புகுத்தியது. தினத்தந்தி பேருந்து மூலம் நாளிதழ் விற்பனையைச் செய்ய முனைந்து விற்பனைப் பரப்பைப் பெருக்கியது. தினமலர், ஆனந்த விகடன் போன்ற இதழ்களும் குறிப்பிடத்தக்க விற்பனை உத்திகளைக் கையாள்கின்றன.

இதழ் வாணிகம்

தமிழ் இதழியல் உலகில் ஏறக்குறைய முதல் ஒரு நூற்றாண்டுக் காலம் வெளிவந்த இதழ்களின் போக்கிலிருந்து விடுதலைக்குப் பிற்பட்ட காலத்தைய இதழ்கள் மாறுபட்டன. விடுதலைக்கு முற்பட்ட காலத்தில் இதழ்ப்பணி தூய்மையான தொண்டாகக் கருதப்பட்டது. இதழ்கள் சீரிய குறிக்கோள்களுடன் வெளிவந்து மக்கட் சமுதாயத்திற்கு நல்லனவற்றை எடுத்துரைக்க எண்ணின.

> பத்திரிக்கைத் தொழிலானது கேவலம் கேள்வி கேட்பாரற்ற ஒரு வியாபாரத் தொழில்போல் நினைக்கப்பட்டு கல்வியறிவற்ற வெறும் கைக்கொள்ளக் கூடிய ஒரு சாதாரணத் தொழில் அன்று

என்று கூறுகிறார் குருமலை சுந்தரம் பிள்ளை.

மக்களுக்கு அறிவூட்டலே இன்றியமையாதது என்று இதழ்கள் கருதினவேயன்றி இதழ் வெளியீட்டின் வாயிலாக

அவை வருவாயை எதிர் நோக்கவில்லை. மேலும் இதழ் வெளியிடுவதால் ஏற்படும் பொருள் இழப்பையும் அவை பொருட்படுத்தவில்லை.

மேற்கண்ட நிலை விடுதலைக்குப்பின் அறவே மாறியது. இதழ் வெளியீட்டால் பணம் தேடும் முயற்சி தோன்றியது. சுதந்திரப் போராட்டக் காலத்தில் இதழ்கள் இலாபத்தைக் கருதாது கொள்கைகளை வலியுறுத்துவதற்காகவும், எடுத்துரைப் பதற்காகவும் வெளிவந்தன. ஆயின் விடுதலைக்குப்பின் இதழ்கள் வெளியிடுதல் நல்ல வருமானம் தரத் தக்க தொழில் என்ற நிலை தோன்றியது. பல பெரிய குடும்பங்களின் மிகப் பெரிய சொத்துக்களாக இதழ்க்கூடங்கள் மாறின. இந்தியா முழுவதிலும் உருவான இப்போக்கு தமிழ் இதழியல் உலகிலும் புகுந்தது. மிகப்பெரிய முதலீட்டில் நல்ல வருமானம் தரத்தக்க தொழிலாக இதழ் வெளியிடுதலை நடத்தலாம் என்பது மிகத்தெளிவாக உணரப்பட்டது, மட்டுமின்றி நடைமுறைப்படுத்தப்பட்டது.

போக்குவரத்து வசதிகள்

விடுதலைக்கு முற்பட்ட காலத்தில் இதழ்கள் அஞ்சலகத்தையும், இரயில்வே துறையையும் மட்டும் நம்பியே வாழ்ந்தன. இதழ்களை உருவாக்கி அச்சிட்டு வெளியிடுவது ஒரு சிரமம் என்றால் அவற்றை அனுப்புவது அதை விடப்பெரிய சிரமமாக இருந்தது. விடுதலைக்குப் பின்னரும்கூடச் சிறிது காலம் வரை இதே நிலையே இருந்தது. ஆயின் விடுதலை பெற்ற தாய்நாடு வளர்ச்சிப் பாதையில் நுழைந்த காலக்கட்டத்தில் சாலைப் போக்குவரத்து வசதிகள் மிகுதியாயின. படிப்படியாகத் தேசிய நெடுஞ்சாலைகளும், மாநிலத்தின் பெருநகரங்களுக்கிடையேயான சாலை வசதிகளும் மேம்படுத்தப்பட்டன. 300 முதல் 400 கி.மீ. தூரத்திற்குள் இருக்கும் இடங்களுக்குச் சாலைகளின் வழி இதழ்கள் அனுப்பப்படும் நிலை உருவானது. சாலைப் போக்குவரத்து வசதிகளின் மேம்பாட்டினால் மாநிலத் தலைநகரங்களிலும், பெரிய நகரங்களிலும் அதிகாலைப் பொழுதிலேயே இதழ்கள் வாசகர்களுக்குக் கிடைக்கும் நிலை தோன்றியது. மாநிலத் தலைநகரத்திலிருந்து சற்றுத் தொலைவில் உள்ளவர்க்குச் சற்று நேரம் கழித்து இதழ்கள் கிடைத்தன.

இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அதிகமான பேருந்துப் போக்குவரத்து நிகழ்கிறது. நன்கு மேம்படுத்தப்பட்ட

சாலைப்போக்குவரத்தினால் வேன்கள் மூலமும், தொடர் வாகன வசதிகளின் வழியும் இதழ்கள் பரவலாக்கப்படுகின்றன. இதனால் சில்லறை விற்பனையும் மிகுதியாகிறது என்பது குறிப்பிடத் தகுந்த கருத்தாகும்.

வெளியீடு

விடுதலைக்குப் பின்னர் இதழ் வெளியீட்டில் சிக்கல்கள் குறைந்துள்ளன. இதழ் வெளியிடுதலின் அடிப்படைத் தேவையாகிய இதழ்க்காகிதம் (News Print) தட்டுப்பாடு இல்லாமல் கிடைத்து வருவது குறிப்பிடத்தக்கது. இதழ் வெளியீட்டின் இன்றியமையாத் தேவையாகிய இதழ்க்காகிதம் தடையின்றிக் கிடைப்பதனால் நாள், பருவ இதழ்களின் பெருக்கம் மிகுதியாயிற்று. அது மட்டுமின்றி இதழ் வெளியீடு வணிக மயமானதால் நிருவாகங்கள் வருமானப் பெருக்கத்திற்காக முனைப்புடன் செயல்படுகின்றன. வருமானப் பெருக்கம் விற்பனை முயற்சிகளுக்கு ஆதாரமாக அமைகின்றது. ஆகாயவழி விற்பனை இதழ் உலகில் குறிப்பிடத் தகுந்த மாற்றமாகும். மேலும் செய்தித்தாளுக்கு விமானக் கட்டணச் சலுகை என்பதும் இதழ் வெளியீட்டை ஊக்கப்படுத்தும் காரணமாகும்.

ஆசிரியர்

இந்திய விடுதலைக்கு முற்பட்ட காலத்துடன் ஒப்பிடுகையில் இந்திய விடுதலைக்குப் பிற்பட்ட நாள்களில் இதழ் ஆசிரியர்களின் நிலையில் பெருத்த மாற்றம் ஏற்பட்டது. முன்னாட்களில் இதழ்களில் ஆசிரியரின் நிலைப்பாடு இன்னது என்பதனை வாசகர்கள் அறிய முடிந்தது. ஆனால் இன்றைய நிலையில் ஆசிரியர் யார் என்றே அறிய முடியாத நிலைமையும் உள்ளது. ஆசிரியரின் நிலை, அவர் சுதந்திரமாகச் செயல்படுதல், அவருடைய கருத்துகளை எழுதுதல், ஆகியவற்றில் ஒரு பொதுவான வீழ்ச்சி தெரிகிறது. குறிப்பாக நாளிதழ்களில் இப்போக்கினை மிகுதியும் காணமுடிகிறது. இதற்கு அடிப்படையான காரணமாக இருப்பது நிருவாகத்தின் ஆதிக்கம் எனலாம். இதழ்களின் உரிமையாளர்கள் பலநிலைகளில் திரைக்குப் பின்னால் இருந்து இயங்கும் போக்கு உள்ளது. இதழ்கள் வணிக நிறுவனங்கள் போல் இயங்குகின்றன. அவற்றில் விற்பனையை அதிகரிக்க வேண்டிய பொறுப்பினராக ஆசிரியர் கருதப்படுகிறாரே தவிர அவருடைய ஆளுமைக்கு அங்கு இடம்

இருப்பதில்லை. இதழ் நிருவாகம் ஒதுக்கும் பணியினை ஆசிரியர் செய்ய வேண்டுமென்று மட்டுமே எதிர்பார்க்கப் படுகிறது. இத்தகைய சூழ்நிலைகளால் இதழாசிரியர்களின் நிலை வீழ்ச்சி அடைந்திருப்பதாகக் கருத வாய்ப்புண்டு. சில இதழ்களில் ஆசிரியரின் பெயருக்கு முன்னால் இதழ் நிறுவனத்தின் தலைமை நிருவாகியின் பெயர் இடம் பெற்றிருப்பதே இதற்குச் சான்றாகும்.

இதழ்ச் சுதந்திரம்

விடுதலைக்கு முன்பு தேச சுதந்திரமே பெரும்பான்மை இதழ்களின் குறிக்கோளாக இருந்தது. தற்போது அது மாறிவிட்டது. விடுதலைக்குப் பின் இதழ் வெளியிடுதல் ஒரு தொழிலாக மாறி நின்று நிலைத்துவிட்டது. இதழ்க்கூடம் (Press) ஒரு மிகப் பெரிய மூலதனத்தை முதலீடு செய்து பெரிய இலாபம் தரும் தொழில் என்னும் நிலைமை உருவாகியுள்ளது.

விடுதலைக்குப் பின்னர் இதழ்கள் மிகச் சுதந்திரமாகச் செயல்படுகின்றன. பிரதிகளைப் பறிமுதல் செய்தல், அச்சகத்தை மூடுதல் போன்றன விடுதலைக்கு முந்தைய காலத்தில் அன்றாட நிகழ்வுகளாக இருந்தன. பாரதியார் பாடல்களை வெளியிடுவதற்குத் தடை விதித்த நிலை இருந்ததை அறிய முடிகிறது. (ரா.அ. பத்மநாபன், *பாரதி புதையல்*, பக்.14-15). ஆனால் சுதந்திரத்திற்குப் பின் இதழ்கள் தம் விருப்பத்திற்கேற்பத் தகவல்களைத் தரும் நல்ல நிலைமை உருவாகி உள்ளது. அரசின் போக்கினைக் கண்டிக்கும், எதிர்க்கும், ஆலோசனை கூறும் பல கருத்துகளை இதழ்கள் வெளியிடத் தயங்குவதில்லை. ஜனநாயக நாட்டின் நான்காவது தூண் எனக் கருதப்படும் இதழ்த்துறை அனுபவித்து வரும் சுதந்திரப்போக்கு அரசிற்கும், மக்களுக்கும் வழிகாட்டி வருகிறது. ஆட்சியாளர்களின் விருப்பு வெறுப்பை மீறியும் தகவல்களும், கருத்துகளும் தயங்காமல் வெளியிடப்படுகின்றன. இதனால் நாட்டின் நலன் பாதுகாக்கப்படுவது மட்டுமின்றி இதழ்களும் குடியரசில் தத்தம் கடமையைச் சரிவரச் செய்வதற்கான வாய்ப்பும், சூழலும் பெருகி உள்ளன.

விடுதலைக்குப்பிறகு இதழ்கள் எழுத்துரிமையை முழுமையும் அனுபவிக்கத் தொடங்கின. 1950இல் சென்னையிலிருந்து வெளிவந்த தமிழ்நாடு என்ற இதழ் "Cross roots" என்ற இதழ் தமிழ் நாட்டுக்குள் நுழையக்கூடாது என்று

நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. அவ்வழக்கில் "பத்திரிக்கைகளின் பிரதிகள்" தடையின்றித் தாராளமாக வெளிவர வேண்டும், என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது என்பதை அறிய முடிகிறது. இது விடுதலை இந்தியாவில் காணப்படும் இதழ்ச் சுதந்திரத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும். விடுதலைக்குப் பின்னர்த் தவிர்க்க முடியாத கட்டாயமான சூழ்நிலைகளில் மட்டுமே இதழ்கள் கட்டுப்படுத்தப்பட்டன. 1962இல் நிகழ்ந்த சீனப்படையெடுப்பின் போதும், 1971இல் பாகிஸ்தான் போரின் போதிலும் கூட இதழ்கள் தணிக்கைக்கு ஆட்படவில்லை. ஆயின் 1975 மார்ச் முதல் 1977 வரை அமுலில் இருந்த உள்நாட்டு அவசரநிலைப் பிரகடனத்தின் போது இதழ்கள் கடுமையான தணிக்கைக்கு உள்ளாயின என்பது குறிப்பிடத்தகுந்தது. தமிழகத்தில் ஆனந்த விகடனின் ஆசிரியர் பாலசுப்பிரமணியனின் கைது, நக்கீரனின் ஆசிரியர் கோபாலின் கைது, இந்து இதழ்க் கூடத்தில் நடந்த சோதனை போன்றன இதழ்ச் சுதந்திரத்திற்கு விடுக்கப்பட்ட சவால்கள் ஆகும். இந்நிகழ்வுகள் யாவும் இதழ்ச் சுதந்திர உரிமை மீறல்களாகக் கருதப்பட்டு, கண்டனத்திற்கும் ஆளாயின. இன்றைய சூழ்நிலையில் இதழ்கள் "பொது ஒழுங்கு" நெறிமுறைக்குக் கட்டுப்பட்டு, செய்திகளை, தகவல்களைத் தடையின்றி வழங்கும் சூழல் உள்ளது.

செய்தி நிறுவனங்கள்

இதழ்களின் வளர்ச்சிக்குச் செய்தி நிறுவனங்களின் தோற்றம் ஒரு முக்கிய எடுத்துக்காட்டு ஆகும். மேலை நாடுகளில் செய்தி நிறுவனங்கள் தொடங்கப்பட்டதை முன்மாதிரியாகக் கொண்டு இந்தியச் செய்தி நிறுவனங்கள் தோன்றின. இந்திய விடுதலைக்குப் பின் அஸோசியேட்டட் பிரஸ் (Associated Press of India), யுனைடெட் நியூஸ் (United News of India, 1961), பிரஸ் டிரஸ்ட் (Press Trust of India, 1947), ஹிந்துஸ்தான் சமாச்சார் (Hindustan Samachar, 1948), சமாச்சார் பாரதி (Samachar Bharathi, 1966) ஆகிய நிறுவனங்கள் தோன்றின.

இந்தியச் செய்தி நிறுவனங்களின் தந்தை என்றழைக்கப்படும் கேசி. ராய் என்பவர் அசோசியேட்டட் பிரஸ், பிரஸ் ட்ரஸ்ட் ஆகிய இரு செய்தி நிறுவனங்களையும் தோற்று வித்த முன்னோடி ஆவார். விடுதலை இந்தியாவில் பிடிஐ. 1949இல் தனது தனித்த சேவையைத் துவக்கியது. அதன் டெலிபிரின்டர்

சேவை 30,000 கி.மீ. தொலைவுக்கு விரிவுபடுத்தப்பட்டது. இந்திய அரசின் கடன் உதவியால் தலைநகரில் உள்ள பார்லிமென்ட் தெருவில் பி.டி.ஐ. தனக்கெனத் தனிக்கட்டடத்தைக் கட்டியது. 1949 பிப்ரவரி மாதத்தில் தன் பணியினைத் துவக்கிய பி.டி.ஐ. மிக விரைவில் நல்ல வளர்ச்சியை எட்டி அகில உலகச் செய்தி நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் அளவிற்கு நன்கு வளர்ந்தது. 1949இல் 30 தலைமை மையங்களுடன் தன் சேவையைத் தொடங்கிய பி.டி.ஐ. 1975இல் 75 மையங்களை நாட்டில் பல்வேறு பகுதிகளில் நிறுவியது. 1971இல் 1,52,00,000 ரூபாயாக இருந்த இதன் வருவாய் 1975இல் 190 கோடி ரூபாயாக உயர்ந்தது. தனக்கெனத் தனித் தொலைக்காட்சிச் சேவையைப் பெற்றுள்ள ஒரே செய்தி நிறுவனமாகப் பி.டி.ஐ. விடுதலை இந்தியாவில் வீறுடன் வளர்ந்தது.

1961இல் 13 சந்தாதாரர்களுடன் தொடங்கப்பட்ட யு.என்.ஐ. செய்தி நிறுவனம் படிப்படியாக வளர்ந்து (1964-50, 1967-109, 1971-333) பத்தாண்டுகளுக்குள் 43 மையங்களில் தன் சேவையைத் தொடர்ந்தது. பத்தாண்டுகளின் நிறைவில் 54.31 இலட்சம் ரூபாயாக இருந்த இதன் வருமானம் 1975இல் 87.14 இலட்சம் ரூபாயாக உயர்ந்து, அடுத்த பத்தாண்டுகளில் 1985இல் 3.90 கோடியை எட்டியது. ஏறக்குறைய 20 ஆண்டுகளில் இதன் வளர்ச்சி 15 மடங்கு எனக் கணக்கிடப்பட்டுள்ளது. செய்திகளை மிக விரைந்து அளிக்கும் செய்தி நிறுவனம் என்ற பெயரைப் பெற்ற யு.என்.ஐ. 1980-84களில் கணினி மயமாக்கப்பட்டது. மேலும் வட்டார மொழிகளில் தன் சேவையைப் புகுத்திய செய்தி நிறுவனம் என்ற பெருமையும் இதற்கு உண்டு.

இதழியல் சட்டங்கள்

இந்திய நாட்டில் அரசியல் நிருணயச் சட்டத்தின் 19(2) விதியின்படி இதழின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்த சட்டங்கள் கொண்டு வர அரசுக்கு அதிகாரம் உண்டு. இந்திய விடுதலைக்கு முன் 1979இல் வெல்லெஸ்லி பிரபு முதன் முதலில் இதழ்களுக்கான ஒழுங்கு முறையினைச் சட்டமாகக் கொணர்ந்தார். அதில் அவர் ஆறு விதிமுறைகளை வகுத்தார். அதன்படி ஒவ்வொரு இதழிலும் அச்சிடுவோர், ஆசிரியர், உரிமையாளர் பெயர்களை வெளியிடுதல், அரசின் தலைமைச் செயலாளரிடம் தங்களது முகவரியைத் தெரிவித்தல்,

அச்சிடப்படும் செய்திகளைத் தலைமைச் செயலரிடம் காட்டி ஒப்புதல் பெறுதல் ஆகியன சட்டமாக்கப்பட்டன. மேலும் ஞாயிற்றுக் கிழமைகளில் இதழ் வெளியிடக் கூடாது என்பதும், அரசுச் செயலாளர் இதழ்களின் கட்டுப்பாட்டாளராக இருப்பார் என்றும் சட்டமாக்கப்பட்டது. இவ்விதிகளை மீறுவோர் நாடுகடத்தப்படுவர் என்ற தண்டனையும் வகுக்கப்பட்டது. இந்த முதல் சட்டத்தைத் தொடர்ந்து செய்தித்தாள் அவசரச் சட்டம், இந்தியன் பீனல் கோடு, பத்திரிக்கைகள் மற்றும் புத்தகங்கள் பதிவுச் சட்டம்,1867, தாய்மொழிப் பத்திரிக்கைச் சட்டம், குற்றவியல் சட்டம், இந்திய அலுவலக இரகசிய காப்புச் சட்டம், இந்தியப் பத்திரிக்கைகள் சட்டம் ஆகிய சட்டங்கள் வகுக்கப்பட்டன.

விடுதலை இந்தியாவில் விடுதலைக்கு முந்தைய இதழியல் சார்ந்த அடக்குமுறைச் சட்டங்கள் அகற்றப்பட்டன. இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 19 (1A) பிரிவின்படி இந்திய ஜனநாயக நாட்டில் வாழும் எல்லா மக்களுக்கும் எழுத்துரிமையும், பேச்சுரிமையும் உண்டு என்பது உறுதியாக்கப்பட்டது. இந்த அடிப்படையில் விடுதலை இந்தியாவில் புதிய சட்டங்கள் உருவாக்கப்பட்டன. அவற்றின்படி நாட்டின் இறையாண்மை, ஒருமைப்பாடு, பாதுகாப்பு, சமுதாய ஒருங்கிணைப்பு, அயல்நாட்டு நட்புறவு ஆகியன பேணிப்பாதுகாக்கப்பட வேண்டும். நீதிமன்ற அவதூறு, இழிவான செய்தி வெளியீடு, அவதூறுச் செய்தி வெளியீடு, குற்றத்திற்குத் துணைபோதல், ஆகியன தடுக்கப்பட்டன. இதன் அடிப்படையில் இந்திய விடுதலைக்குப் பின் அவமதிப்புச் சட்டம் (Law of Defamation), நாடாளுமன்றச் சட்டமன்ற அவமதிப்புத் தடைச் சட்டம் (Contempt of Parliament & Legislature), நீதிமன்ற அவமதிப்புத் தடைச் சட்டம் (Contempt of Courts Act, 1971), பதிப்புரிமைச் சட்டங்கள் (Copy right Act, 1957), அலுவலக இரகசியப் பாதுகாப்புச் சட்டம், இந்தியத் தொலைபேசிச் சட்டம் (The Indian Telegraphy Act, 1885), இந்திய அஞ்சலகச் சட்டம் (Indian Post Office Act, 1898), உழைக்கும் பத்திரிக்கையாளர் சட்டம் (The Working Journalist Act), செய்தித்தாள் மற்றும் புத்தகப் பதிவுச் சட்டம் (The Press & Registration of Books Act, 1867), இந்தியப் பத்திரிக்கை (அவசரக் கால உரிமைகள்) சட்டம், (Indian Press (Emergency Power) Act, 1931), மருந்து, தந்திர

நிவாரணச் சட்டம் (The Drug and Magic Remedies - Objectionable Advertisement Act), குற்றவியல் சட்டங்கள், பரிசுப் போட்டிச் சட்டம் (The Prize Competition Act), ஆபாச வெளியீட்டுத் தடைச் சட்டம் (Obsene Prohibition Act) இளைய சமுதாயத்திற்குத் தீங்கு பயக்கும் வெளியீட்டுத் தடைச் சட்டம் (Young Persons Harmful Prohibition Act), ஆட்சித் துரோகச் சட்டம் (Sedition Act), செய்தித்தாள் விலை பக்க நிருணயச் சட்டம் (News Paper Prize and Page Act, 1956), பத்திரிக்கைக்குழுச் சட்டம் (Press Council Act), காவல் துறைச் சட்டம் (The Police Incitement of Disaffection Act), ஆகியன இதழ்களுக்கென வகுக்கப்பட்ட சட்டங்களாகும்.

வருவாய்

விடுதலைக்கு முந்தைய காலத்தில் சந்தாதாரர்களை மட்டுமே நம்பியிருந்த இதழ்கள் அந்நிலைமையில் இருந்து விடுபட்டு விளம்பரங்களின்வழி வருவாயைத்தேடிக் கொள்ளும் புதிய போக்கு உருவாகியுள்ளது. 1951இல் எடுக்கப்பட்ட கணக்கின்படி இதழ்களின் விளம்பர வருவாய் 7 கோடி ரூபாய் என்று அரசு அறிக்கை தெரிவிக்கிறது. காலம் செல்லச் செல்ல இது பன்மடங்கு பெருகியுள்ளது. 1993-94 காலக்கட்டத்தில் நாட்டின் அனைத்துத் தகவல் தொடர்பு சாதனங்களின் மூலம் விளம்பரத்திற்காகச் செலவழிக்கப்பட்ட தொகை 2,687.5 கோடி ரூபாய் ஆகும். இதில் இதழ்களின் பங்கு 1,773.75 கோடி ரூபாய். இது 250 மடங்கு வளர்ச்சி என்று குறிப்பிடப்படுகிறது.

டி.ஏ.வி.பி. அலுவலகப் பட்டியலின்படி 1970இல் விளம்பரம் செய்யத்தகுதி பெற்ற நாளிதழ்கள் 2,300. அவை 2000இல் 5,300ஆக உயர்ந்தன.

சிறப்பு இதழ்களும், இணைப்புகளும்

கல்வி நிறுவனங்களின் பெருக்கமும், கற்போரின் எண்ணிக்கையும் மிகுதியானதால் இதழ்களின் போக்கிலும் பல மாற்றங்கள் உருவாயின. வாசகர்கள் பெருகப் பெருக அவர்களின் தேவைகளை நிறைவு செய்ய வேண்டிய அவசியம் இதழ்களுக்குத் தேவைப்பட்டது. அதனால் பலதரப்பட்டவர்களுக்கான இதழ்களைத் தனித்தனியாக வெளியிடும் முறை மட்டுமல்லாது ஒரு நிறுவனமே தொடர் வெளியீடுகளாகப் பல்வேறு பதிப்புகளை வெளியிடும் வழக்கமும் தோன்றியது. மேலும்

இளைஞர், பெண்கள் சிறுவர், மாணவர் எனத் தனித்தனி வகை வாசகர்களுக்காகச் சிறப்பு இதழ்கள் வெளியிடும் முறை தொடங்கியது. ஒரு சஞ்சிகைக்கு ஈடான அளவில் கூடுதல் சிறப்புப் பக்கங்களை நாளிதழ்கள் ஞாயிற்றுக் கிழமைகளில் வெளியிடும் புதிய போக்கும் உருவாகியுள்ளது.

எல்லாச் செய்திகளையும், எல்லா இதழ்களும் அதாவது நாளிதழ்கள், பருவ இதழ்கள் ஆகியன வெளியிடும் வழக்கம் தோன்றியுள்ளது. அச்செய்திகளையும் தகவல்களையும் துல்லியமாகவும் திறமையாகவும் வெளியிடுவதற்கென்று சிறப்பு நிருபர்களும் தற்காலத்தில் பணியமர்த்தப்படுகிறார்கள்.

இன்றைய காலக்கட்டத்தில் துறை வாரியான இதழ் வெளியீடு குறிப்பிடத்தக்க புதிய போக்காகும். இதழ் வெளியிடாத துறையே இல்லை என்று கூறலாம். இலக்கியம், அறிவியல், வரலாறு, வணிகம், மேலாண்மை, ஆள்வினை, விளையாட்டு, மருத்துவம், சோதிடம், புகைப்படம், திரைப்படம், பொறியியல் போன்ற அனைத்துத் துறைகளுக்கும் தனித்தனியான இதழ்கள் வெளிவந்துள்ளன.

அரசியலும் திரைப்படமும்

தமிழ் இதழுலகம் அரசியலாலும் சினிமாவாலும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. இந்த இரண்டையும் தமிழ் இதழ்களிலிருந்து பிரித்து எடுத்துவிட்டால் அங்கு எஞ்சியிருப்பது பெரும் வெற்றிடமாக இருக்கக் கூடும். அரசியல் செய்திகள் தமிழ் இதழ்களில் மிகுந்த பரபரப்பையூட்டும் வகையில் வெளியிடப்படுகின்றன. 1976 ஜனவரியில் அவசரநிலை நாட்டில் அறிவிக்கப்பட்டபோது தமிழ் இதழ்கள் மத்திய அரசுக்குப் பெரும் சவாலாக இருந்தன. 1975இல் மத்திய அரசு செப்டம்பர் மாதத்தில் ஒன்பது இதழ்களுக்குத் தடை விதித்தது. அதில் மூன்று தமிழ் இதழ்கள் என்பது குறிப்பிடத் தகுந்த தகவலாகும் (ராபின் ஜெஃப்பிரி, இந்தியச் செய்தித்தாள் புரட்சி, ப190).

பல்வேறு அரசியல் காரணங்களால் அரசியல் செய்தி வெளியீட்டால் பல தமிழ் இதழ்கள் பல்வேறு கட்டங்களில் சிக்கல்களைச் சந்தித்ததும் இங்கு நினைவுகூரத்தக்கது. துக்ளக் இதழின் மேல் நிகழ்ந்த தாக்குதல், அரசியல் தொடர்பான அட்டைப்பட வெளியீட்டால் ஆனந்த விகடனின் ஆசிரியர்

பாலசுப்பிரமணியன் கைது, நக்கீரன் கோபால் சந்தித்த சிக்கல்கள் போன்றன அரசியல் செய்தி வெளியீடுகளாலும், செய்தி வெளியீடுகளில் அரசியல் தலையீடு நிகழ்ந்ததாலும் ஏற்பட்டவையே. 1992-1996 காலக்கட்டத்தில் முதல்வர் பொறுப்பில் இருந்தவரை விமரிசனம் செய்த இதழ்கள் அக்கட்சிக்காரர்களால் தாக்கப்பட்டன.

இதழ்களில் மிகையான இடத்தைத் திரைப்படத் தகவல்கள் பற்றிக் கொள்கின்றன. இதழ்களின் உள்ளடக்கங்களில் பல்வேறு வகைகளில் திரைப்பட உலகச் செய்திகள் இடம்பெறுவது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. தமிழ் இதழ்களின் இந்தப் போக்கு அண்மைக் காலத்தில் அரசியலையும் திரைப்படத்தையும் இணைத்துப் பல மாற்றங்களையும் விளைவுகளையும் உருவாக்கி இருக்கிறது எனலாம். வாசகர்களுக்கிடையே திரைப்பட ஆர்வத்தைத் தூண்டி வளர்த்துச் சினிமாவுக்குச் செல்லும் பழக்கத்தை அவை வளர்த்தன என்று கருதப்படுகிறது.

நவீனத் தொழில் நுட்பம்

தற்போது தகவல் தொடர்புத் துறையில் நவீனத் தொழில்நுட்பம் மிகுதியாகப் புகுந்துவிட்டது. 1970களின் இறுதியில் கணினியும், ஆஃப்செட் அச்சகங்களும் பயன்படுத்தப்பட்டன. கணினியின் வருகை பல மாற்றங்களை உருவாக்கியிருக்கிறது என்று சொல்லுவதைவிட அச்சுவழிச்சாதனப் போக்கையே அடியோடு புரட்டிப் போட்டிருக்கிறது என்பதே உண்மை. மிக விரைவாகத் தகவல் பெறுவதற்குப் பல சாதனங்கள் இப்பொழுது கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன. உலக அளவில் தொலைக்காட்சிப் பெட்டிகளைவிடக் கணினியே அதிக அளவில் விற்பனையாகிறது என்று அறிய முடிகிறது. கணினியின் இயங்கு வேகத்திறன் இந்தியா போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் மிகவும் அதிகரித்துள்ளது. தகவல்களைப் பெறுவதற்கு S.T.D., I.S.D. போன்றன பேருதவி புரிகின்றன. தவிரவும் ஃபேக்ஸிமிலி தகவல் தொடர்பு (Facimile communication), மின் அஞ்சல் (Electronic mail), மின்னணு இதழ் (Electronic Journal), தொலைதூரக் கருத்தரங்கம் (Tele-conferencing), இணையம், பேஜர் கருவி, செயற்கைக் கோள் ஆகியன தகவல் பெறுவதில் பெரும் பங்கு

வகிக்கின்றன. இ-மெயில் மூலம் உலகின் எந்தப் பகுதிக்கும் தகவலை அனுப்பவும், பெறவும் முடியும். இ-மெயில் பணிக்கு இந்தியாவில் தற்போது சிர்னட், எர்னட் ஆகிய அமைப்புகள் உள்ளன. மின்னணு இதழ்கள் தற்போது மிகப்பரவலாகப் பெருகியுள்ளன. மத்திய கணிப்பின் மூலம் பல்வேறு ஆசிரியர்களின் படைப்புகள் தொகுக்கப்பட்டு ஒரு குறிப்பு மொழியின் உதவியுடன் சந்தாதாரர்களுக்கு இவை பயன்பட்டு வருகின்றன. பெரும்பாலும் அனைத்து இதழ்களும் மின்னணு முறையில் வெளியிடப்படுகின்றன. சிடிரோம் என்பதன் மூலம் குறைந்த செலவில் தகவல் அனுப்ப, பெற வாய்ப்பு உள்ளது. இணையம் என்பது உலகெங்கிலும் வேகமாகப் பரவித் தகவல் பெற, வழங்கப் பெருமளவில் உதவுகிறது. இணையத்தில் பல இதழ்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. தினமணி, ஆனந்த விகடன், குமுதம் போன்றவற்றைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

ஃபேக்ஸிமிலி தகவல் தொடர்புப் புகைப்படங்கள், அச்சடிக்கப்பட்ட படங்கள் ஆகியவற்றை விரைவில் அனுப்புவதற்கு வசதியாக உள்ளது. படங்கள் ஒலி அலைகளாக மாற்றப்பட்டுப் பின்னர்ப் படங்களாக மீளவும்பெறப்பட்டு வெளியிடப்படுகின்றன. இதனால் புகைப்பட வெளியீடு மிகுந்த வளர்ச்சியினை எட்டியுள்ளது. கணநேரத்தில் பல்லாயிரக் கணக்கான பிரதிகளை வெளியிடுதல், செய்தி நிறுவனங்களின் பணி, புகைப்பட வெளியீடு, ஆஃப்செட் பிரிண்டிங் முறை போன்ற புறக்கணிக்க முடியாத நவீனத் தொழில்நுட்ப அச்சுவழிச் சாதனத்தின் பெருக்கத்திற்கும், வளர்ச்சிக்கும் மிகப்பெரும் காரணங்களாக விளங்குகின்றன.

நாளிதழ்கள்

தினமணி

ஒரு நிலைத்த வாசகர் வட்டத்தைப் பெற்றுவிட்டு 1934ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் நாளிதழ் என்ற பெருமையைத் தினமணி பெற்றிருக்கிறது. அதன் ஆசிரியர் பொறுப்பைப் பெற்றிருந்த மிகச் சிறந்த இதழாளர் ஏ.என்.சிவராமன் தினமணியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தவர். விடுதலைக்கு முன்னர்த் தோன்றிய தினமணி தேசப்பற்றையும், தியாக உணர்வையும், உரமிட்டு வளர்த்தது. விடுதலைக்குப் பின்னர்த் தினமணியின் மாற்றத்திலும் உள்ளடக்கங்களிலும் பல மாற்றங்கள் உருவாயின. செய்திகளைத் துல்லியமாகவும், நடுநிலைமையுடனும் தரும் நாளிதழ் என்னும் தனிச் சிறப்பினைக் கொண்டு வெளிவந்து கொண்டிருக்கும் தினமணி காலத்தின் கட்டாயத்தினால் தனக்குள் மாற்றங்களை உருவாக்கிக் கொண்டது. வெள்ளிமணி, சிறுவர் மணி போன்ற இணைப்புகளைத் தனியாக வெளியிட்டு வருகிறது. இளைஞர்கள், பெண்கள் போன்ற பலதரப்பு வாசகர்களையும் கவரும் வகையில் தனித்தகவல்களை அளித்து வருகிறது. தமிழ் நாளிதழ்களில் தலையங்கம் வெளியிடும் தனிப்பெருமையைப் பெற்றிருப்பது தினமணியே. அதுமட்டுமன்றித் தினமணியின் இரண்டாவது பக்கத்தில் மிகவும் தரமான கட்டுரைகள் வெளியிடப்படுகின்றன. நாட்டு நடப்புகள் மக்கள் மன்றத்தில் விவாதிக்கப்படவேண்டிய முக்கிய நிகழ்வுகள், பொதுவான சிந்தனைக்குரிய கருத்துகள் போன்றவற்றை அக்கட்டுரைகள் திறம்பட எடுத்துரைக்கின்றன. பிற நாளிதழ்களினின்றும் தினமணியின் மொழிநடை வேறுபட்டு அமைகின்றது. அதன் நம்பகத்தன்மையும் வாசகரிடையே மிகுந்து காணப்படுகிறது.

தினமணியின் வாரப்பதிப்பாக வெளிவந்த தினமணி கதிரும் மக்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்று விளங்கிய ஓர் இதழாகும்.

தினத்தந்தி

தமிழகம் தாண்டிப் பிற மாநிலங்களிலும் வெளிவரும் தமிழ் நாளிதழ் என்னும் தனிப் பெருமையைப்பெறும் தினத்தந்தி

விடுதலைக்கு முன்னரும் பின்னரும் பல சாதனைகளை நிகழ்த்தி உள்ளது. தமிழகத்தில் பல்வேறு நகரங்களில் தனது பதிப்புகளைப் படிப்படியாக வெளியிட்டது.

1942	-	மதுரை
1948	-	சென்னை
1954	-	திருச்சி
1963	-	கோயம்புத்தூர்
1967	-	திருநெல்வேலி
1969	-	வேலூர்
1972	-	கடலூரர்
1976	-	சேலம்
1979	-	பெங்களூர்
1991	-	புதுவை
1994	-	ஈரோடு
1996	-	நாகர்கோவில்
1999	-	தஞ்சாவூர்
2001	-	திண்டுக்கல்

இதழ்க்காகிதம்

'தினத்தந்தி' தனக்கெனக் காகிதத்தைத் தயாரிக்கும் முயற்சியை மேற்கொண்டமை, தமிழ் இதழியல் வரலாற்றில் மிக முக்கிய நிகழ்வாகும். 1962இல் தினத்தந்தி திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள அரிய நாயகிபுரத்தில் 'சன் காகித ஆலையை' நிறுவியது.

தினத்தந்தி பல்வேறு இடங்களிலிருந்து நாளிதழ்களை வெளியிடத் தொடங்கிய காலக்கட்டத்தில் வெளியீட்டிற்கு மூலாதாரமான காகிதத்தைத் (News print) தானே தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. 1940களில் பல மையங்களில் இருந்து வெளியிடப்படும் புதிய முயற்சியைத் தினத்தந்தி செய்தது. இந்தியமொழி இதழ்களின் வரலாற்றில் இந்தப் புது உத்தியைத் தினத்தந்தி புகுத்தியதன் மூலம் ஒரு நாளிதழ் பல மையங்களிலிருந்து வெளியிடப்படும் உத்தியைக் கண்டுபிடித்த முன்னோடியாக அது விளங்குகிறது. (ராபின் ஜெர்ரி, முன்னது,

ப79). கி.ஜி.கே. ரெட்டி என்னும் ஆய்வாளர் இந்திய இதழின் வரலாற்றில் தினத்தந்தியை ஒரு திருப்பு முனை என்கிறார்.

தினத்தந்தி நாளிதழ் தயாரிப்பில் நவீனத் தொழில் நுட்ப வசதிகளை இறக்குமதி செய்தும் புதுமைபடைத்து வருகிறது.

உள்ளடக்கம்

தினத்தந்தி தனக்கெனத் தனிப்பாணியினை வகுத்துக் கொண்டது. நாள் தோறும் கருத்துப்படம், சிரிப்பு, படக்கதை, ஆண்டிப்பண்டாரம் பாடுகிறார் போன்றவை தினத்தந்திக்கே உரிய உள்ளடக்கங்களாயின. தினத்தந்தியின் கன்னித்தீவும், சிந்துபாத்தும் வாசகர்களைப் பெரிதும் கவர்ந்திழுத்தனர்.

தினத்தந்தி வட்டாரச் செய்திகளுக்கு முன்னுரிமை தந்தது. புகைப்படங்களை வாசகர்களைக் கவர்ந்திழுக்கும் கூறாக மையப்படுத்தியது. மிகப்பெரிய எழுத்துகளில் தலைப்புகளையும் வெளியிட்டமை அதன் தனிச்சிறப்பு. மேலும் திரைப்படத்துறை தொடர்பான கொலை வழக்கைப் பற்றிய தகவல்களைப் பரபரப்பூட்டும் விதத்தில் அது வெளியிட்டது. இந்தச் செய்தியினைச் சென்னையிலிருந்து தொலைபேசி மூலம் பெற்று மதுரையிலிருந்தும் வெளியிட்டது. திரையுலகச் செய்திகள், அரசியல், குற்றச் செய்திகள் ஆகியவற்றின் மேல் மக்களுக்கு இருக்கும் ஆர்வத்தைப் புரிந்துகொண்ட தினத்தந்தி ஒவ்வொரு நாளும் அவற்றைப் பற்றிய செய்திகளை வெளியிட்டது. 1940களில் இந்தியாவில் ஒவ்வொரு நாள் காலையிலும் ஒரு நாளிதழை வாசகர்களுக்கு அளித்த பெருமை தினத்தந்திக்குரியது. பிற மொழிகளில் நாற்பதாண்டுகளுக்குப் பின்னரே நடந்த இத்தகைய முயற்சிகளுக்குத் தினத்தந்தியே முன்னோடி. அது மொழியிலும் புதுமை புகுத்தியது.

வெற்றி நடை போட்ட நாளிதழ்கள் யாவும் உள்ளூர் மொழிநடையைப் பின்பற்றி எழுதத் தொடங்கியது, இதழுலகில் ஒரு குறிப்பிடத் தகுந்த மாற்றம் எனலாம். வாசகர்கள் விரும்பும் மொழியைத் தினத்தந்தி கண்டறிந்தது. இதழ் மொழி நடையினை உருவாக்கிய சிறப்பு தினத்தந்திக்கு உரியது. ரிக்ஷாக்காரர்கள் படிக்கக்கூடிய நாளிதழ் என்று தினத்தந்தி தன்னைக் குறிப்பிடுவதில் பெருமை கொண்டது.

இலவச இணைப்புகள்

தினத்தந்தி பல்வேறு இலவச இணைப்புகளை வெளியிடுகிறது. அவற்றை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம். அவை இலவச இணைப்பு மலர்கள், இலவச இணைப்புத் தாள்கள் ஆகும். வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் முறையே தங்கமலர், குடும்பமலர், இளைஞர்மலர் வெளிவருகின்றன. அதே நாட்களில் தாள் இணைப்புகளாக முறையே வெள்ளிமலர், முத்துச்சரம், ஞாயிறுமலர் ஆகியவற்றை வெளியிடுகின்றது.

சிறுவர் தங்கமலர்

ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் முன், பின் அட்டைகள் நீங்கலாகப் பதினைந்து பக்கங்களுடன் வெளிவரும் சிறுவர்க்கான இலவச இணைப்பிற்குத் தினத்தந்தி, சிறுவர் தங்கமலர் என்று பெயர் சூட்டியுள்ளது. அட்டையில் பரிசு பெற்ற மழலையரின் தோற்றத்தை வெளியிட்டுச் சிறுவர்களை மகிழ்ச்சிப்படுத்த நினைக்கும் தினத்தந்தி வண்ணப்படத்தினால் அவர்களின் மனத்தை ஈர்க்கும் வகையில் வெளிவருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. தனிப் புத்தகமாக வெளிவருவதால் அவற்றை ஒன்றாக இணைத்துப் பராமரிப்பதற்கும் இது வாய்ப்பாக உள்ளது. நேரம் கிடைக்கும் போது படிப்பதற்கும் வசதியைத் தருகிறது.

உள்ளடக்கம்

தங்கமலர், கதைகள், படக்கதைகள், தகவல்கள், வினாவிடைப் பகுதிகள், விளையாட்டுக்கள், பரிசுப்போட்டிகள் போன்ற பல பகுதிகளைத் தினத்தந்தி வெளியிடுகின்றது. உள்ளடக்கப் பகுதியில் தங்கமலர் வண்ணப் படங்களிலும் கவனம் செலுத்துகின்றது. ஓவியங்கள், படக்கதைகள் எப்போதும் வண்ணத்திலேயே வெளியிடப்படுகின்றன. மேலும் 'தங்கச் சுரங்கம்' என்று இரு பக்கங்களில் இணைப்பின் இடையில் வெளிவரும் பகுதியில் இடம்பெறும் அனைத்து உள்ளடக்கக் கூறுகளிலும் வண்ணம் முக்கியத்துவம் பெறுவதைக் காணமுடிகிறது.

தனித்தன்மைகள்

சிறுவர் தங்கமலர் சில தனித்தன்மைகளுடன் தன்னைச் சிறுவர்களிடையே நிலை நிறுத்திக் கொள்கிறது. சிறுவர்களின்

விருப்பத்திற்கேற்பவும், அவர்களிடையே திறமைகளை வளர்க்கும் விதத்திலும் "தங்கமலர்" தனிக் கவனம் செலுத்துகிறது. பிற இதழ்களிலிருந்து தினத்தந்தி வேறுபட்டுத் தனித்தன்மையுடன் இருக்க நினைப்பதைச் சிறுவர்மலருக்கு அது சூட்டி இருக்கும் பெயரை வைத்தே உணர்ந்து கொள்ளலாம். பிற இதழ்கள் சிறுவர் மலரை வெளியிட்ட போதிலும் அச்சிறுவர் மலருக்குச் "சிறுவர் தங்க மலர்" என்று பெயரிட்டுத் தனித்துவத்தை நிலைநாட்டுகிறது.

தங்கமலர் சிறுவர்களின் அறிவுத்திறன், உற்றுநோக்கல், படைப்புத் திறன், கற்பனைத்திறன் ஆகியவற்றை வளர்ப்பதில் கவனம் காட்டுகிறது எனலாம். மேலும் தங்கமலரில் வெளிவரும் உள்ளடக்கக் கூறுகள் ஐந்து முதல் பதினைந்து வயது வரை உள்ள சிறுவர்கள் படிக்கக் கூடியனவாக உள்ளன. அது மட்டுமின்றிச் சிறுவர்களை வசீகரிக்கும் வகையில் பல்வேறு தலைப்புகளில் பல்வேறு பகுதிகள் வெளியிடப்படுகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது. விளையாட்டுகளின் வழிப் பல கருத்துகளும், பயிற்சிகளும் வழங்குதல் பிள்ளைப்பருவத்திற்கு ஏற்றது என்பதே உளவியலாளர்களின் கருத்தாகும்.

தங்கமலர் கதைகள், படக்கதைகள் மிகச்சிறிய எளிய கட்டுரைக் குறிப்புகள், வினா-விடைகள், தகவல்கள் இவற்றில் உலகின் முக்கியத் தகவல்கள், அரிதான செய்திகள், அவசியம் தெரிந்திருக்க வேண்டிய குறிப்புகள் போன்ற பல தகவல்கள் வெளிவருவதால் சிறுவர்களின் பொது அறிவு பெரிதும் மேம்பட வாய்ப்பு உருவாகிறது. நகரும் தாவரம், 1/2 அடி உயரக்குரங்கு, மிகப்பெரிய விடுதி, மின்சாரக்கார் போன்ற பல தகவல்கள் அறிவூட்டும் பணியினைச் செய்கின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

உற்று நோக்கல்

"தங்கமலர்" ஒரே மாதிரியான இரு படங்களை வெளியிட்டு அவற்றுள் காணப்படும் வித்தியாசங்களை அறியச் சொல்கிறது. குவிந்து கிடக்கும் பல பொருட்களின் படங்களை வெளியிட்டு அவற்றுள் தொடர்பற்ற ஒரே ஒரு பொருளை மட்டும் அறியத் தூண்டுகிறது. இது போலவே பல பிராணிகளின் படங்களை ஒரு பெட்டிக்குள் வெளியிட்டு ஏதாவது ஒரு வகையில் வேறுபடும் இரண்டை அவற்றிலிருந்து அறியத் தூண்டுகிறது. "தங்கமலர்" ஓவியங்களில் சில பகுதிகளை மட்டும்

வரைந்து பின் எஞ்சிய இடத்தில் புள்ளிகள் வைத்து எண்ணிட்டு அவற்றை இணைக்கும் உத்தியைக் கையாண்டு படைப்புத்திறனை வளர்க்கிறது.

சிறுவர்களிடையே கற்பனைத்திறனை வளர்ப்பதற்காகப் பல கவிதைகளை எழுதத் தூண்டும் முயற்சி தங்கமலரில் காணப்படுகிறது.

போட்டிகள்

தினத்தந்தியின் இணைப்பான 'சிறுவர் தங்கமலர்' பரிசுப் புதிர் என்ற தலைப்பில் 500 ரூபாய்ப் பரிசினையும், அறிவுப்புதிர் என்ற தலைப்பில் 50 ரூபாய்ப் பரிசினையும் அளித்துச் சிறுவர்களை ஊக்கப்படுத்துகின்றது. 50 ரூபாய்ப் பரிசு பத்துப்பேருக்கும், 500 ரூபாய்ப் பரிசு, வெல்லும் நபர்களின் எண்ணிக்கையின் அடிப்படையிலும் வழங்கப்படுகின்றன. பரிசு பெறும் சிறுவர்கள் தங்கமலரின் அட்டையை அலங்கரிப்பதும் குறிப்பிடத்தக்கது.

இளைஞர் மலர்

இது தனது பெயருக்கு ஏற்ப இளைய சமூகத்திற்குத் தேவையான கருத்துகளை ஏந்தி வருகிறது. அவையாவன:

1. ஆங்கிலத்தில் பேச
2. சாதனையாளர் சந்திப்பு
3. வாருங்கள் வழிகாட்டுகிறோம்
4. வெற்றி உன் பக்கம்
5. பொது அறிவுச் சோதனை
6. அறிவியல் அதிசயம்
7. இளைஞர் குரல்
8. வார்த்தை விளையாட்டு
9. காலேஜ் கிசுகிசு
10. புதுக்கவிதை

மேற்கண்டவை அனைத்தும் இளைஞர் மலரில் பொதுவாக வெளிவரும் உள்ளடக்கக் கூறுகளாகும்.

வெள்ளிமலர் திரைப்படச் செய்திகளையும், முத்துச்சரம் ஆன்மீகம், விளையாட்டு, மருத்துவம் போன்றனவற்றையும், ஞாயிறுமலர் இராசிபலன், மருத்துவக் குறிப்புகள் போன்றனவற்றையும் வெளியிடுகின்றன.

மொழிநடை

தினத்தந்தி மக்களிடையே பரவலாகப் பேசப்படும் ஒரு நாளிதழ். அதனை உருவாக்கி நிலைபெறச் செய்திருப்பவர் அமரர் ஆதித்தனார். தினத்தந்தி புகுத்திய பல புதுமைகளுள் மொழிநடையும் ஒன்று.

ஒரு நிறுவனத்தின் வெற்றி தோல்விகளைத் தீர்மானிப்பதில் பணியாளர்கள் முக்கியப்பங்கு வகிக்கின்றனர். அதனால் நிறுவனங்கள் பணியாளர் தேர்வில் அக்கறை செலுத்துதல் அவசியமாகிறது. ஆள்வினைத் துறை அறிஞர்கள் (Department of Management) பகுப்பாய்வு (Job Analysis) செய்து பணியாளர்களைத் தெரிவு செய்யலாம் என்று குறிப்பிடுகின்றனர். பணியின் தன்மை, அதை நிறைவேற்றும் திறமை ஆகியவற்றை ஆராய்வது பணிப்பகுப்பாய்வாகும்.

பணிப்பகுப்பாய்வு, பணி விளக்கம் (Job description), பணிவிவரம் (Job specification) ஆகிய இரு கூறுகளை உள்ளடக்கியது. பணி விளக்கம், பணி இத்தன்மையது என்பதை எடுத்துரைக்கும். அதைச் செய்வதற்குத் தேவையான அறிவு, திறமை ஆகியவற்றைப் பணி விவரம் குறிப்பிடும். எனவே பணி விளக்கம் பணியைச் சார்ந்தும், பணி விவரம் மனிதரைச் சார்ந்தும் அமைகின்றன எனலாம்.

ஆள்வினைத் துறை அறிஞர்கள் குறிப்பிடும் பணிப்பகுப்பாய்வு முறையினைத் தன் நிறுவனத்தில் அமல் படுத்தியவர் அமரர் ஆதித்தனார். இதற்குக் காரணம் 'பத்திரிகை' வெளியிடுவதைப் பற்றி அவருக்கிருந்த தொலை நோக்குப் பார்வையே ஆகும்.

பணிப்பகுப்பாய்வு

பேச்சுத் தமிழில் பாமரரும் படிக்கத் தக்க அளவில் 'பத்திரிக்கையை' நடத்த வேண்டும் என்பது பணிவிளக்கம் ஆகும். அதற்கு மிகப் பெரிய தமிழ்ப் பேராசிரியர்களோ, முதுகலைப்பட்டதாரிகளோ தேவையில்லை என்றும்

சாதாரணமாகத் தமிழ் எழுதத் தெரிந்தவர்களே போதும் என்பதும் அவர் குறிப்பிட்ட பணி விவரமாகும்.

பணி விளக்கம்

தான் தொடங்கப் போகும் 'பத்திரிக்கை'யைப் பற்றிய தெளிவான பார்வையை அமரர் சி.பா. ஆதித்தனார் பெற்று இருந்தார். சாதாரணமாகக் கூலி வேலை செய்பவர்கள், ரிக்ஷா இழுப்பவர்கள் போன்றவர்களையும் 'பத்திரிக்கை' படிக்கச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் 'பத்திரிக்கை' நடத்த ஆசைப்பட்டார்.

"எழுத்தறியாத் தமிழர் கூட இங்கே
எழுத்தெண்ணிப் படிப்பதற்கு ஏடு கண்டார்"
(அ.ம.சாமி. ப.15)

என்று கவிஞர் கோ.ஞா. மாணிக்கவாசகன் கூற்றும் இதனை உறுதிப்படுத்துகிறது. ம.பொ.சி.யும் 'கிராமப்புறத்து உழவன் கூட நல்ல முறையில் புரிந்து கொள்ளும் மொழியில் செய்திகளை அமைத்துக் கவர்ச்சியான தலைப்புகளுடன் தினத்தந்தி கொடுத்து வருகிறது என்று பாராட்டுகிறார். ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்த மக்கள் படிக்கக் கூடிய முறையில் பத்திரிக்கை வெளியிட வேண்டும் என்பது அவர் வரையறுத்த பணி விளக்கம் ஆகும்.

பணி விவரம்

மிகப்பல பெரிய பேராசிரியர்கள் தினத்தந்தியில் நல்ல தமிழ் எழுதப்படவில்லை என்று அதன் மொழிநடையைத் திருத்த விரும்புவதாகச் சொன்ன போது சி.பா. ஆதித்தனார் அதைத் தயக்க மின்றி நிராகரித்தார். தனக்கு முதுகலைப் பட்டதாரிகள் தேவை இல்லை என்று உறுதியாகக் குறிப்பிட்டார். சாதாரண மக்களுக்குப் புரியும் வகையில் எழுதக் கூடிய அரைகுறைப் படிப்பாளிகளே போதும் என்பது அவர் கருத்தாக இருந்தது. தினத்தந்தியின் மொழி நடை கொச்சையாக இருக்கிறது என்றும், இலக்கண வரம்புடன் இல்லை என்றும் பலத்த குற்றச்சாட்டுகள் எழுந்த போதும் சி.பா.ஆதித்தனார் தன்னுடைய பணி விவரத்தைத் தெளிவாக வரையறுத்தார். மெத்தப் படித்தவர் என்பதை விட, எழுதுவதில் ஆர்வமும் பிழை எழுதக் கூடியவருமே தன் பத்திரிக்கைக்குப் போதும் என்று அவர் கருதினார். மேலும் பிற பத்திரிக்கைகளில் பணியாற்றியவர்களைத் தன் பத்திரிக்கை

அலுவலகத்தில் பணி அமர்த்த அவர் விரும்பியதில்லை. வெறும் களிமண் என்றால் நமக்கு வேண்டிய வடிவத்தை எளிதில் செய்து கொள்ள முடியும். ஏற்கெனவே பயிற்சி பெற்ற ஒருவரைத் தன் பத்திரிக்கைக்குத் தகுந்தபடி திருத்துவது கடினம் என்றும் கை திருந்தாது என்றும் அவர் கருதினார். இந்தத் தெளிவான பணி விவரம் அவரிடமிருந்தது.

மொழிப்புரட்சி

"பத்திரிக்கைகள் மொழியை வளர்க்க உதவும் பல்வேறு சாதனங்களுள் ஒன்றாகும்" என்கிறார் இரா. தங்க மணியன் **(பத்திரிக்கைத் தமிழ், ப.47).** அந்த வகையில் தினத்தந்தி தமிழ்ப் பத்திரிக்கை மொழிவளர்ச்சியில் முன்னணியில் இருக்கிறது எனலாம். சமுதாய மொழியியலார் மொழி வளர்ச்சியினை அறியப் பயன்படும் அடிப்படை அளவு கோல்களாக மூன்றைக் குறிப்பிடுகின்றனர். அவை எழுத்துருவாக்கம், நிலைப்பேறாக்கம், புதுமையாக்கம் என்பனவாகும்.

எழுத்திலா மொழிகளுக்கு எழுத்துகளை உருவாக்குதல் இதனுள் அடங்கும். இவ்வகையில் அதுவரை எழுத்தில் கொணரப்படாத உணர்வுகளுக்குத் தன் பத்திரிக்கையில் மொழி வடிவம் கொடுத்தது தினத்தந்தியே. 'அழுதாள்' என்பதனைக் 'கோ' வென்று அழுதாள் என்றும் 'குத்தினான்' என்பதனைச் 'சதக்சதக்' என்று குத்தினான் என்றும் மொழித்தன்மை கொடுத்து எழுதும் முறை எழுத்திலா மொழிகளுக்கு வடிவம் தரும் முறைக்குச் சான்றாகும்.

நிலைப்பேறாக்கம் என்பது மொழியினைச் செய்திப் பரிமாற்றத்திற்கு ஏற்ப எளிமையானதாகவும் ஆற்றல் உடையதாகவும் மாற்றுவது ஆகும். தினத்தந்தியும் அவ்வகையில் படிக்க எளிமையாக இருக்கவேண்டும் என்பதற்காகப் பல புதுமைகளைப் புகுத்தியது. சான்றாக எண்களை எண்ணாலேயே எழுத வேண்டும் என்ற முறையினைக் குறிக்கலாம். '8 லட்சம், 10 ஆயிரத்து 120' என்று எழுதும் முறையில் தினத்தந்தி தனக்கென ஒரு மொழி நடையை உருவாக்கி நிலைத்த தன்மை உடையதாகவும் அதை ஆக்கியது என்று அறிய முடிகிறது. மேலும் தமிழ்மொழியில் மொழிக்கு முதலில் இடம்பெறக் கூடாது என்று விதித்த ர,ல ஆகிய எழுத்துகளைத் தினத்தந்தி மொழி முதலில் பயன்படுத்தும் பழக்கத்தைக் கொண்டிருக்கிறது.

ஏனெனில் இலட்டு என்பது வாசகர்களுக்குப் புரியாமல் போய் விடலாம். அதனையே லட்டு என்றால் எளிதில் புரியும். இத்தகைய வழிமுறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பது தினத்தந்தியின் கருத்து. இதனை மொழிநூலார் எழுத்து நிலைப்பேறாக்கம் என்கின்றனர்.

ஒரு 'பத்திரிக்கை' தன் தனித்தன்மைக் கேற்பத் தொடர் நிலைப்பேறாக்கங்களைச் செய்து கொள்ளலாம். தினத்தந்தியும் அவ்வகையில் நீண்ட தொடர்களைத் தவிர்க்க வேண்டும் என்ற கருத்துக் கொண்டுள்ளது. சான்றாக, 'டெல்லியில் நடக்கும் முதல் மந்திரிகள் மாநாட்டில் கலந்து கொள்ளப் பாண்டிச்சேரி முதல் மந்திரி நேற்று சென்னையிலிருந்த விமானம் மூலம் டெல்லிக்குப் புறப்பட்டுச் சென்றார்' என்ற வாக்கியத்தை

'முதல் மந்திரிகள் மாநாடு டெல்லியில் நடக்கிறது. அதில் பாண்டிச்சேரி முதலமைச்சர் கலந்து கொள்கிறார். இதற்காக அவர் நேற்று சென்னையிலிருந்து டெல்லிக்கு விமானம் மூலம் புறப்பட்டுப் போனார்'

என்பதனைக் குறிப்பிடலாம். இதைப் போலவே செயப்பாட்டு வினைப் பயன்பாடுகளைத் தவிர்ப்பதும் தினத்தந்தியின் தொடர்நிலைப் பேறாக்கத்திற்குச் சான்றாகும்.

'வாலிபர் கத்தியால் குத்தப்பட்டார்'

என்பதனை 'வாலிபருக்குக் கத்தி குத்து' என்று எழுதுவதைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

புதுமையாக்கம் என்னும் வகையில் நோக்கினால் தினத்தந்தியின் மொழி நடையே தமிழுக்குப் புதுமை எனலாம். அப்புதுமையினை அது புகுத்திய போது பலத்த சவால்களை அச்சமின்றிச் சந்தித்தது. "தினத்தந்தியைப் போல் எதிர்ப்புக்கும், கேலிக்கும் வலுத்த கண்டனத்துக்கும் உள்ளான செய்தித்தாள் சரித்திரத்தில் இருந்திருக்க முடியுமா?" என்ற வினாவினைக் குமுதம் தொடுத்துள்ளது. (4.6.1981). காரணம் தினத்தந்தி மொழியில் புகுத்திய புதுமை என்பதே. இதனைப் புதுமை என்பதை விட அமரர் சி.பா. ஆதித்தனார் செய்த புரட்சி என்றே கூறலாம். அன்றாட வாழ்வின் அடிப்படைச் சொற்களான நூறு நூற்றைம்பது சொற்களை மட்டுமே பயன்படுத்தியவர் ஆதித்தனார் என்பது முனைவர் சாலை இளந்திரையனின் கருத்து.

அனைவருக்கும் புரியும் மொழி நடையை உருவாக்க அனைவரும் பயன்படுத்தும் தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்பது அவர் கொணர்ந்த புதுமை. இதற்குத்தான் அவர் காவலாளி ஆத்தியை அளவுகோலாக வைத்திருந்ததாகக் கூறுவது உண்டு. பேச்சுத் தமிழே உயிருள்ளது என்று கருதியது மட்டுமின்றி, பேச்சுத் தமிழைக் கொச்சை நீக்கி எழுதுவதே தமிழ் உரைநடை வளர்ச்சிக்குச் செய்யும் தொண்டு என்பதும் அவர் கருத்து. இது அவர் இதழியலுக்குச் செய்த மகத்தான தொண்டு என்பது ஒருபுறமிருக்கத் தமிழ் உரைநடையில் கொணர்ந்த மிகப்பெரிய புதுமை என்பதும் குறிப்பிடத் தகுந்தது. பத்திரிக்கை என்பது இலக்கியமல்ல. அதனை அவசர அவசரமாகப் படிக்க வேண்டியுள்ளது. எனவே அதன் மொழி நடை கட்டமைக்கப்பட வேண்டும் என்பதில் சி.பா. ஆதித்தனார் தீவிரமாக இருந்தார். தலையங்கத்திற்குத் தனி நடையும், செய்திகளுக்குத் தனி நடையும் வகுத்த அவரது செயல் மிகப் புதுமையானது.

தினத்தந்தியின் மொழி நடைப் புதுமைக்கு நல்ல அங்கீகாரமும் கிடைத்துள்ளது. தமிழகத்தில் வாழும் பிற மொழியாளர்கள் தினத்தந்தி படித்துத் தமிழைக் கற்றுக் கொள்கின்றனர். தினத்தந்தி தொடங்கிய காலத்தில் இருந்த மிகச் சாதாரணப் படிப்பாளிகளிடையே பத்திரிக்கையை வாசிக்கத் தூண்டியமை மற்றுமொரு சிறப்பு. இதைவிடத் தினத்தந்தியை ஆராய்ந்த ஆய்வாளர் டாக்டர் அ. சாந்தா, 'புதுப் படிப்பாளிகளுக்கான உத்திகளை இதழின் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொண்ட முதல் இதழ் உலகிலேயே தினத்தந்திதான்' என்று குறிப்பிடுவதும் இங்குக் கருதத் தக்கது. மேலும், "முதியோர் கல்வித் திட்டங்களில் புதுப்படிப்பாளிகளின் படிக்கும் திறமையை வளர்க்கக் கூடிய மிகத்திறமையான கருவி செய்தித்தாளாகும்" என்ற இலாயிட்சோமர்லாடு என்பாரின் கூற்றினை அறிவொளி இயக்கத்தில் ஈடுபட்ட இந்நூலாசிரியரும் தினத்தந்தி வழி மெய்யாக்கியதும் இங்குப் பதிவு செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

மாலை முரசு

தினத்தந்தி அலுவலகத்தில் இருந்து மாலை நேரப் பதிப்பாக நெல்லை மாலை முரசு எனும் நாளிதழ் கடந்த 47 ஆண்டுகளாக வெளியிடப்பட்டு வருகிறது. இது பின்னர், சென்னை, மதுரை, திருச்சி, கோவை, ஈரோடு, சேலம்,

நாகர்கோவில் ஆகிய பிற மையங்களில் இருந்தும் வெளியிடப்பட்டு வருகின்றது.

நெல்லையில் மாலை முரசு எனப்பெயர் பெறும் இந்நாளிதழ் நெல்லையைத் தவிரப்பிற அனைத்துப் பதிப்புகளிலும் மாலைமலர் என அழைக்கப்படுகின்றது. நிர்வாகத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணங்களினால் நெல்லையில் மட்டும் மாலைமுரசு என்ற பெயரிலும் வெளிவருகின்றது. சற்று ஏறக்குறைய தினத்தந்தியின் போக்கினைக் கொண்டுள்ள மலை முரசு மாலை நேர இதழ் என்பதால் மதிப்பினைப் பெறுகின்றது.

இணையத்தள வசதி வருவதற்கு முந்தைய காலத்தில் மாணவர்களின் தேர்வு முடிவுகளை அறிவிக்கும் வாய்ப்பினைப் பெற்றதாக மாலைமுரசு விளங்கியது.

மாலைமுரசு மூன்று இணைப்புகளை வெளியிட்டு வருகின்றது. சோதிட முரசு, முரசு பிளஸ், முரசு மலர் ஆகிய இணைப்புகள் முறையே செவ்வாய், சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் வெளிவருகின்றன. முரசு மலர் பல்வகைத் தகவல்களை வெளியிடுகின்றது. முரசு பிளஸ் வர்த்தகத் தொடர்பான தகவல்களையும் விளம்பரங்களாக வெளியிடுகின்றது.

மாலைமலரின் இணைப்புகளாகத் தேன்மலர், மகளிர் மலர் வெளிவருகின்றன. இவற்றில் தேன்மலர் பலவகைச் செய்திகளை வெளியிடுகின்றது.

தினமலர்

முதலில் திருவனந்தபுரத்தில் தொடங்கப்பட்ட தினமலர் 6.9.1957இல் திருநெல்வேலி தச்சநல்லூருக்கு மாற்றப்பட்டது. டி.வி. ராமசுப்பையர் இதனை நிறுவிய காரணமே வேறு. ஆயின் மிக வெற்றிகரமான நாளிதழாக இன்று தினமலர் தமிழ் வாசகர்களின் கைகளில் தவழ்ந்து கொண்டுள்ளது. இதன் காரணமாகத் தமிழகத்தின் பல முக்கிய நகரங்களிலிருந்து தினமலர் வெளிவரத் தொடங்கியது. அதன் படிப்படியான வளர்ச்சியை அறிவதற்குக் கீழ்க்காணும் தகவல் உதவும்.

1957	நெல்லை
1966	திருச்சி

1979	சென்னை
1980	மதுரை
1984	ஈரோடு
1991	பாண்டிச்சேரி
1992	கோயம்புத்தூர்
1993	வேலூர்
2000	சேலம்
2000	நாகர்கோவில்

என்றவாறு பத்துப் பதிப்புகளுடன் தினமலர் வெளிவந்து கொண்டிருக்கிறது. செய்திகளை வெளியிடுவதிலும், சிறப்புச் செய்திகளைத் தனித்தலைப்புக்களுடன் தருவதிலும் தினமலர் வெற்றி கண்டுள்ளது. 'மலர்' என்னும் தன் தனிச்சிறப்புப் பெயருடன் சிறுவர் மலர், வார மலர், ஞாயிறு மலர், திரைமலர், நகர் மலர், வேலைவாய்ப்பு மலர், கல்வி மலர், டிவி. மலர், ராசி மலர், விவசாய மலர், விளையாட்டு மலர் என்று பலவகைச் செய்திகளைத் தனியே வெளியிட்டுப் பலத்த வாசகர் ஆதரவைப் பெற்றுத் திகழ்கிறது. திங்களன்று பங்குச் சந்தை, செவ்வாயன்று மணமாலை, புதனன்று விவசாய மலர், வெள்ளியன்று சிறுவர் மலர், சனியன்று விளையாட்டு மலர், ஞாயிறன்று வாரமலர் என்று ஒவ்வொரு நாளும் வாசகர்களுக்குச் சிறப்புத் தகவல்களைத் தருவதில் முன்னணியில் நிற்கிறது.

தினமலரின் சிறுவர் மலரும், வார மலரும் 32 பக்கங்கள் வரை வெளி வருவது குறிப்பிடத் தக்கதாகும். தனி இணைப்புகளாக வெளிவரும் இவற்றை வாசகர் மிகப் பரவலாக ஆர்வத்துடன் படிக்கின்றனர். இவ்விரு மலர்களையும் வளரிளம் பருவத்தினை எட்டிய பின்னரும் தொடர்ந்து படிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்விரு மலர்கள் வெளிவரக்கூடிய வெள்ளி, ஞாயிறு ஆகிய நாட்களில் தினமலரின் விற்பனை பிறநாட்களைக் காட்டிலும் மிகுதி என்பது கருதத்தக்கது.

தினமலர் தனக்கெனத் தனியான மொழிநடையை வகுத்துக் கொண்டுள்ளது. அதன் எழுத்துகளின் அளவு, தெரிவு, புகைப்படங்களை வெளியிடும் பாங்கு, வட்டாரத் தகவல்களுக்குத் தரும் முக்கியத்துவம் போன்றவை அதன் வெற்றிக்குக் காரணங்கள் ஆகின்றன. பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு

மாணவர்க்கு மாதிரி வினாத்தாள், ஆன்மீகப் பகுதி, அறிவியல் தகவல், புத்தக மதிப்புரை, அயல் நாட்டுச் செய்திகள் போன்று பல பரவலான தகவல்களை அளித்து அனைத்து வகை வாசகர்களையும் தன்பால் ஈர்த்துள்ளது. 1969 முதல் 1976 வரை அரசு விளம்பரங்களைப் பெறமுடியாத நிலையில் இருந்த தினமலர் படிப்படியாக இன்று பெரும் முன்னேற்றத்தைத் தொட்டுள்ளது.

சுதந்திரத்துக்குப் பின் தோன்றி மிகப்பெரும் வளர்ச்சியை எட்டியுள்ள தமிழ் நாளிதழ் தினமலர் என்பது குறிப்பிடத்தக்கது. தினமலரைப் பற்றிக் குறிப்பிடுகையில் எஸ்.எஸ். சோமையாஜுலு என்னும் இதழாளர், 'கவர்ச்சிச் செய்திகள், பரப்பரப்பான செய்திகள் இவையே பத்திரிக்கையின் இலக்கணம் என்று இருந்த காலத்தில், வட்டாரச் செய்திகள், வட்டார மக்களுடைய குரல், தேவைகள், கோரிக்கைகள், வளர்ச்சி இவையே செய்திகள். இவற்றுக்கும் கவர்ச்சியுண்டு என்று மக்களுக்கு ஒரு கல்வியைத் தந்து ருசியை உருவாக்கித் 'தினமலர்' வளர்ந்தது' என்கிறார் (கடல் தாமரை, ப.145).

டெலிபிரிண்டர் வசதியைத் திருநெல்வேலிக்குக் கொணர்ந்தது தினமலர் தான். சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பேச்சுகளைத் தினமலர் அப்படியே வெளியிட்டது. இது மக்களிடையே ஆர்வத்தைத் தூண்டியது. மாவட்ட வளர்ச்சிமன்றக் கூட்டத் தகவல்கள், மத்திய, மாநிலப் பட்ஜெட்டுகள் போன்றவற்றை மக்கள் பெரிதும் வரவேற்கின்றனர்.

தினமலர் 1977இல் எழுத்துச் சீர்திருத்தத்தை அமுல் படுத்தியது. 1984இல் புகைப்பட அச்சுக் கோர்க்கும் முறையைக் கொணர்ந்தது. வாரம் மூன்று புத்தக இணைப்புக்களைக் கொண்டு வந்த முதல் தமிழ் நாளிதழ் தினமலர்தான்.

தினமலர் இதழின் முதல் செய்தி ஆசிரியர் குழந்தைசாமி (கடல் தாமரை, ப.76). இவர் 1950க்கு முன் தினசரி இதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியவர். டி.எஸ். சொக்கலிங்கம் என்னும் சிறந்த இதழாளருடன் பணிபுரிந்த அனுபவம் பெற்றவர். 'குமரிஎல்லை' 'தென் குரல்' போன்ற சிறு வெளியீடுகளை வெளியிட்டவர். டி.வி. ராமசுப்பையருடன் கலந்து பேசி 'தினச் செய்தி' என்ற இதழ் நடத்தப்பட்டுப்பின் நின்றிருந்த நிலையில்

அதே அச்சகம் விலைக்கு வாங்கப்பட்டது. திருவனந்தபுரத்தில் ஓரிடத்தை வாடகைக்கு எடுத்துத் தமிழ்ப் பேரறிஞர் வையாபுரிப்பிள்ளை அவர்களைக் கொண்டு நாளிதழைத் தொடங்கினார்.

தினமலர் இதழைத் தொடங்கிய அன்று "தினமலர்ப் பத்திரிகை எந்தக் கட்சியையும் சார்ந்தது அன்று" என்று அதன் நிறுவனர் குறிப்பிட்டார். ஆயின் இன்றும் அது தொடர்கிறதா என்பது ஐயமே. அதன் முதல் தலையங்கத்தில் டிவிஆர். "ஜன சமூகம் இன்னல்கள் நீங்கி இன்பநிலை அடைவதற்கு எமது சக்திக்கு இயன்ற அளவு தொண்டாற்றும் ஒரே நோக்கத்துடன் தினமலர்ப் பத்திரிக்கையைத் தொடங்கியிருக்கிறோம்" என்று குறிப்பிடுகிறார் (கடல் தாமரை ப.86). தொடக்கக் காலத்தில் தினமலர் தன்னை நிலை நிறுத்திக் கொள்ள வெகுவாகப் போராடி உள்ளது. மலையாள மொழி பேசும் நாட்டில் தொடங்கப்பட்ட இத்தமிழ் நாளிதழ் அச்சுக் கோர்ப்பவர்களுக்காக மிகுதியும் செலவு செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு ஆளானது.

முதல் வருடத்தில் ஞாயிறு தவிரப் பிற நாட்களில் வெளிவந்து, பின் இரண்டாம் வருடத்தில் ஞாயிறும் வெளியிடப்பட்டு, மூன்றாமாண்டு ஞாயிறன்று ஆறு பக்கங்களுடன் வெளிவந்தது.

தினமலர் நெல்லையில் தொடங்கப்பட்ட போது அங்கு வேறெந்தப் பத்திரிக்கையும் வெளியிடப்படவில்லை. 4.4.57 முதல் தினமலர் திருநெல்வேலியிலிருந்து வெளிவந்தது.

இதழ் நடத்திய அனுபவம் பெற்றவரான எஸ்.என். சோமையாஜுலு நெல்லையில் செய்திகள் கிடைப்பது தாமதமாகும், எனினும், டிவி.ஆர் அதில் வெற்றி பெற்றார் என்கிறார்.

உள்ளடக்கம்

போட்டி நிறைந்த இதழியல் உலகில் தனக்கெனத் தனியிடத்தினைத் தக்கவைத்துக் கொண்டுள்ள தினமலர் நாளிதழானது சிறப்பான முறையில் இதழியல் பணியாற்றி வருகின்றது. மூன்று ரூபாய்க்கு விற்பனையாகும் இந்நாளேடானது பன்னிரண்டு பக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. சனி,

ஞாயிற்றுக் கிழமைகளில் இருபது, இருபத்தெட்டுப் பக்கங்கள் தரப்படுகின்றன. இத்தினசரியில் "நாள்பலன்" "இன்றைய ராசிபலன்" "ஆன்மீகம் அறிவோம்" "அக்கம் பக்கம்" "தெரிஞ்சுக்குங்க" போன்ற பகுதிகள் தினந்தோறும் இடம் பெறுகின்றன. 'இன்று' என்ற பகுதியில் சட்டம் மற்றும் பிற துறை சார்ந்த ஆலோசனைகள் தரப்படுகின்றன.

எண் விளையாட்டு என்னும் பகுதியின் மூலம் மக்களின் அறிவு சார்ந்த பிற துறை சார்ந்த சிந்தனைகள் ஊக்கப்படுத்தப்படுகின்றன. இப்பகுதியின் விடைகள் மறுநாள் வெளிவருமாறு அமைகின்றன. வட்டாரச் செய்திகள், உலகச் செய்திகள் ஆகியனவும் விளையாட்டுச் செய்திகளும் தினந்தோறும் தரப்படுகின்றன. தேர்தல் களம், கேலிச் சித்திரம், பழமொழி, பேச்சுப்போட்டி, அறிக்கை போன்ற பகுதிகளும் தினசரி நாளிதழில் இடம் பெறுகின்றன. மார்கெட் நிலவரம் ஆகியனவும் தரப்படுகின்றன. இன்டர்நெட், அறிவியல் சார்ந்த செய்திகளும் அதிகம் இடம்பெறுகின்றன.

சனிக்கிழமை தோறும் 'ஆன்மீக மலர்' பகுதியில் புகழ்பெற்ற கோவில்கள், புராணச் செய்திகள், துணுக்குகள் பல தரப்படுகின்றன. வெள்ளிக்கிழமை தோறும் பிறந்த நாள் பலன், ஆண்டுப்பலன் ஆகியன தரப்படுகின்றன. திரைப்படம் சார்ந்த 'திரைமலர்' என்ற பகுதி வெள்ளி, ஞாயிறு, செவ்வாய்க் கிழமைகளில் தரப்படுகின்றது. நோய் குறித்த கட்டுரைப்பகுதிகள், பேஷன் துறை சார்ந்த செய்திகள் கட்டுரைகளாகத் தரப்படுகின்றன.

பக்க இணைப்புகள் மற்றும் இலவச இணைப்புகள்

வாரமலர் இதழானது முப்பத்தொரு பக்கங்களைக் கொண்டது. இவ்விதழ் பல்சுவை இதழாக விளங்குகின்றது. ஆன்மீகக் கட்டுரை, கட்டுரைத் தொடர், கதைகள், அறிவியல் கட்டுரை, தொடர் கதை, உலகச் செய்திகள் பல இடம்பெறுகின்றன. சினிமாத் துறை சார்ந்த செய்திகளைக் 'கறுப்புப் பூனை' என்ற பெயரிலும், வாசகர் கடிதங்கள் 'அர்ச்சனை' என்ற பெயரிலும், தரப்படுகின்றன. நடுத்தெரு நாராயணன் எழுதும் திண்ணைப் பகுதி மக்களைக் கவர்கின்றதொரு பகுதியாக விளங்குகின்றது. ஆன்மீகம் சார்ந்த பகுதிகளும் அதிகமாக இடம்பெறுகின்றன.

சிறுவர் மலர் இதழில் இருபத்தெட்டுப் பக்கங்கள் இடம்பெறுகின்றன. குட்டிக் குட்டிக் கதைகள், சித்திரக் கதைகள் போன்ற பகுதிகள் இடம்பெற்றுச் சிறுவர்களைக் கவரும் விதத்தில் அமைந்துள்ளன. வண்ணம் தீட்டுக, வித்தியாசம் காண்க, வழிகண்டுபிடி போன்ற போட்டிகள் தரப்படுகின்றன. தொடர்கதைகள், பழங்காலப் புராணக் கதைகள், நாட்டுப்புறக் கதைகள் போன்றன இடம்பெறுகின்றன. வாரமலர் அட்டையில் திரைப்பட நடிகை, நடிகர்கள் படம் இடம்பெறுகின்றது. சிறுவர் மலரில் வாசகர் அனுப்புகின்ற குழந்தைகளின் படங்கள் இடம் பெறுகின்றன. வார மலரில் இடம்பெறும் குறுக்கெழுத்துப் போட்டி வாசகர்களின் ஏகோபித்த வரவேற்பினைப் பெற்ற பகுதியாகும்.

தினகரன்

தினகரன் நாளிதழ் 1977இல் சென்னையிலிருந்து வெளிவருகிறது. சமகால இதழ்களுடன் போட்டியிட்டுக் கொண்டு முன்னணி நாளிதழ்களில் ஒன்றாக விளங்குகின்ற தினகரன் நாளேடானது சென்னை, பாண்டிச்சேரி, வேலூர், கோவை, திருச்சி, மதுரை, நெல்லை, நாகர்கோவில், பெங்களூர் ஆகிய இடங்களில் இருந்து வெளியாகின்றது. பன்னிரண்டு பக்கங்களைக் கொண்டுள்ள இந்நாளிதழ் மூன்று ரூபாய்க்கு விற்பனையானது. வெள்ளிக்கிழமைகளில் பதினாறு பக்கங்களும், ஞாயிற்றுக்கிழமைகளில் இருபது பக்கங்களுடனும் வெளியிடப்பட்டது.

உள்ளடக்கம்

இந்நாளேடானது செவ்வாய், வெள்ளி, ஞாயிற்றுக் கிழமைகளில் அதிகப் பக்கங்களுடனும், சிறப்பான முறையிலும் வெளிவருகின்றது. உள்ளூர்ச் செய்திகள், வட்டாரச் செய்திகள், சட்ட மன்றச் செய்திகளுடன் "உலகம் உங்கள் கையில்" என்ற பெயரில் உலகச் செய்திகளைத் தினந்தோறும் தருகின்றது.

"டி.வி.யில் இன்று" என்ற பெயரில் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும், நான்கு அல்லது பதினோராம் பக்கங்களில் ஆன்மீகத் தொடர் ஒன்றினையும் தினமும் தருகின்றது. பொதுப்பலன், தினப்பலன்களையும் தருகின்றது. திங்கள் கிழமைகளில் "இந்தவார ராசிபலன்" என்ற பகுதி

இடம்பெறுகின்றது. செவ்வாய்க் கிழமைகளில் "திரை அரங்கம்" என்ற பெயரில் சினிமாச் செய்திகளைப் படங்களுடன் தருகின்றது. வெள்ளிக்கிழமை வெளிவரும் "வெள்ளி மலர்" பகுதியில் பயன்மிக்கப் பல பகுதிகள் தரப்படுகின்றன. ''ஆலோசனை நேரம்'' என்ற பகுதியில் நிபுணர்களின் ஆலோசனைகள் இடம்பெறுகின்றன.

எ.கா.

கர்ப்பிணிப்பெண்கள் கவனம் செலுத்த வேண்டிய விசயங்கள்

அழகுக் குறிப்புகள் பற்றிய செய்திகள்

இதனைப் போன்று தன்னம்பிக்கைக் கட்டுரைகளும், சின்னத்திரை, திரைப்படத்துறை சார்ந்தவர்களின் பேட்டிகளும் இடம்பெறுகின்றன. 'சினி மினி' என்ற பெயரில் திரைப்படத் துறைசார்ந்த துணுக்குகள் இடம்பெறுகின்றன. வாரந்தோறும் ஒரு கைவினைப் பொருள் செய்யக் கற்றுத் தருகின்றது.

இலவச இணைப்புகள்

இந்நாளேட்டுடன் இரண்டு பக்க இணைப்புகள் தரப்படுகின்றன. சனிக்கிழமை தோறும் "அருள்" என்ற ஆன்மீக இதழும், ஞாயிறு தோறும் "வசந்தம்" என்ற பல்சுவை இதழும் தரப்படுகின்றன. அருள் இதழில் இருபத்தி மூன்று பக்கங்களுடன் ஆன்மீகக் கட்டுரைகள், துணுக்குகள், அருள்வாக்கு, விழாக்கால நிகழ்வுகள் போன்ற பல செய்திகள் இடம்பெறுகின்றன. முப்பத்தொரு பக்கங்களுடன் ஞாயிறு தோறும் வெளிவருகின்ற இவ்விதழ் பல்சுவை இதழாக விளங்குகின்றது. நகைச்சுவைத் துணுக்குகள், கேலிச் சித்திரங்கள், திரைப்படச் செய்திகள், கதைகள், விடுதலைப் போராட்டக் காலப் பெண்களின் வரலாறு, சாதனைபடைத்த பெண்கள் குறித்த கட்டுரைகள், "அறிவுத்திறன்" என்ற பெயரில் போட்டிகள், அறிவியல், தொல்பொருளியல், கண்டுபிடிப்புகள் சார்ந்த பல செய்திகளும் இடம்பெறுகின்றன.

1980களில் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பலப்படுத்துவது தினகரனின் நோக்கமாக இருந்தது. எனினும் தினகரன் ஒரு கட்சி இதழ் போல் வெளிவராமல் சாதாரண பொதுவான தமிழ் இதழ் போல் வெளிவந்தது. இதன் உள்ளடக்கக் கூறுகளாக அரசியலும், சினிமாவும் விளங்கின. அரசு விளம்பரங்களை நீதிமன்ற ஆணையின் மூலம் தினகரன்

போராடிப் பெற்றது. இது அதன் விற்பனை வளர்ச்சிக்கு உதவியது.

ஒரு குறிப்பிடத்தக்க செய்தி என்னவெனில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சியில் இருக்கும் போது தினகரனின் விற்பனை குறையும். அரசு சார்ந்த செய்திகள் மட்டுமே வெளிவரும் என்ற எண்ணத்தினால் இதன் வாசகர் பரப்புக் குறையும் போக்கு உள்ளது.

புதிய தினகரன்

ஒரு ரூபாய்க்கு விற்கப்பட்ட புதிய தினகரன் நாளேடானது பதினாறு பக்கங்களைக் கொண்டது. இந்நாளேடு சென்னை, பாண்டிச்சேரி, வேலூர், சேலம், கோவை, திருச்சி, மதுரை, நெல்லை, நாகர்கோவில், பெங்களூர் ஆகிய இடங்களில் இருந்து வெளிவருகின்றது.

உள்ளடக்கம்

சமகால நாளிதழ்களைப் போன்றே பொதுவான உள்ளடக்கங்களைக் கொண்டுள்ளது. நாளேட்டின் முதல் பக்கத்தில் தலைப்பின் கிழே இதழின் உள்ளே அமைந்துள்ள செய்திகளின் அறிமுகம் எடுத்துத்தரப்படுகின்றது. 'மைக்' என்ற பகுதியில் அரசியல் மற்றும் பிற பிரபலங்களின் கருத்துகள் தரப்படுகின்றன. "தமிழகம்" "நெல்லை" "மாவட்டம்" போன்ற தலைப்புகளில் செய்திகள் இடம்பெறுகின்றன. "கடிதங்கள்" என்ற பெயரில் வாசகர் கடிதம் இடம்பெற்றுள்ளது. 'களம்' என்ற பெயரில் அரசியல் செய்தி இடம்பெற்றுள்ளது. "பீட்டர்மாமா" என்ற பகுதி மக்களுக்கு அறிவுறுத்தும், அறிவூட்டும் பகுதியாக உள்ளது. "இந்தியா" "வர்த்தகம்" என்ற பெயரில் செய்திகள் வருகின்றன.

'சக்தி' என்ற பகுதியில் பெண்கள் பகுதிகள் இடம்பெறுகின்றன. "இன்று எப்படி" பகுதியில் ராசிபலன் இடம்பெறுகின்றது. 'ஜன்னல்' பகுதியில் கேலிச்சித்திரம் அமைந்துள்ளது. "திரை" என்ற பெயரில் திரைப்படத்துறை சார்ந்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. 'சின்னத்திரை' 'சினிமா' என்ற தலைப்பிலும் மேற்கண்ட துறைச் செய்திகள் வருகின்றன. "உலகம்" என்ற பெயரில் உலகச் செய்திகளும், "விளையாட்டு" என்ற பகுதியில் விளையாட்டுச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன.

கதிரவன்

1993இல் சென்னையிலிருந்து 'கதிரவன்' நாளிதழ் வெளிவந்தது. பின்னர், திருநெல்வேலி, கோவை, மதுரை ஆகிய இடங்களிலிருந்தும் வெளியானது. வெளிவந்த நாட்களில் ஓரளவு வாசகர் பரப்பைப் பெற்ற நாளிதழ்களுள் கதிரவனும் ஒன்று. இந்நாளிதழ் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பானதாகும். தற்போது இது வெளிவரவில்லை. இந்நாளிதழ் வெள்ளிக்கிழமைகளில் சிறுவர் பகுதியையும், ஞாயிற்றுக் கிழமைகளில் 'சூரியகாந்தி' என்னும் பல்சுவை இதழையும் வெளியிட்டது. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் திரைத்துறை சார்ந்த செய்திகள் அதிகமாக வெளிவந்தன. ஆன்மீகம், ராசிபலன் போன்ற பகுதிகள் இதில் இடம்பெறுவதில்லை. சனிக்கிழமைகளில் வேலைவாய்ப்பு, இளைஞர் பகுதிகள் இடம்பெற்றன. கதிரவனின் இலவச இணைப்பாக மாதபலன், கிரகப் பெயர்ச்சிப் பலன்கள் வெளியிடப்பட்டு வந்தன.

தினபூமி

14.10.1994இல் மதுரை, சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மும்பை ஆகிய இடங்களில் இருந்து தினபூமி என்னும் நாளிதழ் வெளியிடப்பட்டது. 1990இல் தொடங்கப்பட்ட அதிர்ஷ்டம் என்னும் இதழை வெளியிட்டு வந்த நிறுவனம், தினபூமியையும் வெளியிடத் தொடங்கியது. பிற தமிழ் நாளிதழ்களைப் போன்ற உள்ளடக்கங்களைப் பெற்று வெளிவரும் தினபூமியின் நெல்லைப்பதிப்பு 1997இல் வெளியிடப்பட்டது. பின்னர், சேலத்திலும், 2001இல் வேலூரிலும் இது தொடங்கப்பட்டது. வாரத்தின் அனைத்து நாட்களிலும் ஏதாவது ஓர் இயல்பினை வெளியிடும் தினபூமி தன் இணை வெளியீடுகளாகச் சிலவற்றை வெளியிடுகின்றது. ஞாயிறு பூமி (ஞாயிறு), மருத்துவ பூமி (திங்கள்), மங்கையர் பூமி (செவ்வாய்), T.V. பூமி (புதன்), கதை பூமி (வியாழன்), ஆன்மீக பூமி (வெள்ளி), மாணவர் பூமி (சனி) ஆகிய இணைப்புக்களை வெளியிடுகின்றது. விளையாட்டு பூமி, ஞாயிறு பூமி ஆகியன தனிப்புத்தகங்களாக வெளியிடப் படுகின்றன. தினபூமி நிறுவனத்திலிருந்து மாத இதழாகச் 'சாம்பியன்' என்னும் விளையாட்டு இதழும் வார இதழாக 'அருள் பூமி', 'ஜோதிட பூமி' ஆகியனவும் வெளியிடப்படுகின்றன.

தமிழகம் அல்லாத பிற மாநிலத்தில் தொடங்கப்பட்ட தமிழ் நாளிதழ் என்னும் சிறப்பினையும் பெறும் 'தினபூமி' தன் இணைப்பு இதழ்களால் காலை ஊன்றி மெல்லமெல்ல வளர்ந்து வருகின்றது.

தமிழ் முரசு

தி.மு. கழகம் சார்ந்த நாளேடுகளில் ஒன்றாக விளங்குகின்ற இதழ்களின் வரிசையில் 'தமிழ் முரசு' என்னும் புதிய நாளேடும் சேர்ந்துள்ளது. இரண்டு ரூபாய்க்கு விற்பனையாகும் இந்நாளேடு இருபது பக்கங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. "நம்பர் 1 மாலை நாளிதழ்" என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொள்கின்றது. இந்நாளேடு சென்னை, கோவை, சேலம், திருச்சி, மதுரை, நெல்லை, நாகர்கோவில், வேலூர், பாண்டிச்சேரி ஆகிய இடங்களில் பதிப்பாகி வெளிவருகின்றது. அரசியல், சமூக, வட்டாரச் செய்திகளுடன், சினிமாத்துறை போன்ற பலதுறை சார்ந்த செய்திகள் இடம்பெறுகின்றன.

உலகச் செய்திகள் "உலகம்" என்ற பெயரிலும், "சுடச்சுட" என்ற ஆர்வம் மிக்கப் பகுதியும் இடம்பெறுகின்றன. 'சின்னத் திரையில் சினிமா' 'ஷாட்' என்ற பகுதிகளில் சினிமாச் செய்திகள் இடம்பெறுகின்றன. 'ரீடர்ஸ் மெயில்' என்ற பெயரில் வாசகர் கடிதங்கள் வருகின்றன. 'இன்று' என்ற பெயரில் தங்கவிலை நிலவரம் இடம்பெறுகின்றது. 'அடேங்கப்பா' என்ற பெயரில் கேலிச்சித்திரம் இடம்பெறுகின்றது. 'சினிமா' என்ற பகுதியிலும் சினிமாச் செய்திகள் இடம்பெறுகின்றன. "கோடம்பாக்கம் கோடாங்கி" என்ற பெயரில் சினிமாச் செய்தி இடம்பெற்றுள்ளது. 'மாவட்டம்' என்ற பெயரில் மாவட்டச் செய்திகள் தரப்படுகின்றன. நடிகர், நடிகைகள் படங்கள் ஒருபக்க 'புளோ அப்'பில் தரப்படுகின்றன. 'விளையாட்டு' 'வாய்ஸ்' என்ற பெயரில் விளையாட்டுச் செய்திகள் இடம்பெறுகின்றன. "சென்னை சிப்ஸ்" என்றதொரு பகுதியும் இதில் இடம்பெற்றுள்ளது.

இலவசப் பொருட்கள்

இந்நாளேட்டுடன் தினந்தோறும் இலவசப் பொருட்கள் தரப்படுகின்றன. "சக்தி மசாலா பாக்கெட்" "சிக் ஷாம்பு" "நவரத்தின தைலம்" "ஊறுகாய்ப் பாக்கெட்டுகள்" போன்ற பல இலவசப் பொருட்கள் தரப்படுகின்றன.

கொள்கை இதழ்களும் சாதி இதழ்களும்

கொள்கை இதழ்கள்

தமிழகத்தில் அரசியலில் ஈடுபட்டவர்கள் தங்களுடைய கொள்கைகளைப் பரப்புவதற்காக இதழ்களை வெளியிட்டனர். 1848ஆம் ஆண்டிலேயே இம்முயற்சி மேற்கொள்ளப்பட்டதை அறிய முடிகின்றது. 'ஜஸ்டிஸ்' கட்சியின் சார்பில் வெளிவந்த 'திராவிடன்' என்னும் இதழ் விடுதலைக்கு முந்தைய காலத்தில் வெளிவந்த குறிப்பிடத்தக்க கொள்கை இதழாகும்.

விடுதலைக்குப் பின்னரும் பல கொள்கை இதழ்கள் தொடர்ந்து வெளிவரும் போக்குக் காணப்படுகின்றது. 1949இல் தமிழரசுக் கட்சியின் கொள்கையினைப் பரப்ப ம.பொ.சி. 'செங்கோல்' என்னும் இதழை நடத்தினார்.

பாரதம் (1958), சர்வாதிகாரி (1959), குறிஞ்சி (1961), தேசியமுரசு (1962), கடலோசை (1967) போன்றன காங்கிரஸ் கட்சியின் கொள்கைகளைத் தாங்கி வெளிவந்த இதழ்களாகும். மேலும் 'செய்தி', 'காங்கிரஸ்', 'மக்கள் குரல்', 'அலையோசை' போன்ற இதழ்களும் அவ்வரிசையில் வெளியிடப்பட்டன. போர்வாள் (1947), மாலைமணி (1949) போன்றனவும் குறிப்பிடத்தக்க கொள்கை இதழ்களாகும். திராவிடக் கொள்கைகளைப் பரப்பி வந்த 'திராவிடநாடு' என்னும் இதழ் (1942 முதல் 1963 வரை) வெளிவந்தது என்பது குறிப்பிடத் தகுந்தது.

'உண்மை', 'விடுதலை' ஆகிய இதழ்கள் ஈ.வெ.ரா. பெரியாரால் நடத்தப்பட்ட மிகப் பிரபலமான கொள்கை இதழ்களாகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையினைப் பறைசாற்றி வந்து கொண்டிருக்கும் முரசொலி 1954இல் தொடங்கப்பட்டது. அதில் வெளிவரும் கலைஞர் கடிதம் ஆதரவாளர்களைப் பெருமளவில் ஈர்த்துள்ளது. அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் 'தென்னகம்', 'சமநீதி', 'அண்ணா', 'நீதியின் குரல்', 'நமது எம்.ஜி.ஆர்' போன்ற

இதழ்களும் மறுமலர்ச்சி முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சங்கொலியும் வெளிவருகின்றன. கொள்கை இதழ்கள் மிகத் தீவிரமான பிரச்சாரக் குரலுடன் வெளிவரும் தன்மையின.

சாதி இதழ்கள்

தத்தம் சாதியாரிடம் பற்றுக் கொண்டோர் சாதி இதழ்களை வெளியிடத் தொடங்கினர். சாதி இதழ்கள் சாதி முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டவை. விடுதலைக்கு முந்தைய காலத்திலேயே 'தக்சண தீபம்', 'திராவிட மணி', 'வன்னிய குல மித்ரன்', 'விஷ்வ கர்மம்', 'அரிய வைசியாபிமானி', 'மீனவர் ஓசை', 'செங்குந்தன்', 'மறவர் குல தூதன்', 'வேளாண்மித்ரன்' ஆகிய இதழ்கள் முறையே நாடார், ஆரிய-வைசியர், செங்குந்தர், மறவர், வேளாளர் ஆகிய சாதியினரிடையே தகவல் பரிமாற்றத்திற்கு உதவி நெருக்கமான உறவை வளர்க்க முற்பட்டன (மா.சு. சம்பந்தம், மேலது, பக்.146)

சேனையர் முரசு, குயவர், சாலியர், தமிழரசி, தேவர் தூது, புலவர், மஹாஜனம், சௌராஷ்டிர மணி, வன்னிய மன்றம், கோகுல மித்திரம், யாதவச்சுடர், நகரத்தோர் குரல், ஆதி திராவிடன், தலித் முரசு, முத்தரையர் முழக்கம் வேட்டுவர் குரல், கம்பர் ஊழியன் போன்றனவும் சாதீய இதழ்களேயாகும்.

இந்திய விடுதலைக்குப் பின்னர்ச் சாதிகளும் பல மடங்குப் பல்கிப் பெருகிக் கிளைத்துள்ளன. சாதி ஒற்றுமையைக் கட்டிக் காக்கவும், சாதியினரிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தவும், இவ்விதழ்கள் வெளியிடப்படுகின்றன. திருமணத் தகவல்கள், சாதியச் சங்கங்களின் நிகழ்வுகள், மூதாதையர்களின் மகிமைகள், மூத்தோரின் சிறப்புகள் போன்றவற்றை வெளியிட்டுச் சாதிப்பற்றை வளர்க்க முயல்கின்றன.

விற்பனையை எதிர்பார்த்தும், பொருட்படுத்தியும் வெளிவராத இச்சாதி இதழ்கள் குறுகிய வாசகர் பரப்பினைக் கொண்டு விளங்குகின்றன.

சஞ்சிகைகள்

மக்களை வாசிக்கச் செய்வதில் 'சஞ்சிகைகள்' குறிப்பிடத்தக்க பணியைச் செய்து வருகின்றன. பொதுவாக, மனிதர்களிடையே வாசிக்கும் பழக்கம் குறைந்து காணப்படும் பெண்களையும், ஆண்களையும் இன்று வாசிப்பில் ஈடுபடுத்துவன சஞ்சிகைகளே. எழுத்தறிவு விகிதம் குறைந்து காணப்படும் நமது மக்களிடையே கற்றோரில் ஆண்பாலர் நாளிதழ்களைச் சொந்தமாக வாங்காவிட்டாலும் இரவலாக வாங்கியேனும் படிக்கின்றனர். கற்ற பெண்களில் பலரிடையே நாளிதழ் படிக்கும் பழக்கம் இல்லை என்றாலும் சஞ்சிகைகளை வாசிப்பதில் ஆர்வம் கொண்டுள்ளனர். இது காலங்காலமாக நடைமுறையிலிருந்து வரும் போக்கு எனலாம். ஒரு கை தோசைக்கு மாவு ஆட்டிக் கொண்டிருக்க, மற்றொரு கை ஆனந்த விகடனை விரித்துப் படித்துக் கொண்டிருக்கிறதையும், பிள்ளைத் தொட்டிலுக்கு ஒரு கையும், பார்க்கிறோம், என்று டி.கே.சி. பெண்களின் சஞ்சிகை வாசிப்புப் பழக்கத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடக்கக் காலத்தில் பல்சுவை இதழ்கள், விகட இதழ்கள், கதை இதழ்கள் ஆகிய மூவகைகளை மட்டுமே காணமுடிகிறது. கட்டுரை, கதை, கவிதை, நாடகம், சிறுகதை, துணுக்குகள் ஆகியவற்றுடன் சில நடப்புச் செய்திகளையும் சேர்த்துப் பல்சுவை இதழ்கள் வெளியிடப்பட்டன. 1878இல் சென்னை துரைத்தனக் கல்விச் சங்கத்தினர் வெளியிட்ட 'ஜனவினோதினி' இவ்வகையினதே. இதில் சிறுகதை, விஞ்ஞானக் கட்டுரை, வரலாற்றுக் கட்டுரை, தொடர் கதை, அறிவுரைகள், சிறுவர்களுக்கான சிறுகதை போல்வன வெளியிடப்பட்டன. 'ஜனவிநோதினி'யைத் தொடர்ந்து 'பெண்மதி போதினி' (1891), 'விவேக சிந்தாமணி' (1908), 'வித்யாபானு' (1909), 'லோகமித்ரன்' (1913) போன்ற பல்வேறு சஞ்சிகைகள் வெளிவந்தன.

1915இல் 'ஆனந்த போதினி' என்னும் மாத சஞ்சிகை வெளிவந்தது. இதுவே இன்றைய சஞ்சிகைகளுக்குப் பெரிதும் முன்னுதாரணமாய் இருந்தது எனலாம். நாகவேடு முனுசாமி முதலியார் இதனை வெளியிட்டார். புதின எழுத்தாளரான

ஆரணி குப்புசாமி முதலியார் இதன் ஆசிரியராய் விளங்கினார். புனைவில்லாக் கூறுகளுடன், புனைவுக் கூறுகளையும் இணைத்து வெளியிட்ட 'ஆனந்த போதினி' சிறுவர், மகளிர் ஆகியோருக்கும் தனிப் பகுதிகளையும் வெளியிட்டது. 'பால பாரதி', 'பஞ்சாமிர்தம்', 'மதிபூரணி', 'ஆனந்த குண போதினி' போன்றவையும் அதனை ஒத்த சஞ்சிகைகளே.

விகடத்தை மட்டும் வெளியிட்டு வந்த 'மகா விகடதூதன்' அன்றைய பொழுதுபோக்குச் சஞ்சிகைகளுள் ஒன்று. கதைகளை மட்டுமே வெளியிடுவனவாகக் 'கதா மஞ்சரி', 'மனோரஞ்சனி', 'கதாரஞ்சனி' போன்றவை விளங்கின.

1926இல் தோன்றி 1928இல் எஸ்.எஸ். வாசன் கைக்கு மாறிய 'ஆனந்த விகடனின்' வரவு தமிழ்ச் சஞ்சிகை உலகில் ஒரு மைல் கல்லாகும். அக்காலச் சஞ்சிகைகளில் காணப்பட்ட 'அறிவுறுத்தல்' பங்கைக் குறைத்து, விகடங்கள், கதைகள் ஆகியவற்றையும் தன்னுள் அடக்கிக் கொண்டு ஒரு வேறுபட்ட உள்ளடக்கத்துடன் இவ்விதழ் வெளிவரத் தொடங்கியது. கனமான கூறாகிய கட்டுரையைக் குறைத்து, கனமற்ற கூறுகளாகிய நெகிழ்வுரை, துக்கடா போன்றவற்றையும் திரைப்படம், படப்பக்கங்கள், கதைகள் போன்ற பொழுது போக்குக் கூறுகளையும் மிகுதியாக்கும் புதிய வடிவில் வெளிவந்த ஆனந்த விகடன், தமிழ்ச் சஞ்சிகைகளின் வழிகாட்டியாய் மாறியது. ஆனந்த விகடனுக்குப்பின் வெளிவரும் இன்றைய பல்வேறு சஞ்சிகைகள் இப்போக்கையே பின்பற்றுகின்றன. ஆனந்த விகடனை அடுத்து வெளிவந்து இன்று விற்பனையில் முன்னணியில் இருக்கும் குமுதமும் தொடக்கத்தில் ஆனந்த விகடனையே பின்பற்றியது. எனவே தமிழ்ச் சஞ்சிகைகளின் உள்ளடக்க வடிவத்திற்கு ஆனந்த விகடன் ஒரு வாய்பாடு வகுத்தது என்பது ஏற்றுக் கொள்ளத்தக்கது.

சஞ்சிகைகளின் வகைகள்

சஞ்சிகைகளைச் சிறப்புச் சஞ்சிகைகள், பொதுச் சஞ்சிகைகள் என்று இருவகைகளாகப் பிரிக்கலாம். குறிப்பிட்ட வகை வாசகர்க்கு மட்டும் உரியவற்றைச் 'சிறப்புச் சஞ்சிகைகள்' என்றும், எல்லா வாசகர்க்கும் உரியவற்றைப் 'பொதுச் சஞ்சிகைகள்' என்றும் குறிப்பிடலாம்.

பொதுச் சஞ்சிகைகள்

வாசகரிடையே இன்று பெருமளவில் வாசிக்கப்பட்டு வருவன பொதுச் சஞ்சிகைகளே. பிரச்சார நோக்கில் பிறந்து படிப்படியாகப் பலவகைப்பட்டதாய்ப் பெருகி வளர்ந்திருக்கும் 'தமிழ்ச் சஞ்சிகை' இதழியலில் மிகச் சிறந்த வளர்ச்சியை எட்டியுள்ளது. விடுதலைப் போராட்டக் காலத்தில் தொண்டு நோக்கில் வெளிவந்த சஞ்சிகைகள் நாளடைவில் வியாபார நோக்கில் திசை திரும்பின. பெருகிவரும் சஞ்சிகைகளில் பல வியாபாரப் போட்டியில் சிக்கிக் கிடக்கின்றன. பலத்த போட்டிகளுக்கிடையே விற்பனையில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலையில் சஞ்சிகைகள் தம் பொறுப்பிலிருந்து நழுவுகின்றன. தொடக்கக் காலத்தில் பொதுச் சஞ்சிகைகள் பலவும் மாதாந்திர வெளியீடுகளாகவே இருந்தன. 1928இல் தொடங்கி இன்று வரை தொடர்ந்து வெளிவரும் ஆனந்த விகடன், குமுதம், கல்கி ஆகியன குறிப்பிடத்தக்கன. சஞ்சிகை இதழியலில் பல புதிய போக்குகளையும், உத்திகளையும் அறிமுகப்படுத்திய ஆனந்த விகடன் இன்று தகவல் தொடர்பு ஊடகங்களில் முக்கியப் பங்காற்றி வருகின்றது. எஸ்.எஸ்.வாசன் 1928இல் தொடங்கிய ஆனந்த விகடனின் இன்றைய ஆசிரியர் எஸ். பாலசுப்ரமணியம் ஆவார்.

1941இல் எழுத்தாளர் ரா.கிருஷ்ணமூர்த்தியால் தொடங்கப்பட்ட வாரச் சஞ்சிகையான கல்கி புகழ்பெற்ற தமிழ்ச் சஞ்சிகையாகும். கல்கியின் எழுத்துகளாலேயே சாதனை படைக்கும் கல்கி, தற்போதும் வெளிவந்து கொண்டிருக்கிறது. தற்போதைய இதன் ஆசிரியர் கிராஜேந்திரன் ஆவார்.

குமுதம் 1947இல் மாதமிருமுறையாகத் தொடங்கி மாதம் மும்முறை, பின்னர் வாரச் சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இதன் தொடக்கக்கால ஆசிரியர் எஸ்.ஏ.பி. அண்ணாமலை. கௌரவ ஆசிரியராக ஆர்.எம்.அழகப்பாச் செட்டியார் விளங்கினார். தற்போது எழுத்தாளர் அரசு இதன் பொறுப்பாசிரியராக உள்ளார்.

பலதரப்பட்ட வாசகர்களையும் கவர்ந்து ஈர்க்க வல்ல ஆற்றல் பெற்ற குமுதம் இன்று தமிழ்ச் சஞ்சிகை விற்பனையில் முதலிடம் வகிக்கிறது. கூடுதல் பக்கங்களைக் குறைந்த விலைக்கு அளிக்கிறது என்ற தனிப்பெருமை குமுதத்திற்கு உண்டு.

1977இல் சா.விசுவநாதனை ஆசிரியராகக் கொண்டு 'குங்குமம்' வெளிவந்தது. ஆனந்த விகடன், கல்கி, குமுதம் போன்ற மற்றொரு வாரச் சஞ்சிகை வெளிவர வேண்டும் என்ற எண்ணத்திலேயே குங்குமம் வெளியிடப்பட்டது.

1978இல் மணியனை ஆசிரியராகக் கொண்டு 'இதயம் பேசுகிறது' வெளிவரத் தொடங்கியது. ஆனந்தவிகடன் ஆசிரியர் குழுவில் பணியாற்றிய மணியன் ஏற்கெனவே வெளிவந்து கொண்டிருக்கும் வாரச் சஞ்சிகைகளைப் போலவே இதயம் பேசுகிறது சஞ்சிகையை வெளியிட்டார்.

1978இல் குங்குமத்திலிருந்து விலகி 'சாவி' என்ற பெயரிலேயே தனி வாரச் சஞ்சிகையைச் சாவி வெளியிடத் தொடங்கினார்.

கல்கண்டு 1948இல் மாதம் இருமுறையாக இருந்து, பின் வாரச் சஞ்சிகையாக மாறியது. தமிழ்வாணன் தொடங்கிய இச்சஞ்சிகை முதலில் குழந்தைப் பத்திரிக்கையாக இருந்து பின் பலரும் படிக்கும் வாரச் சஞ்சிகையாக மாறியது. பொழுது போக்குக் கூறுகளைக் குறைத்துத் துணுக்குச் செய்திகளையும், அதிசயச் செய்திகளையும் வெளியிடுவது 'கல்கண்டு' சஞ்சிகையின் தனிச்சிறப்பாகும். தற்போது லேனா தமிழ்வாணன் இதன் ஆசிரியராக விளங்குகிறார்.

1932இல் தொடங்கப்பட்ட 'கலைமகள்' மாதச் சஞ்சிகையாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இதன் கௌரவ ஆசிரியராக உ.வே. சாமிநாதையர் பொறுப்பு வகித்தார். சிறந்த கட்டுரைகள், இலக்கியப் படைப்புகள் ஆகியவற்றை வெளியிடும் இச்சஞ்சிகையின் ஆசிரியராக கி.வா. ஜகந்நாதன் நீண்ட நாட்கள் விளங்கினார்.

1952இல் தினத்தந்தி நிறுவனத்தால் 'வாராந்திரி ராணி' என்ற பெயரில் அ.மா. சாமியை ஆசிரியராகக் கொண்டு இவ்விதழ் பிறந்தது. குமுதத்திற்கு அடுத்தபடியாக விற்பனையில் இரண்டாவது இடத்தைப்பெறும் 'ராணி' தன்னை ஒரு குடும்பப் பத்திரிக்கை என்று அறிமுகம் செய்து கொள்கிறது. பெரிய எழுத்துகள், வித்தியாசமான பக்க அமைப்புக் கொண்ட இந்தச் சிறிய சஞ்சிகை நடுத்தரவர்க்கத்தினரைப் பெரிதும் கவருகிறது. 'அன்புள்ள அல்லி', கேள்வி-பதில் பகுதி இளைஞர்களை அதிக அளவில் ஈர்த்துள்ளன.

மாதாந்திர வெளியீடுகள்

தொடக்கக் காலத்தில் கதைகளை மட்டுமே வெளியிட்ட இதழ்கள் இருந்தன. அவற்றைப் போலவே தற்காலத்திலும் மாதாந்திர வெளியீடுகளாகக் கதைச் சஞ்சிகைகள் வெளிவருகின்றன. மாதம் ஒரு புதினத்தை வெளியிடும் பழக்கத்தை 'ராணி' சஞ்சிகை தொடங்கியது. 'ராணிமுத்து' என்னும் பெயரில் மாதமொரு புதினம் வெளிவரத் துவங்கியது. தற்போது புற்றீசல் போலப் பல மாதாந்திர வெளியீடுகள் வெளிவருகின்றன. ராணிமுத்துவைத் தொடர்ந்து 'குங்குமம்' நிறுவனம் 'சிமிழ்' என்ற பெயரிலும், சாவி நிறுவனம் 'மோனா', 'பூவாளி' ஆகிய பெயர்களிலும், இதயம் நிறுவனம் 'மணியன்' எனும் பெயரிலும் மாதாந்திரக் கதைச் சஞ்சிகைகளை வெளியிட்டுள்ளன.

சஞ்சிகைகளில் உள்ளடக்கம்

சஞ்சிகைகள் கதை, கட்டுரை, நாடகம், கவிதை போன்ற இலக்கியப் பகுதிகளையும், செய்திகள், கருத்துப்படம், தலையங்கம், சினிமா விமர்சனம், துணுக்குகள் போன்ற செய்திப்பகுதிகளையும், வெளியிடுகின்றன. இவற்றுடன் மதிப்புரை, நகைச்சுவைத் துணுக்குகள், திரையுலகச் செய்தி போன்றவை இணைவதுண்டு. சஞ்சிகைகள், படங்கள், அட்டை ஆகியவற்றிற்குச் சிறப்பிடம் அளிக்கின்றன.

கட்டுரை

சஞ்சிகையில் வெளிவரும் கட்டுரையை, 'கட்டுரை' என்றும், 'நெகிழ்வுரை' என்றும் வகைப்படுத்தலாம். ஆழமான பகுதியைக் 'கட்டுரை' என்றும், கனமற்ற பகுதியை 'நெகிழ்வுரை' என்றும் குறிப்பிடலாம்.

சஞ்சிகைக் கட்டுரை ஒரு சிறந்த நோக்கத்தை மையமிட வேண்டும். சிறந்த கட்டுரைகளை எழுதுவதற்குத் தொடர்ச்சியான வாசிப்பு அவசியம். கட்டுரையாசிரியர் தாம் எழுதப் புகும் சஞ்சிகையின் தேவையை அறிந்து எழுதுதல் அவசியம். அதுவே பாதி வெற்றியைத் தரும். அதற்கேற்பக் கருத்துகளைத் தொகுத்துக் கட்டுரை படைத்தல் சிறப்புறும். கட்டுரையாளர் எவ்வகை வாசகர்களுக்கு எழுதுகிறோம் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். சஞ்சிகைக் கட்டுரைகள் காலத்திற் கேற்றாற் போல எழுதப்படுகின்றன. சான்றாகக் குடிநீர்ப் பஞ்சம், மின்சாரக்

கட்டுப்பாடு போன்றவை இருக்குமானால் அவற்றையொட்டி எழுதப்படுகின்றன.

நெகிழ்வுரை (Feature)

ஆர்வத்தைத் தூண்டக்கூடிய பொருளைப் பற்றி மக்களின் சுவைக்கேற்ப விளக்கமாக எழுதும் வடிவம் நெகிழ்வுரை எனப்படும். நெகிழ்வுரை பல வாசகர்களின் கவனத்தை ஈர்க்க வல்ல அன்றாடச் செய்திகளையோ, பருவகாலப் பொருள்களைப் பற்றியோ அமையும். வாசகருக்கு அறிவுறுத்திப் பொழுது போக்குக்கு உதவுவதே நெகிழ்வுரையின் நோக்கமாகும்.

நெகிழ்வுரை எழுதுவதில் சஞ்சிகைகள், பேட்டி, குழுப்பேட்டி, கேள்வி-பதில் போன்ற உத்திகளைப் பயன்படுத்துகின்றன. தற்காலச் சஞ்சிகைகளில் இப்போக்கு பெரிதும் காணப்படுகிறது. செய்திகள் கூட நெகிழ்வுரைகளாக வழங்கப்படுகின்றன. நாளிதழ்ச் செய்திகளை விட விரிவாகச் சற்றே தளர்வுடன் செய்திகள் நெகிழ்வுரையாக்கப்படுகின்றன. இன்றைய சஞ்சிகைகள் இதைச் செய்கின்றன. இது செய்தி நெகிழ்வுரை (News feature) எனப்படும்.

பிற இலக்கியப் பகுதிகள்

சஞ்சிகைகளில் கதை, நாடகம், கவிதை ஆகிய இலக்கியப் பகுதிகள் பெரும்பங்கு வகிக்கின்றன. இதழ்ப்பதிவாளர் (Press Registrar) அலுவலகத்தில் காணப்படும் இதழ் விவரக் குறிப்புகளில் பல சஞ்சிகைகள் "இலக்கிய இதழ்கள்" (Literary Journals) என்றே குறிப்பிடப்படுகின்றன. இந்த இலக்கிய விபரங்கள் இன்றிச் சஞ்சிகைகள் இல்லை எனலாம்.

சஞ்சிகைகளில் தொடர்கதை ஓர் இன்றியமையாப்பகுதி. வாரந்தோறும் வெளிவரும் கதையினை அறியும் ஆர்வத்தால் வாசகர்கள் வாரந்தோறும் படிக்க விழைந்து நாளடைவில் நிரந்தர வாசகர்களாகி விடுவர். எனவே 'தொடர்கதை' சஞ்சிகைக்கு நிரந்தர வாசகர்களைப் பெற்றுத்தரும். விரைவாக வாசிப்பதற்குரிய பகுதியாக விளங்குவதால் சிறுகதைகளும் வாசகர்களை ஈர்க்கின்றன. பேருந்து, புகை வண்டிப் பயண நிறுத்தங்களில் நேரம் செலவழிக்க வேண்டிய கட்டாயங்களில் சிறுகதைகள், பொழுதுபோக்குக் கருவிகளாகின்றன. இவை தவிர்ந்த எஞ்சிய,

நாடகம், கவிதை ஆகியன அந்தந்த விருப்பமுடைய வாசகரை நிறைவு செய்ய உதவும்.

சஞ்சிகைகளின் கதைப்பகுதிகள் சமூகம், குடும்பம் சார்ந்து அமைகின்றன. ஜனரஞ்சகத் தன்மை கொண்ட உரையாடல்கள், மறைபொருள், விறுவிறுப்பு ஆர்வம் போன்றனவே வாசகரை ஈர்க்கும். காதல், குடும்ப உறவுகள் போன்றன வாசகரை மகிழ்விக்க வல்லன. ஒரு பக்கக் கதைகளுக்கு நல்ல வரவேற்பு உண்டு. இன்றைய சஞ்சிகைகள் ஒரு பத்திச் சிறுகதைகளையும் வெளியிட்டு வாசகர்களின் அவசர உலகிற்கு ஏற்பச் செயல்படுகின்றன.

செய்திப் பகுதிகள்

அரசியல், சமூகம், பொருளாதாரம், விளையாட்டு, கலை போன்ற செய்திகள் சஞ்சிகைகளில் இடம்பெறுகின்றன. கருத்துப் படங்கள் செய்திகளை வெளியிடும் மற்றொரு வாயிலாகும். செய்திகள் சில சஞ்சிகைகளில் கருத்துப்படங்களாக வெளியிடப்படுகின்றன. கிண்டலையும், கேலியையும் உட்பொதிந்து வலிமையான கருத்துப்படங்களைச் சஞ்சிகைகள் வெளியிடுதல் இன்றைய தேவை. கருத்துப்படங்களில் பெரும்பாலும் அரசியல் நிகழ்வுகள் இடம்பெறுவதுண்டு. உலக, தேசிய, வட்டாரச் செய்திகள், கருத்துப்படங்களில் விமர்சிக்கப்படுகின்றன. கருத்துப் படங்கள் சிறந்த உருவகங்கள், பொருத்தமான தலைப்பு, படவிளக்கம், சிறந்த உரையாடல் போன்றவற்றுடன் அமைய வேண்டிய அவசியம் உள்ளது.

சஞ்சிகைகளின் தலையங்கம் பொதுவாகச் சிறியனவாக இருக்கும். சஞ்சிகையில் ஒதுக்கப்படும் இடம், சஞ்சிகை வெளியிடும் நாள் ஆகியவற்றிற்கேற்பச் சஞ்சிகைகளின் தலையங்கம் அமைவதுண்டு. தலையங்கம், எதைப்பற்றி எப்படி அமைய வேண்டும் என்பதைச் சஞ்சிகை ஆசிரியர் முடிவு செய்வார். ஏனெனில் தலையங்கம் என்பது சஞ்சிகை வெளியீட்டாளரின் அல்லது ஆசிரியரின் கருத்துகளைத் தெளிவாக வகுத்துரைக்கும் கட்டுரையாகும். ஒவ்வொரு சஞ்சிகையும் தனக்கென்று சில விதிமுறைகளையும் கொள்கைகளையும் வகுத்துக் கொள்ளும். அவற்றிற்கேற்பத் தலையங்கம் அமையும். தமிழ்ச் சஞ்சிகைகள் பெரும்பாலும்

தலையங்கப் பகுதியை வெளியிடுவதில்லை. ஆனந்த விகடன், கல்கி ஆகியன விதிவிலக்கு. குமுதம் ஒரே வழித் தலையங்கத்தை வெளியிடுகின்றது.

மதிப்புரைகள்

ஒரு நிகழ்ச்சி அல்லது செயல்நிலையினை ஆழ்ந்து ஆராய்ந்து முடிவான கருத்தைக் கூறுவது மதிப்புரை எனப்படும். சஞ்சிகைகளின் உள்ளடக்கக் கூறுகளுள் மதிப்புரையும் ஒன்றாகும். நூல், இசை, நடனம், நாடகம், திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி ஆகியவை பற்றி மதிப்புரைகள் வெளிவருகின்றன. சஞ்சிகைகள் தம் விருப்பத்திற்கும், வசதிக்கும் ஏற்றாற்போல் மதிப்புரைகளைத் தெரிவு செய்கின்றன. அனைத்துச் சஞ்சிகைகளும் அனைத்து மதிப்புரைகளையும் வெளியிடுவதில்லை. தொடக்கக் காலத்திலிருந்தே தமிழ்ச் சஞ்சிகைகள் மதிப்புரைகளை வெளியிட்டு வருகின்றன. எனினும் காலந்தோறும் அவை மாறி வந்துள்ளன. மதிப்புரைகள் திறனாய்வுப் போக்கில் அமையலாம். மதிப்புரைகளில் நிறைகளைச் சுட்டல், குறைகளைக் கூறல் ஆகிய இரண்டும் தேவை. தமிழ்ச் சஞ்சிகைகளில் திரைப்பட மதிப்புரைகளுக்கு முக்கியத்துவம் மிகுதி.

நகைச்சுவைத் துணுக்குகள்

நகைச்சுவை மனிதருக்கு இன்பத்தை அளிக்கிறது. மன இறுக்கத்தைத் தளர்த்தி மகிழ்ச்சியான மனநிலையையும் நல்ல சூழலையும் உருவாக்கவல்லது. மனிதருக்கு நகைச்சுவையிடம் உள்ள ஈடுபாட்டைச் சஞ்சிகைகள் பயன்படுத்திக் கொள்கின்றன. ஒரு நகைச்சுவைத் துணுக்கைப் புரிந்து கொண்டாலே எவரும் மகிழ்ச்சி அடைவர். தற்காலச் சஞ்சிகைகளில் நகைச்சுவைத் துணுக்குகளுக்கு முக்கியத்துவம் இல்லை என்றே கருத இடமுண்டு. ஆனந்த விகடன் மட்டும் இதற்கு மாறுபட்டுத் தொடக்கக் காலத்தில் இருந்தே நகைச்சுவைத் துணுக்குகளுக்குத் தனி இடம் அளித்து வருகிறது.

திரைப்படச் செய்திகள்

சஞ்சிகைகளில் முக்கியப்பகுதியாகத் திரைப்படப் பகுதி விளங்குகிறது. தமிழ்ச் சஞ்சிகைகள் புறக்கணிக்க முடியாத பகுதியாக இது விளங்குகிறது. சஞ்சிகைகள் தழுவுத் திறன்

வாய்ந்தவை. பிற தகவல் சாதனங்களைத் தமக்கு ஏற்றாற்போல் மாற்றும் ஆற்றல் பெற்றவை. எனவே திரைப்படம் என்னும் சாதனத்தைத் தனக்கு ஏற்றாற்போல் மாற்றிக் கொண்டு அவற்றைப் பற்றிய தகவல்களைச் சஞ்சிகைகள் வெளியிடுகின்றன. திரைப்படப் பகுதி என்பது சஞ்சிகைகளில் இன்றியமை யாததன்று. இருப்பினும் தற்போதைய சூழலில் தவிர்க்க முடியாதது. திரைப்படப்பகுதியை வெளியிடாத சஞ்சிகையே இல்லை.

படங்கள்

சஞ்சிகைகளில் படங்கள் முக்கிய இடத்தை வகிக்கின்றன. அவை சஞ்சிகைகளின் பக்கங்களுக்கு எழிலூட்டுவது மட்டுமின்றி, வாசகர்களின் கண்களுக்கு விருந்தளித்துக் கருத்திற்கும் மகிழ்வளிக்கின்றன.

உலக அளவில் முதல் முதலில் ஜெர்மனியில் பட இதழியல் அறிமுகமானது. இந்தியாவில் "இல்லஸ்டிரேடட் வீக்லி ஆஃப் இந்தியா (Illustrated Weekly of India) பட இதழியலுக்கு வித்திட்டது.

சஞ்சிகைகளில் படங்கள் ஒவ்வொரு உள்ளடக்கக் கூறிலும் இடம் பெற வேண்டும். உள்ளடக்கப் பகுதிகளுக்கு உயிரூட்டுவன படங்களேயாம். தற்காலச் சஞ்சிகைகள் பட வெளியீட்டில் மிகுந்த கவனம் செலுத்துகின்றன. ஒரு சிறந்த படம் படைப்பாற்றல், தனித்தன்மை, தூண்டுதல், செயல்திறமை, ஈர்ப்பு ஆகியவற்றைக் கொண்டதாக விளங்க வேண்டும். படங்களுக்குப் படத்தலைப்பு மிக முக்கியமானதாகும். சாதாரணப் படத்தையும், படத்தலைப்பு சிறப்பானதாக்கும். படத்தலைப்புகள் சுருக்கமாகத் தெளிவாக அமைய வேண்டும். படங்கள் முதற்பார்வையிலேயே செய்திகளைத் தருவதாக இருக்க வேண்டும்.

சஞ்சிகைக்கு எது தேவை என்பதைச் சஞ்சிகை ஆசிரியரே முடிவு செய்வது நல்லது. படத்தெரிவில் தேவையானவற்றைத் தெரிவு செய்வதைவிடத் தேவையற்றதைத் தவிர்ப்பது மிக முக்கியம்.

அட்டை

சஞ்சிகைகளில் அட்டை மிக இன்றியமையாதது. வாசகர்களைத் தம்மிடம் ஈர்த்துச் சஞ்சிகையை வாங்கத்

தூண்டுவதில் அட்டைக்குப் பெரும்பங்குண்டு. சஞ்சிகை அட்டையும், அட்டை சார்ந்த பக்கங்களும் தனித்தன்மை பெற்று அமைய வேண்டும். தொடக்கக் காலத்தில் சஞ்சிகைளின் அட்டைகளில் இயற்கைக் காட்சிகளையும் இலக்கியக் காட்சிகளையும் வெளியிட்டனர். இன்றைய சஞ்சிகைகளில் மகளிரே அட்டைகளில் இடம்பெறுகின்றனர்.

வண்ணம்

சஞ்சிகைகளில் பக்கங்கள் வண்ணங்களால் வாசகர்களை ஈர்க்க வேண்டும். வண்ணம் புகைப்படங்களில், ஓவியங்களில், விளம்பரங்களில் இருக்கலாம். வண்ண விளம்பரங்கள், வண்ணம் பொருந்திய பக்கங்கள் போன்றவற்றை வெளியிடுவதைப் பற்றி ஆசிரியர் குழுவினர் ஒருங்கிணைந்து முடிவெடுப்பது சிறப்பாகும். இன்றைய சஞ்சிகைகள் வண்ணப் பக்கங்களுக்கு முக்கியத்துவம் தருவதால் ஒன்று முதல் நான்கு வண்ணங்கள் வரை படங்களில் இடம்பெறுகின்றன.

பதிப்பித்தல்

சஞ்சிகை நாளிதழ்ப் பதிப்பித்தலில் இருந்து வேறுபட்டது. இச்சஞ்சிகை வாரம் ஒரு முறை, மாதமிருமுறை, மாதம் ஒரு முறை, வாரமிருமுறை, காலாண்டுக்கு ஒரு முறை, அரையாண்டிற்கு ஒரு முறை, ஆண்டுக்கொருமுறை என்றவாறு குறிப்பிட்ட இடைவெளிகளில் வெளிவரும். சஞ்சிகை வெளியீட்டில் கால அவகாசம் கிடைப்பதால் இவற்றில் உள்ளடக்கங்களை நன்கு ஆழமாக ஆராய்ந்து தெரிவு செய்யலாம். பல மாதங்களுக்கு முன்பே கூடச் சஞ்சிகைப் பகுதிகளைத் தயாரித்து வைக்கலாம். சஞ்சிகைகள் அண்மைக் காலச் செய்திகளை வெளியிட ஆர்வம் காட்டுகின்றன. வாசகர்கள் எதிர்பார்ப்பிற்கேற்ற புதிய உத்திகளைக் கையாண்டு விரைவாக வெளியிட முயலும் போக்கு உள்ளது.

விற்பனை

வாசகர்களுக்கு அறிவிக்கவும், பொழுது போக்கவும் சஞ்சிகைகள் வெளிவந்த போதிலும் உற்பத்திப் பொருட்களை விளம்பரப்படுத்துவதும் அதன் மூலம் வருமானம் ஈட்டுவதும் அவற்றின் முக்கியமான நோக்கங்களுள் ஒன்றாகும். விற்பனைப் பரவல் இருந்தால்தான் விளம்பரங்கள் பெருகும். விளம்பரங்கள்

பெருகினால் தான் இதழ் வளர்ச்சி அதிகரிக்கும். முக்கியச் சிக்கலே விற்பனைப் பரவல் தான். அடுத்த வெளியீடு வரும் முன் வார அல்லது மாத இடைவெளிக்குள் முந்தைய வெளியீட்டுப்படிகள் (copies) விற்பனை செய்யப்பட வேண்டும். அவ்வாறு விற்கப்படவில்லை எனில் அதிக அளவில் நட்டமே ஏற்படும். எனவே விற்பனை, விளம்பரம் ஆகிய இரண்டிலும் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகிறது. வழுவழுப்பான தாள்களில் வண்ணங்களில் விளம்பரங்களை வெளியிட்டுச் சஞ்சிகையின் புறத்தோற்றத்திற்கு மெருகூட்டிச் சஞ்சிகையை விற்றல் அவசியம்.

பொதுவாகச் சஞ்சிகைகள் இருமுறைகளில் விற்கப்படுவதுண்டு. அவை அஞ்சல் விற்பனை, தனிப்படி விற்பனை ஆகியனவாகும். தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், இந்தி மொழிகளில் விற்பனையில் முன்னணியில் நிற்கும் சஞ்சிகைகளுடன், எந்த நாளிதழும் நெருங்கி வர முடியாத அளவிற்குச் சஞ்சிகைகளின் விற்பனை பெருகியுள்ளது என்பது இரண்டாவது பத்திரிக்கைக் குழுவின் (Press Commission) கூற்றாகும்.

சஞ்சிகைகளில் சுதந்திர எழுத்தாளர்களே (Freelance writers) பல உள்ளடக்கப் பகுதிகளை எழுதுகின்றனர். கட்டுக்குள் சிக்காமல் கருத்துகளைச் சுதந்திரமாக எழுதும் வாய்ப்பு இவர்களுக்கு உண்டு. முன்தயாரிப்புக் கருத்துகளைத் திரட்டுதல், தலைப்பைத் தெரிவு செய்தல் போன்ற சுதந்திரம் இவர்களுக்குண்டு. இவை தவிர, சஞ்சிகையின் ஆசிரியர் குழு, கருத்துப் படம், தலையங்கம், பதிப்பித்தல் போன்றவற்றைக் கவனிக்கும்.

வாசகர் கடிதங்கள்

ஒவ்வோர் இதழிலும் இடம்பெறுகின்ற உள்ளடக்கங்களைப் பற்றி வாசகர்கள் கருத்துத் தெரிவிக்கின்ற "வாசகர் கடிதம்" பகுதியும் ஒவ்வோர் இதழிலும் வெளியிடப்படுகின்றது.

வரையறுக்கப்பட்ட ஓர் அமைப்புடன் தமிழ்ச் சஞ்சிகைகள் இன்று வெளிவந்து கொண்டுள்ளன. சஞ்சிகைகளுக்கு நிலையான வாசகர்களும் இருக்கிறார்கள்.

சிறப்பு இதழ்கள்

சிறுவர் இதழ்கள்

குழந்தைகளும், முதியவர்களும் ஒரு சமுதாயத்தில் மதித்துப் போற்றிப் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். ஒரு சமுதாயத்தின் வளர்ச்சியைக் குழந்தைகள் தீர்மானிக்கிறார்கள். குழந்தைகள் சற்று வளர்ந்து சிறுவர்கள் நிலையை எட்டும் காலத்தில் அவர்களின் அறிவாற்றலையும், ஆளுமை வளர்ச்சியையும் நன்கு உருவாக்கும் வகையில் பல தகவல்கள் அவர்களைச் சென்று சேர வேண்டிய அவசியம் உள்ளது. இந்த வகையில் இதழ்களுக்குத் தனிப்பொறுப்பும், பணியும் உள்ளன. இதனால் சிறுவர் இதழ்கள் இதழுலகில் சிறப்பிடம் பெறுகின்றன.

தமிழில் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே சிறுவர் இதழ்கள் வெளிவந்துள்ளதைக் காண முடிகிறது. பாலதீபிகை என்னும் சிறுவர் இதழ் தமிழில் தோன்றிய முதல் சிறுவர் இதழாகக் கருதப்படுகிறது. விடுதலைக்குப் பிந்தைய காலத்தில் சிறுவர் இதழ்களில் கவனம் செலுத்தப்படும் போக்கு இருந்திருப்பதைக் காண முடிகிறது.

1947ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் அணில் என்னும் சிறுவர் இதழ் சென்னையில் வெளியிடப்பட்டது. வை.கோவிந்தன் என்பாரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த இந்த இதழில் தமிழ்வாணன் கூட்டாசிரியராகப் பொறுப்பேற்றிருந்தார். 8 பக்க அளவில் 25,000 பிரதிகள் வரை அச்சடிக்கப்பட்ட அணில் இருவண்ணத்தில் வெளிவந்தது. எளிமையான விறுவிறுப்பான தமிழ் நடையில் வெளிவந்த இவ்விதழ் பல புதுமைகளைச் செய்தது. அணில் அண்ணன் என்ற பெயரில் தமிழ்வாணன் சிறுவர்களை மிகவும் கவர்ந்தார். இதில் வெளிவந்த அறிவியல் விந்தைகள் குறிப்பிடத்தக்க வாசகர் கூட்டத்தை ஈர்த்தன. சிறுவர்களுக்காகக் குழந்தைகள் செய்தி என்ற தினசரியையும் வை.கோவிந்தன் வெளியிட்டார்.

விடுதலைக்குப் பிந்தைய பத்தாண்டுக் காலத்தில் ஏறக்குறைய நூறு சிறுவர் இதழ்கள் தோன்றின. சிறுவர்களை

ஈர்க்கக் கூடிய உறவுப்பெயர்களைக் கொண்டும், முறைப்பெயர்களைப் பெற்றும் இவை வெளிவந்தமை மட்டுமின்றிப் பறவைகள், சிறுவர்கள் விரும்பும் விலங்கினங்கள் போன்றவற்றின் பெயரிலும் வெளிவந்தன. சிறுவர்களின் விளையாட்டு ஆர்வத்தின் அடிப்படையிலும் சிறுவர் இதழ்கள், பெயர் பெற்றன என்று அறிய முடிகிறது. (ப. வேலம்மாள், சிறுவர் இதழ்கள் ஆய்வு, முனைவர் பட்ட ஆய்வேடு, ப.16)

'அம்மா', 'பாட்டி', 'மாமா', 'அம்பி', 'சிறுமி', 'முயல்', 'மயில்', 'கிளி', 'பாலர் சோலை', 'பாலர் பூங்கா', 'பாலர் முரசு', 'சிறுவர் மலர்', 'சிறுவர் சோலை', 'சிறுவர் உலகம்' போன்ற சிறுவர் இதழ்கள் குறிப்பிடத்தக்கன. மேலும் முத்து, யுவன், ரேடியோ, டமாரம், டிங்டாங், கல்கண்டு, வானர சேனை. சித்திரக் குள்ளன், கிங்லி, கரும்பு, துப்பாக்கி, டுமீல், போன்ற பெயர்களிலும் சிறுவர் இதழ்கள் வெளிவந்தன. சிறுவர்களுக்குப் பிடித்த 'மிட்டாய்' 'கோமாளி' என்ற பெயர்களிலும் சிறுவர் இதழ்கள் வெளிவந்தன.

விடுதலைக்குப்பின் வெளிவந்த சிறுவர் இதழ்களுள் குறிப்பிடத்தக்கது 'அம்புலி மாமா'. 1947இல் நாகிரெட்டி, சக்கரபாணி ஆகியோரின் முயற்சியில் வெளிவந்த இவ்விதழ் சிறுவர் இதழ்களுள் தனி இடத்தைப் பெற்றது. குறிப்பிட்டுப் பேசத் தகுந்த அளவில் வெளிவரும் அம்புலிமாமா தமிழைத் தவிரப்பிற இந்திய மொழிகளிலும் வெளிவருவது குறிப்பிடத்தக்கது. இக்காலக்கட்டத்தில் பேசும்பட நிறுவனத்தால் பாலபாரதி என்னும் சிறுவர் இதழ் வெளியிடப்பட்டது. அதனைச் சிறந்த தமிழ் அறிஞர் சுப்பிரமணியன் ஆசிரியப் பொறுப்பேற்று நடத்திவந்தார். 1950இல் கலைமகள் நிறுவனத்தின் சார்பில் 'கண்ணன்' என்னும் இதழ் வெளிவந்தது. 22 ஆண்டுகள் வெளிவந்த இவ்விதழ் சிறுவர்களைச் செம்மைப்படுத்துவதில் தனி ஆர்வம் செலுத்தியது. இதழ் வெளியீட்டில் கண்டறிந்த வாசகர்களைக் கொண்டு 'கண்ணன் கழகம்' என்ற அமைப்பை உருவாக்கிச் சமூக சேவை செய்தது என்று அறியமுடிகிறது. மேலும் கண்ணன் இதழில் வெளிவந்த படைப்புகளைக் கொண்டு 'கண்ணன் கதம்பம்' என்ற தொகுப்பைக் குழந்தை இலக்கிய மாநாட்டில் வெளியிட்டமையும் சிறுவர் இதழ்கள் வரலாற்றில் குறிப்பிடத்தக்கது. 1961ஆம் ஆண்டு நடைபெற்ற குழந்தை இலக்கிய மாநாட்டில் குழந்தை இலக்கியப் படைப்பிற்குப் பெரும்

பங்களிப்பைச் செய்த கண்ணன் இதழ் 1971இல் தன் வெளியீட்டை நிறுத்திக் கொண்டது, சிறுவர் இதழ்கள் வரலாற்றில் குறிப்பிடத்தக்க பின்னடைவாகும். இதழ் வெளியீட்டாளர் ராமரத்தினம் அவ்விதழ் நிறுத்தப்பட்ட நிலையில் மனம் வருந்தியமை பதிவு செய்யப்பட வேண்டிய நிகழ்வாகும்.

அழ. வள்ளியப்பாவை ஆசிரியராகக் கொண்டு 1951இல் சாந்தி அச்சகத்திலிருந்து வெளிவந்த 'பூஞ்சோலை' என்னும் சிறுவர் இதழ் சிறுவர் இதழ் வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டிய இன்னொரு இதழாகும். மூன்று பொங்கல் மலர்களை வெளியிட்ட பெருமையையுடைய 'பூஞ்சோலை' பல புதி உத்திகளால் சிறுவர்களின் ஆர்வத்தைத் தூண்டியது.எனினும் மூன்றரை ஆண்டுக்காலம் மட்டுமே அதனால் வெளிவர முடிந்தது. பூவண்ணன் என்பவர் 1954இல் கரும்பு என்னும் சிறுவர் இதழை வெளியிட்டார். இரண்டணா விலையில் வார இதழாக வெளிவந்த இவ்விதழ் தன் அட்டையில் கவிதைகளை வெளியிட்டுச் சிறுவர்கள் ஆர்வத்தை அதிகப்படுத்தியது.

சற்றேறக்குறைய இதே காலக்கட்டத்தில் வாண்டுமாமா, வானவில், சிவாஜி, சிறுவர் மலர், கிண்கிணி போன்ற பல்வேறு இதழ்களை வெளியிட்டார் சௌந்தர் என்பவர். மாத இதழாக 'அழகர் சோலை' என்னும் இதழையும், மாதமிருமுறை இதழாகக் 'கண்ணா மூச்சி' என்னும் இதழையும் வெளியிட்டார். எஸ். வஜ்ரவேலுவின் பொறுப்பில் வெளிவந்த 'பூந்தோட்டம்' மற்றொரு சிறுவர் இதழாகும். 1966இல் பெருஞ்சித்திரன் 'தமிழ்ச்சிட்டு' என்னும் சிறுவர் இதழைத் தொடங்கினார்.

குழந்தைகளின் முக்கியத்துவம், சிறுவர்களின் முறையான வளர்ச்சி, உலகில் சிறுவர்களைப் பற்றி எழுந்த முன்னேற்றக் கருத்துகள், சிறுவர்க்கு அளிக்கப்பட்ட கல்வி வாய்ப்பு, தொழில்நுட்ப வளர்ச்சி போன்றவற்றின் காரணங்களினால் 1970களில் சிறுவர் இதழ்களின் வெளியீட்டில் முனைப்புத் தோன்றியது. இதன் விளைவாக 'அணில்' இதழ் 1972இல் மீண்டும் வெளிவரத் தொடங்கியது. புவிவேந்தன் என்பவர் இதனை வெளியிட்டார். 'மத்தாப்பு' என்னும் பெயரில் மகிழ்ச்சிக் கண்ணன் சிறுவர் இதழொன்றை வெளியிட்டார்.

1972இல் கல்கி நிறுவனம் 'கோகுலம்' என்னும் சிறுவர் இதழை மாதம் இருமுறை வெளியிட்டது. இது சிறுவரிடையே

மிகப் பிரபலமானது. அதே ஆண்டில் தி.ஜ.ர. 'தியாகபாரதி' என்ற சிறுவர் இதழை வெளியிட்டார். அதன் பிறகு 1979இல் சிவகாசியிலிருந்து 'ரத்னபாலா' என்னும் சிறுவர் இதழ் வெளியிடப்பட்டது. முல்லை தங்கராசன் ஆசிரியர் பொறுப்பேற்று வெளிவந்த இந்தச் சிறுவர் இதழ் 96 பக்கங்களைக் கொண்டு பல்லோரையும் கவர்ந்தது. பத்தாண்டுகள் வரை வெளிவந்து சிறுவர்களின் உள்ளத்தைக் கவர்ந்த 'ரத்னபாலா' மாவட்ட மலர்களை வெளியிட்டது.

சிறுவர் இதழ்கள் வெளியீட்டில் வாண்டுமாமாவிற்குத் தனியிடம் உண்டு. 1980இல் மாத இதழாக மணிப்பாப்பாவை வெளியிட்ட அவர் 'பாப்பாமஞ்சரி' 'பூந்தளிர்' (1984) இதழ்களையும் பொறுப்பேற்று நடத்தினார். 1988இல் அடைக்கலம், பூரம் ஆகியோர் இணைந்து 'சின்னக் கண்ணன்' என்ற இதழை வெளியிட்டனர்.

'சுட்டி விகடன்' வரவு சிறுவர் இதழ்கள் வெளியீட்டில் குறிப்பிடத்தக்கது. வெகுஜனப் பத்திரிக்கையான ஆனந்த விகடன் நிறுவனத்திலிருந்து 1999இல் நவம்பர் 14ஆம் தேதியன்று குழந்தைகளுக்காகச் 'சுட்டிவிகடன்' வெளியிடப்பட்டது. மிகப்பெரிய, செல்வாக்குள்ள ஒரு சஞ்சிகை நிறுவனத்தின் பின்னணிப் பலத்துடன் சுட்டிவிகடன் நல்ல விளம்பரத்தைப் பெற்று வெளிவருகிறது. பா. சீனிவாசனை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் இதன் பொறுப்பாசிரியராக ஞாநி இருப்பது குறிப்பிடத்தக்கது.

சிறுவர்களுக்கிடையே அறிவியல் சிந்தனைகளைப் பரப்பவேண்டுமென்ற நோக்கத்தில் அறிவியல் இதழ்கள் வெளிவந்தன. 1960களில் 'இளம் விஞ்ஞானி' என்ற பெயரில் சிறுவர் அறிவியல் இதழ் வெளியிடப்பட்டது. 1985இல் தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தின் சார்பில் 'துளிர்' என்னும் அறிவியல் இதழ் தொடங்கப்பட்டுத் தொடர்ந்து வெளிவந்து கொண்டுள்ளது.

இதழாசிரியர்கள்

சிறுவர் இதழ்களைப் பொறுப்பெடுத்து வெளியிட்டவர்களும், அவற்றில் எழுதியவர்களும் குறிப்பிடத்தக்கவர்களாக விளங்குகின்றனர். 'முத்து' இதழை நாரா.நாச்சியப்பன் வெளியிட்டு வந்த காலத்தில்

பன்மொழிப்புலவர் கா.அப்பாத்துரை, அறிஞர் அண்ணா, பாரதிதாசன் போன்றோர் அதில் எழுதினர். 'ரேடியோ' என்னும் இதழ் சிறுவர்களிடையே மிகவும் பிரபலமாக இருந்தது. இதனை என்சௌந்திரராஜன் வெளியிட்டார். புகழ்பெற்ற எழுத்தாளர் ரா.கி.ரங்கராசன் 'வானர சேனை' என்னும் இதழின் பொறுப்பை ஏற்றிருந்தார். சித்திரக்குள்ளன் என்னும் இதழைச் சந்தனு வெளியிட்டார். கிங்லி என்னும் இதழ் குமுதம் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது. தன் தனிப்பாணியினால் வாசகர்களைக் கவர்ந்த தமிழ்வாணன் கல்கண்டு இதழின் பொறுப்பேற்றார். சிறுவர் இதழ்களில் கொலை, கொள்ளைக் கதைகளைப் புகுத்திய புதிய முயற்சியினை இவர் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. 'பூஞ்சோலை' இதழினை அழ.வள்ளியப்பா கௌரவ ஆசிரியராகப் பொறுப்பேற்று நடத்திய போது திரு.வி. கல்யாண சுந்தரனார், மு.வரதராசனார், நாமக்கல் கவிஞர், ராபி. சேதுப்பிள்ளை போன்ற பல தமிழறிஞர்கள் அதில் எழுதினர்.

விலை

சிறுவர் இதழ்கள் மிகவும் குறைந்த விலைக்கு விற்கப்பட வேண்டும் என்ற கருத்து வெளியீட்டாளர்கள் பலரிடமும் இருந்தது என்பதை அறிய முடிகிறது. 'மாமா' என்னும் இதழ் ஒரு தம்பிடிக்கு விற்கப்பட்டது. ரேடியோ, டமாரம், முத்து, டிங்டாங் போன்ற இதழ்கள் அரைஅணாவுக்கு விற்கப்பட்டன.

சுட்டிவிகடன் இன்று பெருமளவில் விளம்பரப் படுத்தப்பட்டு வருகிறது. மாதம் இரு முறை வெளிவரும். இது பதினைந்து ரூபாய்களுக்கு விற்கப்படுகிறது. சிறுவர் இதழ் என்ற நிலையில் இதன் விலை அதிகமே. துளிர் மாத இதழாக வெளிவந்து ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதனால் ஓரளவு வாங்கும் சக்தியுடையவர்களும் இதனை வாங்கிப் படிக்க முடியும் எனினும் இது விளம்பரப்படுத்தப் படவில்லையாதலால் போதிய விற்பனைச் சுழற்சி இதற்கில்லை. குறைந்த விலையில் இன்னும் பல சிறுவர் இதழ்கள் வெளியிடப்பட வேண்டிய அவசியம் உள்ளது.

அளவு

சிறுவர் இதழ்கள் சிறிய வடிவில் வெளிவர வேண்டுமெனக் கருதப்பட்டது. 'கையகலம்' அளவில் 'மாமா'

என்னும் சிறுவர் இதழ் வெளிவந்தது. இதற்கு மாறான கருத்துக் கொண்ட சிலரும் இருந்தனர். அதன் விளைவாகத் தற்போதைய ஜனரஞ்சக இதழ்களின் அளவில் முப்பத்திரண்டு பக்கங்களைக் கொண்டதாகக் கல்கண்டு, வானரசேனை, சித்திரக்குள்ளன், கிங்லி போன்ற இதழ்கள் வெளிவந்தன. தற்போது வெளிவரும் சிறுவர் இதழ்கள் அளவினைப்பற்றிய கவனம் எடுத்துக் கொள்வதில்லை.

உள்ளடக்கம்

சிறுவர் இதழ்கள் கதைகள், தொடர் கதைகள், படக்கதைகள், துணுக்குகள், புதிர்கள், போட்டிகள், கேள்வி-பதில்கள், விடுகதைகள், விளையாட்டுக்கள், கைவேலை போன்ற பல உள்ளடக்கக் கூறுகளைப் பெற்றுத் திகழ்கின்றன. சிறிய கட்டுரைகளையும் ஓவியம் வரைந்து பழகும் பக்கத்தினையும் இவற்றில் காண முடிகிறது. படக்கதைகள் பேசும் படக்கதைகளாக அமைந்து வண்ணங்களில் வெளிவரும் முறை உள்ளது. கதைகள் சிரிப்பூட்டுவனவாகவும், நீதி உரைப்பனவாகவும் உள்ளன. சிறிய நாடகங்களும் அவ்வாறே அமைகின்றன. எளிமையான பாடல்கள் இனிய இராகங்களைக் கொண்டு அமைகின்றன. கட்டுரைகளில் அறிவியல், அறிவுரை, வரலாறு, இலக்கியம், பயணம் போன்ற பலவகைகள் காணப்படுவது மட்டுமின்றித் தன்னம்பிக்கை விடாமுயற்சி, விளையாட்டு போன்ற திறன்களை வளர்க்கத்தக்க வகையிலும் வெளிவருகின்றன. கேள்வி-பதில் பகுதியில் வாசகர் பங்கேற்புக்கு வாய்ப்புத் தரப்படுகிறது. அது தவிர வாசகர் கடிதமும் இடம்பெறுவதைக் காணமுடிகிறது.

உத்திகள்

சிறுவர் இதழ்கள் தமக்கெனச் சில உத்திகளைக் கையாள்கின்றன.

1. சான்றாகப் படைப்புகள் யாவும் மிகச் சிறியனவாக அமைக்கப்படுகின்றன. ஒரு பக்கம் அல்லது அரைப்பக்கம் வரை வெளிவரும் இவை அளவில் சிறியனவாக அமைந்து படிப்பதற்கு ஆர்வமூட்டுகின்றன.

2. படைப்புகளில் படங்கள் இடம் பெறுகின்றன. படங்களற்ற சிறுவர் இதழ் படைப்புக்களைக் காண்பதரிது.

3. ஒவ்வொரு படைப்பும் தலைப்பினைப் பெறுவது குறிப்பிடத்தக்கது. ஒரு கருத்தைப் புலப்படுத்துவதாகவோ எடுத்துக் கூறுவதாகவோ தலைப்பு அமைகிறது.

4. எழுத்துகளைத் தெரிவு செய்தல் சிறுவர் இதழ்களில் குறிப்பிடத்தக்க உத்தியாகும். பெரிய எழுத்துகள் பலவித வடிவங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

5. ஓர் படைப்பில் மிகக் குறைந்த வரிகளே பயன்படுத்தப்படுகின்றன.

6. இதிகாசங்கள், புராணங்கள் போன்றவற்றில் காணப்படும் கதைகள் எடுத்தாளப்படுகின்றன.

7. விலங்குகளைப் பற்றிய கதைகள் இடம் பெறுகின்றன.

8. சிறுவரே கதை மாந்தராக, தலைமைப் பாத்திரங்களாக இடம் பெறுதலைக் காணலாம்.

9. விலங்குகள், பறவைகள் பேசுவது போலப் படைப்புகள் உருவாக்கப்படுகின்றன.

10. வாசகர்களுக்குப் பரிசு தருதல் உண்டு.

11. படக்கதைகள் யாவும் பேசும்படக் கதைகளாக அமைகின்றன.

நாளிதழ் இணைப்புகள்

பலதரப்பட்ட வாசகர்களையும் கவர வேண்டும் என்ற அடிப்படையில் குழந்தைகளையும் சேர்க்க வேண்டிய தேவை நாளிதழ்களுக்கு நேர்ந்தது. விற்பனையில் ஏற்படும் போட்டியைச் சமாளித்துத் தங்களைத் தக்க வைத்துக் கொள்ள தினமலர், தினத்தந்தி, தினமணி ஆகிய நாளிதழ்கள் சிறுவர்களுக்காகத் தனிப் பகுதிகளை ஒதுக்கத் தொடங்கின. தினமலர் 'சிறுவர் மலர்' என்றும், தினத்தந்தி 'தங்க பாப்பா மலர்' என்றும், தினமணி 'சிறுவர் மணி' என்றும் சிறுவர்க்கான வெளியீடுகளை வெளியிடுகின்றன. நாளிதழுடன் இணைத்து வெளியிடாமல் தனியாக எடுத்து வைத்துப் படிக்கும் வகையில் மிகச் சிறிய தனிப் புத்தக வடிவில் இவை வெளியிடப்படுகின்றன. இலவச இணைப்புகளாக வெளிவரும் இவற்றிற்குக் குழந்தைகளிடையே பலத்த வரவேற்பு உள்ளதை அறிய முடிகிறது. குழந்தைப்

பருவத்தைக் கடந்த பின்னரும் கல்லூரியில் பயிலும் காலத்திலும்கூடப் பலர் இவற்றைத் தொடர்ந்து படிப்பது குறிப்பிடத்தக்கது.

நாளிதழ்களின் இலவச இணைப்புகளில் குழந்தைகளுக்கு ஏற்ற உள்ளடக்கங்கள் இடம்பெறுகின்றன.

போக்கு

சிறுவர் இதழ்கள் ஆர்வத்துடன் தொடங்கப்படுவது உண்மையே. எனினும் அவை தொடர்ந்து வெளிவருவதில் தொடக்கக் காலம் முதல் இன்றுவரை சிக்கல் இருந்து கொண்டே இருக்கிறது. இதனால் சிறுவர் இதழ்கள் போதுமான வளர்ச்சியை எட்டவில்லை என்றே கருத இடமுண்டு. 25,000 பிரதிகள் வரை விற்பனையான 'அணில்' முதல் பல இதழ்கள் மிகக் குறுகிய ஆண்டுக்காலமே உயிர் வாழ்ந்திருக்கின்றன. 1979இல் தோன்றிய பாலமித்ரா அறுபதாயிரம் பிரதிகள் வரை விற்றுப் பின் 2001 ஜூலை மாதத்திற்குப் பிறகு நின்றது. 1984இல் தோன்றிய 'பூந்தளிர்' 1990இல் நின்றது. பின்னர் 1991இல் தோன்றி 1995இல் நின்றது. மிகப்பரவலாகப் பேசப்படும் சிறுவர் இதழான அம்புலிமாமா வும் இந்தப் போக்கிற்கு விதிவிலக்காகவில்லை என்பதைக் காணமுடிகிறது. 1947இல் தோன்றித் தமிழ் மொழியில் அறுபதாயிரம் பிரதிகளை எட்டிய அம்புலிமாமா 1998 ஏப்ரலில் நின்று பின் 1999 டிசம்பரில் மீண்டும் வெளிவந்தது எனில் சிறுவர் இதழ்கள் வெளிவருவதில் காணும் சிக்கல்கள் ஒருவாறு உணரப்படலாம்.

'இதயம் பேசுகிறது' சஞ்சிகை, குழந்தைகள் ஆண்டைக் கொண்டாடிய போது சிறுவர்கள் ஒரு வேண்டுகோள் விடுத்தனர் என்ற தகவலைத் தினமணி தீபாவளி மலரில் காணமுடிகிறது.

"எங்களைப் போன்ற சிறுவர்கள் படித்துப் பயன்பெறும் படியாக ஒரு நல்ல பத்திரிக்கை இன்று இல்லை. எங்களுக்குப் புரிகிற உபயோகப்படக்கூடிய விஷயங்களுடன் ஒரு ஸ்பெஷல் பத்திரிக்கை ஆரம்பியுங்களேன்" என்பது அவர்கள் வேண்டுகோள். அவ்வாறாயின் வெளிவந்து கொண்டிருக்கும் சிறுவர் இதழ்கள் அவர்களை நிறைவுறச் செய்யவில்லை என்பது தானே பொருள். வாசிக்கும் பழக்கம் பொதுவாகவே குறைந்துவரும் இக்காலக்கட்டத்தில் மின்னணுச் சாதனங்கள் குழந்தைகளின்

வாசிக்கும் பழக்கத்திற்கு மிகப் பெரும் எதிரிகளாக உள்ளன என்றே கூறலாம். இருபத்தி நான்கு மணிநேரமும் ஏதாவது நிகழ்ச்சியினை வழங்கிக் கொண்டிருக்கும் தொலைக்காட்சிப் பெட்டி, பிரம்மாண்டமான விளம்பரங்களுடன் வெளிவரும் திரைப்படங்கள், விளையாட்டுக் காட்சிகள் போன்ற யாவும் குழந்தைகளைப் படிப்பதில் இருந்து பிரிக்கின்றன.

மேலும் இன்றைய கல்வி முறை, பாடத்திட்டம், தேர்வுமுறை யாவும் படிக்கும் பழக்கத்தை வளர்ப்பனவாகவோ, தூண்டுவனவாகவோ இல்லை. அவற்றில் காணப்படும் கடுமையான நடைமுறைகள் பொது வாசிப்பிற்கு எதிராகச் செயல்படுவனவாக உள்ளன. இத்தனைச் சிக்கல்களையும் மீறிவரும் சூழ்நிலையில் மக்களின் வாங்கும் சக்தியும் பெரிய கேள்விக் குறியாக அமைந்து விடுகிறது. இது போன்ற காரணிகள் சிறுவர் இதழ்களின் வளர்ச்சிக்குப் பாதகங்களாகின்றன.

மகளிர் இதழ்கள்

மகளிர் இதழ்கள் தமிழ் இதழுலகில் புதுமை என்று கூற இயலாது. ஏனெனில் விடுதலைக்கும் முன்னரே பல மகளிர் இதழ்கள் தமிழில் தோன்றின. பெண்கள் முன்னேற்றம் என்பது கனவாகவே இருந்த 19ஆம் நூற்றாண்டில் அதை நனவாக்க நினைத்தவர்களின் முயற்சியில் பல மகளிர் இதழ்கள் தோன்றின. முதல் முதலாக 1883இல் 'சுகுண போதினி' என்னும் மாத இதழ் வெளி வந்தது. அக்காலக்கட்டத்திலேயே மகாராணி (1887) மாதர் மித்திரி (1887) மாதர் மனோரஞ்சனி (1891) பெண்மதிபோதினி (1899) போன்ற இதழ்கள் வெளிவந்தன (சு.அ. இராமசாமிப் புலவர், இதழ் விளக்க வரிசை)

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மகளிர் இதழ்களின் வெளியீட்டில் புதியமாற்றம் ஏற்பட்டது. மகளிருக்கான இதழ்களை மகளிரே நடத்த முனைந்தனர். தங்கள் சிக்கல்களை, தங்கள் தேவைகளைத் தாங்களே எழுதுவது என்னும் போக்கு தோன்றியது. அதன் விளைவாகத் தமிழ் மாது (1906), பெண்கல்வி (1912), சிந்தாமணி (1924), தமிழரசி (1929), சதாநதி (1936), மாதர் மறுமணம் (1936) ஆகிய இதழ்களை முறையே ஸ்வப்பநேஸ்வரி, ஆர்.தாயரம்மாள், வி.பாலம்மாள், கமலாபதி சந்திரராஜு, ஞா.பா. சதானந்த அம்மாள், மு. மரகதவல்லி ஆகிய பெண்கள்

பொறுப்பேற்று நடத்தினர். மகளிர் இதழ்களான சக்கரவர்த்தினி (1905) இலட்சுமி (1923) கிரகலெட்சுமி (1937) ஆகியனவற்றை முறையே எம்.எஸ். நடேசன், கே.எஸ். முத்தையா, எஸ்.கிருட்டிணன் ஆகிய ஆடவர்கள் வெளியிட்டனர். ஆக விடுதலைக்கு முந்தைய காலக்கட்டத்தில் மகளிர் இதழ்களைப் பெரும்பாலும் மகளிரே பொறுப்பேற்று நடத்தினர் என்னும் உண்மை புலனாகின்றது.

விடுதலைக்குப்பின்

விடுதலைக்குப் பிந்தைய இதழாகப் பார்வைக்கு முதலில் கிடைப்பது 1947இல் 'பாசரசு' என்ற இதழ் எம்.எஸ்.பாசு, சரசுவதி பாசு ஆகியோரால் வெளியிடப்பட்டது. இது பெண்ணால் நடத்தப்பட்ட இதழ். அதே ஆண்டில் 'புதுமைப் பெண்' என்ற மகளிர் இதழைக் குகப்ரியை என்ற புனைபெயர் பெற்ற சுவர்ணாம்பாள் சென்னையிலிருந்து வெளியிட்டார்.

24x17½ செ.மீ. அளவில், 64 பக்கங்களைக் கொண்ட 'புதுமைப் பெண்' இதழ் 8 அணாவிற்கு விற்கப்பட்டது. இவ்விதழ் பெண்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்டது என்பதை அதன் பெயரே உணர்த்தக் காணலாம். குழந்தை வளர்ப்பு, வாழ்க்கை முறை, கதைகள் போன்ற உள் அடக்கங்களைப் பெற்று வெளிவந்த இவ்விதழில் தமிழ்நாட்டின் மிகச் சிறந்த இலக்கிய ஆசிரியைகளும், எழுத்தாளர்களும் எழுதி வந்தனர். (கழகப் புலவர் குழு, பழந்தமிழ் இதழ்கள் ஒரு பார்வை, ப.ஆ7)

விடுதலைக்குப் பிந்தைய காலக்கட்டத்தில் மகளிர் இதழ்கள் வெளியீட்டில் தொய்வு காணப்படுகிறது. 1950 முதல் 1975 வரை குறிப்பிடத்தக்க மகளிர் இதழ் எதுவும் வெளிவந்ததாகத் தகவல் இல்லை. இவ்விடைப்பட்ட காலத்தில் பெண்களின் வாழ்க்கையில் மிகப்பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. பெண்களுக்கான உரிமைகள் முன்வைக்கப்பட்டன. பெண் சமத்துவம் வலியுறுத்தப்பட்டது. பெண்கள், கல்வி கற்கப் பெருவாரியாகப் புறப்பட்டனர். அடங்கி இருத்தல் தேவையில்லை என்னும் குரல் கேட்கத் தொடங்கியது. மருத்துவம், நீதித்துறை, கல்வித் துறை, கலையுலகம், காவல் துறை, தொழில் துறை, அறிவியல் துறை என்று பல்வேறு தளங்களில் கல்வி பெறவும் பணியாற்றவும் பெண்கள் நுழைந்தனர். இந்தக் காலச் சூழ்நிலை

மங்கிக் கிடந்த மகளிர் இதழ் வெளியீட்டை மறுபடி உயிர்ப்பித்தது எனலாம்.

'வாராந்திர ராணி' என்னும் இதழ் மகளிர் இதழாக வெளிவந்து பரவலான வாசகர் பரப்பைப் பெற்றது. 1964இல் வாராந்திரி ராணி 1,31,464 பிரதிகள் விற்பனை ஆனதாகத் தெரிகிறது.

1975ஜூலை மாதத்தில் 'மங்கை' என்னும் மகளிர் இதழ் வெளியிடப்பட்டது. மாத இதழாக இது வெளிவந்து பெண்களைப் பற்றிய பல தகவல்களை வெளியிட்டது. தற்போது இவ்விதழ் வெளிவரவில்லை. எனினும் மகளிர் இதழுலகில் தனக்கென ஒரு பெயரை நிறுவியது.

1975 ஏப்ரல் மாதத்தில் 'மங்கையர் மலர்' என்னும் மாத இதழ் மகளிருக்காக வெளிவந்தது. கல்கி நிறுவனத்திலிருந்து வெளியிடப்படும் இவ்விதழ் வாசகரிடையே நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது.

1996 செப்டம்பர் மாதத்தில் 'லேடீஸ் ஸ்பெஷல்' என்னும் இதழும், 1997 டிசம்பரில் 'பெண்மலர்' என்னும் இதழும், மகளிருக்காக வெளிவந்தன. 1998இல் 'பெண்மணி' என்னும் இதழும், விகடன் நிறுவனத்திலிருந்து 'அவள் விகடனும்' வெளிவரத் தொடங்கின. குமுதம் நிறுவனம் 'சிநேகிதி' என்னும் மகளிர் இதழை வெளியிடுகிறது. இவை தவிரப் 'பெண்ணே நீ' 'தேவி' போன்ற இதழ்களும் வெளிவருவதைக் காண முடிகிறது. இவை தவிர 'மகளிர் சிந்தனை' என்னும் மகளிர் இதழ் இடது சாரி அரசியல் சார்பில் வெளியிடப்பட்டு வருகிறது.

தற்போது பெண்களின் செயல்பாடுகள் பன்முகப் பட்டுவிட்டன. பெண்கள் பல்வேறு தளங்களில் இயங்கத் தொடங்கி விட்டார்கள். மேலும் சமூகத்தில் காணப்படும் அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்கள் பெண்களின் வாழ்வில் புதிய திருப்பங்களையும், மாற்றங்களையும் கொணர்ந்துள்ளன. எனவே மகளிரைப்பற்றிப் பேசுவதற்கும், எழுதுவதற்கும், சிந்திப்பதற்கும், சிந்திக்கத் தூண்டுவதற்கும் அவசியம் நேர்ந்துள்ளது. இந்தக் காரணங்களால் 1970 களிலிருந்த மகளிர் இதழ்கள் மீளவும் வெளிவரத் தொடங்கி உள்ளன எனலாம்.

'மங்கையர் மலரை'த் திருமதி மஞ்சுளா ரமேஷ் ஆசிரியப் பொறுப்பேற்று நடத்தி வருகிறார். இது மாத இதழாக வெளிவருகிறது. கிரிஜா ராகவன் என்பாரின் ஆசிரியப் பொறுப்பில் 'லேடீஸ் ஸ்பெஷலும்' பாப்பா உமாநாத்தை ஆசிரியராகக் கொண்டு 'மகளிர் சிந்தனையும்' வெளி வருகின்றன. சரவணா ஸ்டோர்ஸ் நிறுவனத்தாரால் வெளியிடப்படும் 'பெண் மலர்' இதழின் ஆசிரியர் மா.முருகன் ஆவார். 'பெண்மணி' ஜீரா. என்பவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவருகிறது. ஆனந்த விகடன் நிறுவனத்தினரால் வெளியிடப்படும் 'அவள் விகடன்' ஆசிரியப் பொறுப்பில் வெளிவருகிறது. குமுதம் நிறுவனம் வெளியிடும் சிநேகிதியும் மங்கையர் இதழாக உள்ளது.

மகளிர் இதழ்கள் பொதுவாக ஒரே விதமான உள்ளடக்கங்களையே வெளியிடுகின்றன. இவற்றுள் 'மகளிர் சிந்தனை' மட்டும் இதற்கு விதிவிலக்கு. ஏனைய எல்லாம் கதை, கட்டுரை, அழகுக் குறிப்புகள், ஆடை அலங்காரம் பற்றிய துணுக்குகள், கேள்வி-பதில் பகுதிகள், ஜோதிடக் குறிப்புகள், வீட்டு உபயோகக் குறிப்புகள், சாதனை மகளிரின் பேட்டிகள் போன்றனவற்றை மகளிருக்காக வெளியிடுகின்றன. மகளிர் சிந்தனை மட்டும் விளம்பரங்களை வெளியிடுவதில்லை.

உள்ளடக்கம்

மகளிர் இதழ்களில் வெளிவரும் தகவல்கள், படைப்புகள் யாவும் மகளிரைப் பற்றியே அமைகின்றன. தலையங்கம், கதைகள், தொடர் கதைகள், கட்டுரைகள், பேட்டிகள், கவிதைகள், துணுக்குகள், பயன்பாட்டுக் குறிப்புகள் போன்ற பல உள்ளடக்கக் கூறுகள் அவற்றில் காணப்படுகின்றன.

மங்கையர் மலர், மகளிர் சிந்தனை, பெண் மலர், பெண்மணி, லேடீஸ் ஸ்பெஷல், பெண்ணே நீ வாழ்க ஆகிய மகளிர் இதழ்கள் தலையங்கங்களை வெளியிடுகின்றன. இவை பெண்களைப் பற்றிய கருத்துகளையும், சமூகப் பிரச்சினைகளையும் தலையங்கங்களில் எழுதுகின்றன. மகளிர் சிந்தனை தவிரப் பிற மகளிர் இதழ்களில் வெளிவரும் உள்ளடக்கக் கூறுகளுள் குறிப்பிடத் தகுந்தது சிறுகதை ஆகும். வாசகர்கள் மிக விரும்பிப்படிப்பதால் சிறுகதைகள் அவற்றில் மிகுதியும் இடம்பெறுகின்றன. மகளிர் இதழ்களின் சிறுகதைகள் பலவும் காதல், கற்பு, பெண் கல்வி, விதவைப் பெண்டிர், மாமியார்

கொடுமை, அலுவல் மகளிர், மாறிவரும் பெண்ணினப் பார்வை போன்ற பல கதைக்கருக்களை மையமிட்டு அமைகின்றன. அவற்றில் இடம்பெறும் கட்டுரைகளும், அழகிப் போட்டி, தொலைக்காட்சித் தொடர், திரைப்படம் போன்ற பெண்களால் மிக விரும்பிப் படிக்கப்படும் விசயங்களைப் பற்றியே அமைகின்றன. கட்டுரைகளுள் குறிப்பிடத்தகுந்தது மருத்துவக் கட்டுரையாகும். மருத்துவக் கட்டுரைகள் இடம்பெறாத மகளிர் இதழே இல்லை. அடுத்தபடியாக வாசகர்களைப் பெரிதும் ஈர்ப்பன குழந்தை வளர்ப்புப் பற்றிய கட்டுரைகளாகும்.

மகளிர் இதழ்கள் பேட்டிகளுக்கு முக்கியத்துவம் தருகின்றன. சாதனை மகளிர் பற்றிய பேட்டிகள், திரைப்பட நடிகையரின் பேட்டிகள் அவற்றில் மிகுதியும் இடம் பெறுகின்றன. நகைச்சுவைத் துணுக்குகள் மட்டுமின்றிச் சிந்தனைத் துணுக்குகளும் அவற்றில் இடம்பெறுகின்றன.

சோதிடம், கோலம், சமையல், அழகுக் குறிப்புகள், வீட்டு உபயோகக் குறிப்புகள் ஆகியன மகளிர் இதழ்கள் அனைத்திலும் வெளிவரும் உள்ளடக்கக் கூறுகளாகும். மேலும் தையல், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு, வீட்டை அலங்கரித்தல், மகளிர் ஒப்பனை போன்றனவும் முக்கிய இடம்வகிக்கின்றன. இவை தவிரத் திருமணத் தகவல்களும் முக்கிய உள்ளடக்கக் கூறாகும். 'திருமண மலர்' என்று மங்கையர் மலரும், திருமண மேடை, மணமகள் தேவை என்று பெண்மணியும் திருமணத் தகவல்களை வெளியிடுகின்றன.

அட்டை

மகளிர் இதழ்கள் வாசகர்களைக் கவரும் வகையில் முகப்பு அட்டையினை அமைக்கின்றன. அட்டை பொதுவாக மூன்று அடிப்படைகளில் அமையும் என்கிறார் ரோலன்ட் இ. உல்ஸ்லி (Roland E. Wolseley, The Magazine World, p.179)). அவை தாளின் தரம், தாளின் அளவு, தாளின் உள்ளடக்கம் என்பனவாம். மங்கையர் மலர், தேவி, வாராந்தரி ராணி ஆகியன அட்டைகளுக்கென்று தனியான தாள்களைப் பயன்படுத்துவது இல்லை. பிற இதழ்கள் நல்ல வழவழப்பான அட்டைகளை அமைத்து அவற்றில் வண்ண ஓவியங்களை, நிழற்படங்களை, வரைபடங்களை வெளியிட்டு வாசகர்களை ஈர்க்கின்றன. மகளிர்

இதழ்களின் அட்டைகளைக் குடும்பப் பெண்டிர், பெண் பிரமுகர்கள், மாணவியர், நடன மகளிர், நடிகையர், சாதனைப் பெண்கள், விளம்பர மாடல் பெண்கள், அலுவல் மகளிர் போன்ற பலதரப்பட்ட பெண்கள் அலங்கரிக்கின்றனர். அட்டையின் விள்க்கத்தை இதழ்கள் உட்பகுதியில் விளக்கும் போக்குக் காணப்படுகிறது.

உருவம்

மகளிர் இதழ்கள் ஒவ்வொன்றும் பல்வேறு அளவுகளில் வெளிவருகின்றன. அவள் விகடன் 253x182 மி.மீட்டர் அளவில் வெளிவருகிறது. சிநேகிதி 235x164 மி.மீட்டர் அளவில் வெளிவருகிறது, மங்கையர்மலர் 233x148 மி.மீட்டர் அளவிலும், மகளிர் சிந்தனை 192x126 மி.மீட்டர் அளவிலும் வெளிவருகின்றன. இவ்வாறு ஒவ்வொரு இதழும், தனது பக்கங்களின் அளவு, அச்சு இயந்திர முறைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு அளவில் வெளிவருகின்றது.

எழுத்துகளின் அளவு

இதழ் அமைப்பில் முக்கிய இடம்பெறுகின்ற எழுத்துகள் அளவினைப் (Point) புள்ளி என்ற அலகில் குறிப்பிடுவர். கைகளால் அச்சுக் கோர்க்கப்பட்ட காலத்தில் 9 முதல் 12 புள்ளி வரை இருந்தன. இன்று கணினி மூலம் அச்சுக் கோர்க்கும் கணினி எழுத்துகள் 4 முதல் 650 புள்ளி வரை உள்ளன. 4.4½, 5.5½ என்று ½ point இடைவெளி எழுத்துகள்; பின்னர் மறுதோன்றி (offset) அச்சு இயந்திரங்கள் மூலம் அச்சிடப்படுகின்றன. சிறுவர் முதல் வயதான வாசகர்கள் வரை அனைவரும் இயல்பாக வாசிக்கும்படியும் தெளிவாக இருக்கும்படியும் பார்த்துக் கொள்கின்றனர். சலிப்புத் தோன்றாத வகையில் எளிதாக வாசிக்கின்ற முறையில் எழுத்துகளை அமைக்கின்றனர்.

எ.கா.

சிநேகிதி இதழ்	12 Point - 72 Point
மங்கையர் மலர் இதழ்	12 Point - 72 Point
அவள் விகடன் இதழ்	12 Point - 72 Point
மகளிர் சிந்தனை இதழ்	8 Point - 25 Point
பெண்ணே இதழ்	12 Point - 25/30 Point.

அட்டைத்தாள் (Wrapper)

ஓர் இதழின் முகமாக அட்டையைக் கருதலாம். ரேப்-அப் என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் செய்திச் சுருக்கம் என்ற பொருளும் உண்டு. அட்டையானது ஓர் இதழின் உள்ளே இருக்கும் செய்தியைப் படிப்பவருக்குப் புலப்படுத்துவதாய் இருக்க வேண்டும். இதழின் உள்ளடக்கம் சிறந்த பல கூறுகளைக் கொண்டிருந்தாலும் இதழின் அட்டைதான் புதிய வாசகர்களை வாங்கத் தூண்டும்படி அமைகின்றது. எனவே அட்டைகளின் கட்டமைப்பில் இதழ்கள் அக்கறை காட்டுகின்றன.

ஒவ்வொரு இதழ்களும் தனிப்பட்ட சில பாணிகளின் அடிப்படையில் அட்டைத்தாளை அமைக்கின்றன. பொதுவாக மகளிர் சிந்தனை தவிரப் பிற இதழ்கள் பளபளப்பு அட்டைத்தாளையே பயன்படுத்துகின்றன. மங்கையர் மலர் வெள்ளைப் பூச்சுத்தாளைப் பயன்படுத்துகின்றது.

வண்ணங்கள்

மகளிர் இதழ்களில் அட்டையிலும் உள்ளேயும் பல்வேறு வண்ணங்களைப் பெற்றிருந்தால் அவை மகளிரின் மனத்தைக் கவர்ந்து படிக்கத் தூண்டும். அட்டையில் அமைந்திருக்கும் வண்ணம் தொடர்ந்து, அடுத்த பக்கங்களைப் புரட்ட வைப்பதாக அமையும். இதனைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு இதழும் அடிப்படை வண்ணங்களின் மூலம் கிடைக்கப்பெறும் (Secondary Colour) அட்டைகளை அதிக அளவில் பயன்படுத்துகின்றன. அட்டை தவிரப் பிற பக்கங்களில் வண்ணங்களையே பயன்படுத்தாத மகளிர் சிந்தனை போன்ற இதழ்களும் உண்டு.

விலை

மகளிர் இதழ்கள் பெரும்பாலும் பத்திலிருந்து இருபது ரூபாய் வரை விற்கப்படுகின்றன. நாளிதழ்களை விட அதிகமாக இருப்பதால் வாசகர்கள் வாங்க விரும்புவது இல்லை. இதழின் தாளின் தரம், விற்பனைத்தரம், பக்கங்களின் அளவு, செய்திகள் இவற்றைப் பொறுத்து விலை நிருணயிக்கப்படும்.

எ.கா.

சிநேகிதி-இதழ்	ரூ. 16
மங்கையர் மலர்-இதழ்	ரூ. 10

அவள் விகடன்-இதழ்	ரூ. 15
மகளிர் சிந்தனை-இதழ்	ரூ. 3
பெண்ணே நீ-இதழ்	ரூ. 10

பக்கங்கள்

அச்சகங்களில் கையாளப்படும் பாரம் என்ற சொல் இதழின் பக்கங்களின் அளவினைக் குறிக்கும். பொதுவாக இதழ்களின் அளவு பாரங்கள் அடிப்படையில் கணக்கிடப்படுகின்றது.

தற்கால மகளிர் இதழ்களின் பக்க அளவுகள் அடுத்துவரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

இதழ்	அட்டையுடன் பக்கங்கள்
சிநேகிதி-இதழ்	148 பக்கங்கள்
மங்கையர் மலர்-இதழ்	102 பக்கங்கள்
அவள் விகடன்-இதழ்	54 பக்கங்கள்
மகளிர் சிந்தனை-இதழ்	106 பக்கங்கள்
பெண்ணே நீ-இதழ்	60 பக்கங்கள்

மகளிர் இதழ்களில் காணும் பிரச்சினைகள்

மகளிர் இதழ்கள் யாவும் பெண்கள் சார்ந்த பிரச்சினைகளை வெளியிடுவதில் ஆர்வம் காட்டுகின்றன. குடும்பத்தில் மாமியார், மருமகள் உறவு, குழந்தைப் பராமரிப்பு, வீட்டுப் பொறுப்பு, வீட்டைக் கவனித்தல் போன்றவற்றை அவை வெளியிடுகின்றன. திருமணத்தில் காதல் திருமணம், கலப்புத் திருமணம் போன்றன மட்டுமின்றிப் பெண்பார்க்கும் படலம், மணமகன் தேடல், தாலி கட்டுதல், வரதட்சணை வாங்குதல் போன்ற பல பிரச்சினைகள் பேசப்படுகின்றன. கணவனின் கொடுமை, தகாத செயல்கள், தவறான நடத்தைகள், பிற பெண்களுடனான தொடர்பு, விவாகரத்து போன்றவையும் பல விவரங்களில் இதழ்களில் இடம்பெறுகின்றன. அலுவல் மகளிர் சிக்கல்கள், அலுவல் மகளாவதால் குடும்பத்தில் ஏற்படும்

பிரச்சினைகள், அலுவலகப் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், வருமானத்தால் ஏற்படும் மன ஆதங்கங்கள் போன்ற பல கருத்துகளை மகளிர் இதழ்களில் காணமுடிகிறது. மேலும் பெண் குழந்தைத் தொழிலாளர், சிசுக் கொலை, குழந்தை மணம், பெண் குழந்தைகளை விற்றல் போன்றவையும் அவற்றில் இடம்பெறுகின்றன. விதவை நிலை, கற்புக் கோட்பாடு, கற்பழிப்பு, விலை மகளிர் நிலை, கல்லூரிப் பெண்களின் நிலை, பெண்களைக் கேலி செய்தல், இட ஒதுக்கீடு, சுய தொழில், அழகிப் போட்டி எனப் பெண்கள் தொடர்பான யாவும் மகளிர் இதழ்களில் பேசப்படுகின்றன. மகளிர் இதழ்களில் பெண்களின் பிரச்சினைகள் அனைத்திற்கும் தீர்வென்பது காணப்படாது போனாலும் இருக்கின்ற எல்லாப் பிரச்சினைகளும் எடுத்து முன்மொழியப் படுகின்றன. பெண்கள் வேலைக்குச் செல்வதால் இன்று குடும்பங்களில் பல தனிப்பட்ட சிக்கல்கள் உருவாகின்றன. அவற்றை எடுத்துரைக்க வேண்டிய நிர்பந்தம் இன்று மகளிர் இதழ்களுக்குத் தோன்றியுள்ளது.

மகளிர் இதழ்களின் போக்கு

மகளிர் இதழ்கள் வெளிவருவதைப் பற்றி இருவிதமான கருத்துகள் உரைக்கப்படுகின்றன. பெண்களின் மன உணர்வுகளையும், அவர்கள் சந்திக்கும் சங்கடங்களையும் அவை வெளிக் கொணர்கின்றன என்பது ஒருவகைக் கருத்து. "பெண்கள் என்றாலே ஊறுகாய் போடக் கற்பிக்கும் பழம் பாட்டில்களாகவே நடந்து கொள்கின்றன" என்று மகளிர் இதழ்களைச் சாடுகிறார் டாக்டர் சிவக்கண்ணன் (தமிழ் இதழ்களில் சமுதாய உணர்வு, ப99). இக் கூற்றின் பின்புலத்தையும் உற்றுக் கவனிக்க வேண்டிய அவசியம் உள்ளது. இங்குப் பேசப்படும் இதழ்களில் 'மகளிர் சிந்தனை' தவிர ஏனைய அனைத்தும் இக்குற்றச் சாட்டிற்கு இலக்காகின்றன. காலங்காலமாகப் பெண்ணின் மீது சுமத்தப்படும் இரட்டைச் சுமையினை மகளிர் இதழ்கள் உறுதிப்படுத்தும் வகையில் படைப்புகளை வெளியிடுகின்றன. கவிதைகளிலும், கதைகளிலும் புதுமைகளைப் புகுத்த நினைக்கும் அவ்விதழ்கள் தாங்கள் வெளியிடும் அழகுக் குறிப்புகள், சோதிடக் கருத்துகள், அலங்காரக் குறிப்புகள் போன்றவற்றால் அவற்றைச் சாதிக்க முடியாமல் நிற்கின்றன. இந்த ஆதங்கத்தை மனத்தில் கொண்டுதான், ஏதோ முற்போக்கு இதழ் போல் அடையாளம்

காட்ட அவள் விகடன் ஒருசிலப் பக்கங்களில் மட்டுமே தரமான கருத்துப் படையலை வைத்துப் பெரும்பாலான பகுதியில் பெண்கள் என்றால் சமையல், உடை, வீட்டுப் பராமரிப்பு, குழந்தைப் பராமரிப்பு, சோதிட நம்பிக்கை, அழகு டிப்ஸ் என்ற குறுகிய வட்டத்திற்குள்ளேயே பிற்போக்குக் கருத்துகளைப் படைப்பாக்கியுள்ளது. இவை ஏற்கெனவே பெண்களைக் கட்டிப் போட்டுள்ள விலங்குகளை மேலும் இறுக்குகின்றது என்று மகளிர் சிந்தனை சாடுகின்றது (1999).

சமய இதழ்கள்

தமிழில் பல சமய இதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. சமய இதழ்களுக்குத் தமிழ் இதழியல் வரலாற்றில் தனியிடம் உண்டு. சமயத்தைப் பரப்புவதற்கு இதழ்களைக் கருவியாகப் பயன்படுத்தலாம் என்று முதலில் முயற்சி செய்தவர்கள் கிறிஸ்தவப் பாதிரிமார்கள் என்று தெரிகிறது. கிறிஸ்தவ மதத்தைப் பரப்ப இதழ்கள் முனைந்த போது இந்து சமய இதழ்களும், இஸ்லாம் மத இதழ்களும் வெளிவரத் தொடங்கின.

1864இல் வேத சமாஜத்தாரின் "தத்துவ போதினி" 1865இல் "விவேக போதினி" 1866இல் "கலாவர்த்தினி" "பிரம்மவித்தியா" பத்திரிக்கை 1872இல் "விஜயதத்துவம்" 1893இல் "திருச்செங்கோட்டு விவாக திவாகரன்" 1897இல் "சித்தாந்த தீபிகை" 1902இல் "இந்து மதாபிமானி" 1914இல் "சைவம்" 1918இல் "ராமனுஜன்" 1925இல் "வைஷ்ணவம்" 1919இல் "பரமஹம்சப் பிரகாசினி" 1922இல் "சைவப்பரிபாடல்" போன்ற பல சமய இதழ்கள் தமிழ்நாட்டில் வெளிவந்து கொண்டிருந்தன. இவை போலவே வேறு பல கிறித்தவ, இஸ்லாம் மத இதழ்களும் வெளிவந்தன. நாளடைவில் சமய இதழ்களின் வெளியீடு குறைந்தது. அண்மைக் காலத்தில் சமய இதழ்கள் மீண்டும் மக்களிடையே வரவேற்பைப் பெற்று வளர்ந்து வருவதைக் காண முடிகிறது. இன்றைய காலக்கட்டத்தில சமயக்கருத்துகளையும், பக்தி செய்யும் பான்மையினையும் எடுத்தியம்பப் பெரிதும் உதவுவன, இதழ்கள் எனலாம். முதலில் தொடங்கிப் பின்னர் இடைப்பட்ட காலக்கட்டத்தில் குன்றிப்போயிருந்த சமய இதழ்கள் 1980களுக்குப் பின்னர் மீண்டும், பல்கிப் பெருகத் தொடங்கியுள்ளன. பல்வேறு சமயங்களும் இதழ்களை வெளியிட்டு வந்தாலும் இந்து சமய இதழ்களை மட்டும் இனிப் பார்க்கலாம்.

இதழ்களும், சமயமும்

இதழ்கள் பக்தியை மக்களிடம் பெருமளவு பரப்பி வருகின்றன. தற்காலத்தில் சமயம் சார்ந்த நூல்கள் மிகுந்துள்ளன. எனினும் அந்நூல்களைக் கற்போர் மிகக் குறைவு. ஆயின் மக்கள் யாவரும் இதழ்களைப் படிப்பதில் ஆர்வம் காட்டுகின்றனர். அதனால் நூல்களை விடவும் இதழ்கள் சமயம் பற்றிய தகவல்களைப் பரப்புவதில் பெருமளவு பங்கு வகிக்கின்றன. மேலும் நூல்களை விட மக்களை எளிதாகச் சென்றடைய வல்லன இதழ்களேயாம். நூல்களைவிடப் படிப்பதற்கு எளிமையாகவும் ஆர்வம் தரும் வகையிலும் இதழ்கள் தகவல்களை வெளியிடுகின்றன. எனவே சமயக் கருத்துகளை எடுத்துக் கூறிப் பல வகைகளில் இதழ்களால் பக்தியைப் பரப்ப முடியும்.

தமிழில் தற்காலத்தில் வெளிவரும் இந்து சமய இதழ்களை இரு வகைகளாகப் பிரிக்கலாம்.

1. தனி இதழ்கள்

2. இலவச இணைப்புகள்

சில நிறுவனங்கள் இந்து சமய இதழ்களைத் தனியாக வெளியிடுகின்றன. இலவச இணைப்புகளாக நாளிதழ்களுடன் சில வெளிவருகின்றன. இந்து சமயத்தைப் பரப்புவதைத் தம் கடமையாகக் கொண்டு செயல்படுகின்ற சில நிறுவனங்களும் இந்து சமய இதழ்களை வெளியிட்டுப் பக்தியினைப் பரப்புகின்றன. ஜனரஞ்சக இதழ்களாகக் கருதப்பட்டுப் பெரும் வாசகர் பரப்பைப் பெற்றுள்ள தமிழ் இதழ்கள் இன்று தனியாகச் சமய இதழ்களை வெளியிடுகின்றன. மக்களிடையே பக்தி இதழ்களை வாங்கிப் படிக்கும் ஆர்வம் மிகுந்துள்ளமையே இதற்குக் காரணம் எனலாம். ஞானபூமி, சக்தி விகடன், குமுதம் பக்தி ஸ்பெஷல், ஆன்மீகம், ஸ்ரீராமகிருஷ்ணவிஜயம், விவேகவாணி, கோபுரதரிசனம், ஓம் சரவணபவ, ஆலயம், சக்தியுகம், ஞானம், அருட்பெருஞ்ஜோதி, திருக்கோயில், குமர குருபரன், வள்ளலார், ஞானசம்பந்தம், சைவ மணிகள், தெய்வச் சேக்கிழார், சைவ மணிகள், உழவாரம், குருகுலத்தென்றல், தத்துவம் போன்ற பல இந்து சமய இதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. நாளிதழ்களுடன் இணைப்புகளாக வெளிவந்து கொண்டிருக்கும் தினமலரின் "பக்தி மலர்", தினத்தந்தியின் "ஆன்மீகம்", தினபூமியின் "ஆன்மீக பூமி", மாலை

முரசின் "ஆன்மீக முரசு", தினகரனின் "அருள்" போன்றனவும் பக்தியைப் பரப்பும் பணிகளைச் செய்து வருகின்றன. இக்கட்டுரையில் ஆய்வுக்காக ஞானபூமி, சக்தி விகடன், குமுதம் பக்தி ஸ்பெஷல், ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், ஆன்மீகம், உழவாரம் ஆகிய தனி இதழ்களும், தினமலரின் "பக்தி மலர்" தினத்தந்தியின் "ஆன்மீகமும்" எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

1980களில் இந்து சமய இதழ்களின் மறு நுழைவிற்கு வழி வகுத்தது மணியனால் தொடங்கப்பட்ட ஞானபூமி ஆகும். 1982இல் இதனை மணியன் தொடங்கினார். இவ்விதழைத் தற்போது கே.ஸ்ரீராம் "மணியனின் இந்து தர்ம மாத இதழ்" என்ற பெயரில் நடத்தி வருகிறார். பதினைந்து ரூபாய் விலையில் எண்பத்திரண்டு பக்கங்களுடன் ஞானபூமி மாத இதழாக வெளிவருகிறது. பவளவிழாக் கண்ட ஆனந்த விகடன் "சக்தி விகடன்" என்ற பெயரில் மாதாந்தரப்பக்தி இதழை வெளியிடுகிறது. பத்து ரூபாய் விலையில் விற்கப்படும் இவ்விதழ் "ஆன்மீகம் மணக்கும் ஆனந்த ஆலயம்" என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு என்பத்திரண்டு பங்கங்களில் மாதந்தோறும் பல ஆன்மீகத் தகவல்களைத் தாங்கி வெளிவருகிறது. மிகப் பெரிய அளவில் விற்பனையைப் பெற்றுப் பெயர் வாங்கியுள்ள வெகுஜன வாராந்திரியாகிய குமுதம் நிறுவனத்திலிருந்து "குமுதம் பக்தி ஸ்பெஷல்" என்ற இதழ் மாதந்தோறும் வெளியிடப்படுகிறது. இருபது ரூபாய் விலையில் விற்கப்படும் இந்த மாதாந்தரி எழுபத்திரண்டு பக்கங்களில் ஆன்மீகத் தகவல்கள் பலவற்றை வெளியிடுகின்றது. 11 ஆண்டுகளாகத் தர்மத்தை, ஞானத்தை, பக்தியை வெளிப்படுத்தும் ஒரே தெய்வீக மாத இதழ் என்ற அறிவிப்புடன் வெளிவரும் "ஆன்மீகம்" என்பதும் பத்து ரூபாய்க்கு விற்பனையாகும் மாத இதழாகும். ஐம்பத்தெட்டு பக்கங்கொண்ட இவ்விதழ் தனி நிறுவனத்திலிருந்து மாதந்தோறும் வெளிவருகிறது. "ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம்" நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டு விளங்குகிறது. கடந்த 84 ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவரும் இந்த மாத இதழ் நாற்பது பக்கங்களுடன் வெளிவந்து எட்டு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தினமலர் நாளிதழின் இலவச இணைப்பாகிய "பக்தி மலர்" ஞாயிறுதோறும் முப்பத்தொரு பக்கங்களில் மிக அதிகமான தகவல்களைத் தருகிறது. பிரபலமான நாளிதழாக இருப்பதால் அனைத்து வாசகர்க்ளையும் கவர

வேண்டும் என்ற எண்ணத்தில் எட்டுப் பக்கங்களுக்குக் கிறித்துவ சமயத் தகவல்களைத் தருகிறது. தினத்தந்தி சனிக்கிழமை தோறும் "ஆன்மீகம்" என்னும் பகுதியை இணைப்பு இதழில் ஒரு பக்க அளவில் வெளியிடுகிறது. இதழ்த்தொகுதியை குமுதம், பக்தி ஸ்பெஷல், ஆன்மீகம், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஆகிய இதழ்கள் முறையே பக்தி, ஆன்மா, தொகுதி என்று பெயரிட்டுள்ளன. அவற்றின் வெளியீடுகள் முறையே ஆசி, ஜீவன், இதழ் என்று அழைக்கப்படுகின்றன. சக்தி விகடனும், ஞானபூமியும், தொகுதியையும், வெளியீட்டையும் தனிப்பெயர்களால் குறிப்பிடவில்லை. உழவாரம் என்னும் சைவசமய மாத இதழ் கூடல் சுந்தரன் என்பவரை ஆசிரியராய்க் கொண்டு மதுரையில் இருந்து வெளிவருகின்றது. பத்து ரூபாய் விலையுள்ள இவ்விதழ் இருபது பக்கங்களைக் கொண்டுள்ளது. இதில் கட்டுரைகள், அறுபத்தி மூவர் சரித்திரங்கள், இந்த மாத முக்கிய தினங்கள், திருவிளையாடல் புராணம் ஆகிய பகுதிகள் இடம்பெறுகின்றன. "இந்து சமயச் செய்தி" என்னும் இதழ் திருச்சிராப்பள்ளியிலிருந்து வெளிவருகின்றது. திரு. கனகராஜனை ஆசிரியராய்க் கொண்டு ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. இதில் முப்பத்திரண்டு பக்கங்கள் உள்ளன. கட்டுரைகள் மகான்களின் அருள்வாக்கு, கீதாச்சாரம் பகுதி, கேள்வி (பதில்) தலையங்கம் ஆகிய பகுதிகள் இடம்பெற்றுள்ளன.

விவேகானந்தா கேந்திர வெளியீடாகக் கன்னியாகுமரியில் இருந்து வெளிவரும் விவேகவாணி இதழ் ஐந்து ரூபாய்க்கு விற்கப்படுகின்றது. அறுபத்தி நான்கு பக்கங்களைக் கொண்டுள்ளது. இதில் தலையங்கம், கட்டுரைகள், கதைகள், சித்திரக் கதைகள், மாதம் ஒரு மந்திரம், நாட்டு நடப்புகள், வேதத்தின் உட்பொருள், நசிகேத மன்றம், பெட்டிச் செய்திகள் போன்ற பகுதிகள் இடம்பெறுகின்றன. அதிகமான படங்களுடன் மக்களைக் கவரும்படியான தோற்றத்துடன் இவ்விதழ் அமைந்துள்ளது. போட்டிகள் பலவும் நடத்தப்படுகின்றன. உலகம் தழுவிய இதழாக இவ்விதழ் பரிணமித்துள்ளது. குருகுலத்தென்றல் மாத இதழானது டாக்டர் V.K.S. சிவசக்தி பாலனை ஆசிரியராய்க் கொண்டு சிவகாசியிலிருந்து வெளிவருகின்றது. இவ்விதழின் விலை மூன்று ரூபாய் எழுபத்தைந்து காசாகும். பதினாறு பக்கங்களைக் கொண்ட இவ்விதழில் ஆன்மீகக் கட்டுரைகள்,

கதைகள், கேள்வி-பதில், வாசகர் கடிதம் பகுதி, தலையங்கம், மருத்துவப் பகுதி, ஆன்றோரின் ஆன்மீகச் சொற்பொழிவுகள் ஆகியன இடம்பெறுகின்றன.

இதழ்கள் பரப்பும் பக்திக் கருத்துகள்

இந்து சமய இதழ்கள் கட்டுரைகள், தொடர் கட்டுரைகள், கதைகள், இடநிரப்பிகள், நூல் அறிமுகம், கேள்வி-பதில், தகவல்கள், சித்திரக் கதைகள், ராசிபலன், ஜோதிடம், குறுக்கெழுத்துப் போட்டி, படங்கள் போன்ற பகுதிகளை வெளியிடுகின்றன.

கட்டுரைகள்

இந்து சமய இதழ்கள் கட்டுரைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுகின்றன. அவை பல்வேறு தலைப்புகளில் தெய்வங்கள் பற்றிய கட்டுரைகளை வெளியிட்டு வாசகரிடையே பக்தியைப் பரப்புகின்றன. 'ஞானபூமி' மிக அதிகமான கட்டுரைகள் (70%) வெளியிடுகிறது. சக்தி விகடனில் தகவல்களில் சரிபாதிக்கும் மேல் கட்டுரைகள் (52.43%) இடம் பெறுகின்றன. ஸ்ரீராமகிருஷ்ண விஜயம் அடுத்தும் (47.5%) தொடர்ந்து குமுதம் பக்தி ஸ்பெஷலிலும் (40%) ஆன்மீகமும் (36.2%) கட்டுரைகளுக்கு இடமளிக்கின்றன. நாளிதழின் இணைப்பாக இருந்த போதும் தினமலர் பக்தி மலரும் பல கட்டுரைகளை (48.38%) வெளியிடுகின்றது. ஞானபூமியில் இருபதும், சக்தி விகடனில் பதினாறும், குமுதம் பக்தி ஸ்பெஷலில் இருபத்தி இரண்டும், ஸ்ரீ ராம கிருஷ்ண விஜயம் இதழில் எட்டும், ஆன்மீகத்தில் எட்டும், பக்தி மலரில் எட்டும், உழவாரத்தில் பதினொன்றும் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

இந்து சமய இதழ்களில் வெளிவரும் கட்டுரைகள் பல அரியகருத்துகளை வெளிக் கொணர்கின்றன. இக்கட்டுரைகளுக்கு வாசகர்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது. ஏனெனில் இவை எளிய தமிழில் எளிதில் புரிந்து கொள்ளும் நடையில் எழுதப்படுகின்றன. தாம் அதுவரை அறிந்திராத பல தகவல்களைக் கட்டுரைகளில் அறியும் வாசகர்கள் உள்ளம் மகிழ்கிறார்கள்.

தொடர் கட்டுரைகள்

இந்து சமய இதழ்கள் தொடர் கட்டுரைகளைத் தவறாமல் வெளியிடுகின்றன. இராமாயணம், பாகவதம், ஸ்ரீகிருஷ்ணர்,

தலப்பயணங்கள், தேவாரப் பதிகங்கள், பாவைப் பாடல்கள், பெண் எனும் மஹாசக்தி போன்ற மையக்கருத்துகளைக் கொண்டு தொடர் கட்டுரைகள் வெளியிடுகின்றன. தொடர் கட்டுரைகள் இதழை வாசகர்கள் தொடர்ந்து படிக்க வழிவகுக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

கதைகள்

சமய இதழ்கள் எளிய நடையில் பல பக்திக்கதைகளை வெளியிடுகின்றன. ஞானபூமி, குமுதம் பக்தி ஸ்பெஷல், ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம், பக்திமலர் ஆகிய ஒவ்வொரு இதழும் ஒரு கதையினை வெளியிடுகின்றது. இணைப்பு இதழாக வெளிவரும் தினத்தந்தியின் ஆன்மீகப் பக்கம் வாரந்தோறும் "தெரிந்த புராணம் தெரியாத கதை" என்ற பெயரில் தொடராக் கதைகளை வெளியிடுகிறது. தினமலர் பக்திமலரில் சிறுவர்களுக்காகச் சில குட்டிக் கதைகள் வெளியிடப்படுகின்றன. ஞானபூமியில் சிருங்கேரி ஸ்ரீ சாரதையின் கதையும், ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயத்தில் விடாமுயற்சி பற்றியும், குமுதம் பக்தி ஸ்பெஷலில் அகத்திய முனிவர் பற்றியும், பக்திமலரில் இறை நம்பிக்கையை வளர்க்கும் குட்டிக்கதையும் வெளிவந்துள்ளன. கதைகள்வழிப் பக்தியைப் போதித்தல் எளிமையான முறையாகும். சிறுவர்களுக்கு மட்டும் இன்றி வயதுவந்தோரும் கதைகளை விரும்பிக் கேட்பது இயல்பாகும். சமய இதழ்கள் கதைகள்வழிச் சமயக் கருத்துகளைப் பெரிதும் பரப்புகின்றன.

இட நிரப்பிகள்

சமய இதழ்களில் இட நிரப்பிகள் மிக முக்கிய இடம் வகிக்கின்றன. பக்க ஒருங்கிணைப்பின் போது, விடுபடும் இடங்களை ஏதாவது தகவல்களை வெளியிட்டு நிரப்புவர். அவையே இடநிரப்பிகள் என்று அழைக்கப்படும். ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட அனைத்து இதழ்களில் பல இட நிரப்பிகள் பல தகவல்களைத் தருகின்றன. தாய்மை, நவகிரகம், விநாயகரின் அரை ஞாண், உணவும்-ஊசியும், விதியும்-மதியும், ஆயிரம் லிங்கங்கள், ஆருத்ரா தரிசனம், கோடசாந்தலிங்கம் போன்றவை பற்றிய விளக்கங்களை அளிப்பதால் வாசகர்கள் சட்டென்று படித்துப் புரிந்து கொள்ளும் அளவில் இடநிரப்பிகள் அமைந்து சிறக்கின்றன. இவை எண்ணற்ற பக்தி சார்ந்த கருத்துகளை வாசகர்களுக்கு வழங்குகின்றன.

நூல் அறிமுகம்

இந்து சமய நூல்கள் பல பக்தி நூல்களையும், ஆன்மீக நூல்களையும் அறிமுகப் படுத்துகின்றன. குமுதம் பக்தி ஸ்பெஷல் ஆறு நூல்களை அறிமுகப்படுத்துகின்றது. ஆன்மீகம் இரு நூல்களையும், ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் ஒன்றையும், வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துகின்றன. குமுதம் பக்தி ஸ்பெஷல் நூல் அறிமுகப்பகுதிக்கு "பக்தி வாசனை" என்று பெயரிட்டுள்ளது. "யோக வாசிஷ்டம்" "கைலாஷ் மான சரோவர் யாத்திரை" ''இன்றைய புதிய கோணங்களில் உபநிடதங்கள்'' "சூரிய நமஸ்காரம் வழிபாட்டு முறைகள்" ஆகிய நூல்களை அது விவரக்குறிப்புக்களுடன் விளக்குகின்றது. "நூல் அறிமுகம்" என்ற பெயரில் நூற்களை அறிமுகப்படுத்தும் "ஆன்மீகம்" நூலில் இடம்பெறும் தகவல்களைப் பற்றியும் எடுத்துரைக்கிறது. "ஆன்மீக வினாவிடை" "திருவண்ணாமலையின் ஞான தீபங்கள்" ஆகிய நூல்களை அது அறிமுகப்படுத்தி உள்ளது. ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் மிக அதிகமாகப் பதிமூன்று நூல்களை அறிமுகப்படுத்துகிறது. அறிமுகப்படுத்தப்படும் நூல்களில் காணும் செய்திகள் இப்பகுதியில் சுருக்கமாக உரைக்கப்படுகின்றன. நூல் அறிமுகப்பகுதி வாசகர்களுக்குப் பக்தி, ஆன்மீகம் தொடர்பான நூல்களை அறிந்து கொண்டு படிப்பதற்குத் துணை செய்யும்.

கேள்வி–பதில்

சக்தி விகடன், பக்தி ஸ்பெஷல், ஸ்ரீராம கிருஷ்ண விஜயம் ஆகிய இதழ்கள் கேள்வி-பதில் பகுதியின் மூலம் வாசகர்களுக்கு ஆன்மீகம் சார்ந்த கருத்துகளைத் தெரிவிக்கின்றன. சக்தி விகடன் "மேஜிக் செய்வதிற்கும் ஆன்மீகத்திற்கும் தொடர்புண்டா" என்ற பொருளில் இப்பகுதியை அமைத்துள்ளது. பக்தி ஸ்பெஷல் ''பக்தியுடன் பதில்கள்'' என்ற தலைப்பில் வாசகர்கள் கேள்விகளுக்கு விடைகள் தருகின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் ''ஆன்மீக வினா-விடை'' என்ற பகுதியில் வாசகர்களுக்கு விடைகள் தருகின்றது. வினா-விடை முறை பொதுவாகச் சிறந்த தெளிவினை உருவாக்க வல்லது. அவ்வகையில் சமய இதழ்கள் கேள்வி-பதில் பகுதியில் சிறப்பான கருத்துகளைப் பரப்பி வருகின்றன.

தகவல்கள்

சமய இதழ்களில் தகவல்கள் பெட்டிச் செய்திகளாக இடம் பெறுகின்றன. குருநானக் அறிவுரைகள், படிப்பது எதற்கு, அந்தர் யோகம், இருபத்தொரு போற்றிகள், அஷ்ட பந்தன மருந்து, மூச்சுப் பயிற்சி, திரும்பிய நந்தி, தர்ப்பையின் சிறப்பு, சண்டிகேசுவரர், கோஷ்ட மூர்த்தம், சிவன் உமை திருமணம், லிங்க பாணம், இராமாயணக் கேள்வி, அஷ்டயத் திருதியை, திரு கணபதி ஹோமம் செய்யும் முறை, கிருஷ்ண முராரி போன்ற பல தகவல்களை வாசகர்களுக்குச் சமய இதழ்கள் வழங்குகின்றன. தகவல் பகுதிகள் சிறந்த பெட்டகங்களாக விளங்குகின்றன.

சித்திரக் கதைகள்

சமய இதழ்கள் ஆன்மீகக் கருத்துகளைச் சித்திரக் கதைகள் மூலம் பரப்புகின்றன. ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம் ஆன்றோரின் உபதேசங்களை வண்ணச் சித்திரக் கதையாக வெளியிடுகிறது. சக்தி விகடன் சுகிசிவம் சொல்லும் கதைகள் என்னும் தலைப்பில் வண்ணச்சித்திரத்தில் கடவுள் கதைகளை வெளியிடுகிறது. ஆன்மிகம் "நாரதர்" என்னும் சித்திரக் கதையைத் தொடராக வெளியிடுகிறது. சித்திரக் கதைகள் சிறுவர்களுக்கு ஆன்மீகத்தை எளிதில் போதிக்க வல்லன ஆகும்.

பிற

1. சக்தி விகடனும் குமுதமும் பக்தி ஸ்பெஷல், ஆன்மீகம், ஜோதிடம், இராசிபலன் ஆகிய பகுதிகளை வெளியிடுகின்றன. பிற சமய இதழ்களில் காணப்படாத இப்பகுதி வாசகர் ஈர்ப்பிற்காகவும், விற்பனைக்காகவும் பயன்படும் எனினும் பரிகாரங்கள், நிவர்த்திகள் போன்றவற்றைத் தெரிவிப்பதன் மூலம் பக்தி உணர்வை வளர்க்க வாய்ப்பைத் தருகின்றன எனலாம்.

2. ஆன்மீகம் குறுக்கெழுத்துப் போட்டிப் பகுதியை வெளியிடுகின்றது. ஆன்மீகம் தொடர்பான தகவல்களையும், சொற்களையும் சிந்திப்பதற்கு ஏற்ற பகுதியாக இது உள்ளது.

படங்கள்

இந்து சமய இதழ்கள் யாவும் படங்களுக்கு மிகுந்த முக்கியத்துவம் தருகின்றன. அனைத்து இதழ்களும் தம் முன், பின்

அட்டைகளை வண்ணப் படங்களுடன் வழவழப்பான தாளில் வெளியிட்டு வாசகர்களைக் கவர்கின்றன. எல்லாச் சமய இதழ்களும் இறைவன் இறைவியரின் திருவுருவங்ளை அழகு மிளிரப் படங்கள் மூலம் தெளிவாக எடுத்துரைக்கின்றன. வாசகர்கள் சேகரித்து வைத்துக் கொள்ளும் வகையிலும் படங்கள் வெளியிடப்படுகின்றன. தினமலரின் பக்திமலர் நடுப்பக்கத்தில் இறைவனின் வண்ணப்படத்தை வெளியிட்டிருப்பதுடன் படப்பக்கங்களையும் தனியாக வெளியிடுகிறது.

3. விவேகவாணி இதழ் ஆண்டு தோறும், கட்டுரைப் போட்டிகளை நடத்தி ஆன்மீகம் சார்ந்த சிந்தனையை மக்களிடத்து அதிகரிக்கச் செய்கின்றது.

4. தெய்வச் சேக்கிழார் இதழானது இதழ் தோறும் சிவாலயங்கள் பலவற்றை அறிமுகம் செய்து, அவ்வாலயத்தின் வழிபாட்டு முறைகளையும் விளக்கி, வண்ணப் படங்களையும் வெளியிடுகின்றது.

பிரசாதங்கள்

இந்து சமய இதழ்கள் இதழ்களுடன் பல அருட்பிரசாதங்களையும் வாசகர்களுக்கு வழங்குகின்றன. பிரசாதங்கள் வாசகர்களை வெகுவாகக் கவர வல்லன. ஞான பூமிதான் இந்த முறையை முதலில் தொடங்கிய தெனலாம். குமுதம் பக்தி ஸ்பெஷல், சக்தி விகடன் போன்றன குங்குமம், திருநீறு, இறைவன் இறைவியர் ஸ்டிக்கர்கள், தெய்வங்களின் வண்ணப்படங்கள், தாமிரத்தாலான சுபச் சக்கரங்கள், கங்கை தீர்த்தம் போன்ற அருட் பிரசாதங்க்ளையும், இறைவனின் பெருமை பேசும் சிறு நூல்களையும் இவ்விதழ்கள் வாசகர்களுக்கு அளித்துப் பக்தியைப் பரப்புகின்றன.

பக்தியைப் பரப்புவதில் தற்காலத்தில் இதழ்கள் தனிப்பங்கு வகிக்கின்றன. கணக்கில் அடங்காது வெளிவரும் பல பக்தி இதழ்களும் கட்டுரை, கதை, சித்திரக்கதை, தகவல்கள், படங்கள், அருட்பிரசாதங்கள் மூலம் மிக எளிய முறையில் ஆன்மீகத்தைப் பரப்பி வருகின்றன என்பது தெளிவு.

கிறித்தவ இதழ்கள்

கிறித்தவ சமயக் கருத்துகளைப் பரப்பும் இதழ்கள் கிறித்தவ இதழ்கள் என்று பெயர் பெறுகின்றன. சென்னையில்

1858இல் கிறித்தவ இலக்கியக் கழகத்தை நிறுவியவர் அருள் திரு ஜான்மர்டாக் என்பவராவர். அதன் பொதுச் செயலாளராகவும் விளங்கிய இவர் தான் வெளியிட்ட "தமிழ் அச்சு நூல்களின் பட்டியல்" என்ற ஆங்கில நூலில் "பருவ இதழ்களும், செய்தித் தாள்களும்" என்ற பகுதியில் "தமிழ் மேகசின்" என்னும் இதழைக் குறிப்பிட்டுள்ளார். சென்னை சமயநூல் சங்கத்தார் 1831இல் இதனை வெளியிட்டனர். 1831 முதல் 1846 வரை இவ்விதழ் மாதம் ஒருமுறை வெளிவந்து பின்னாளில் சத்தியதூதன் என்னும் மாதமிருமுறை இதழுடன் இணைக்கப்பட்டது. இதில் நீண்ட சமயக் கட்டுரைகள் எழுதப்பட்டன. எனவே "தமிழ் மேகசின்" என்பது முதன் முதலில் தமிழில் வெளிவந்த பருவ இதழ் என்பது மட்டுமின்றி, கிறித்தவ இதழாகவும் ஆகிறது என்றறிய முடிகிறது. (அ.மா.சாமி, தமிழ்க் கிறித்தவ இதழ்கள் ஓர் ஆய்வு, ப.80)

கிறித்தவ இதழ்கள் வெளிவரும் முறை

முதல் கிறித்தவ இதழைத் தொடர்ந்து எண்ணற்ற கிறித்தவ இதழ்கள் வெளிவரத் தொடங்கின. ஏறக்குறைய 1600 கிறித்தவ இதழ்கள் வெளிவந்து கொண்டிருப்பதாக அ.ம.சாமி தம் ஆய்வில் குறிப்பிடுகிறார் (அ.மா.சாமி, மேலது ப.104).

கிறித்தவ இதழ்கள் பெரும்பாலும் மாத இதழ்களாக வெளிவருகின்றன. இவற்றை மறை மாவட்டங்கள் திரு மண்டலங்கள் போன்றன வெளியிடுகின்றன. மேலும் தனி நபர்களும், 'சபை பாகுபாடு இல்லாத இதழ்' என்ற அறிவிப்புடன் கிறித்தவ இதழ்களை வெளியிடுகின்றனர். இவை தவிர ஆயரகத்திலிருந்தும், சில தேவாலயங்களிலிருந்தும் செய்திக் கடிதங்கள் வெளியிடப்படுகின்றன. வாசகர்களின் வகைக் கேற்ப இளைஞர் ஏடு பாலர் பத்திரிக்கை, மாணவர் மலர், தொழிலாளர் மடல், குடும்ப இதழ் என்றும் கிறித்தவ இதழ்கள் வெளிவருகின்றன. இருநூறு கிறித்தவ இதழ்கள் பாளையங்கோட்டையிலிருந்து வெளிவருகின்றன என்பது சுவையான தகவல். (அமா. சாமி, மேலது ப.84)

கிறித்தவ இதழ்களைப் பொறுப்பேற்று நடத்தும் ஆசிரியர்களில் ஆண், பெண் ஆகிய இருபாலாரும் காணப்படுகின்றனர். ஆயரகங்களிலிருந்து வெளிவருவனவற்றை

ஏதாவது ஓர் ஆயரும், பிற இதழ்களைத் தனியாரும் பொறுப்பேற்று நடத்துகின்றனர்.

தனித்தன்மைகள்

கிறித்தவ இதழ்கள் வியாபார நோக்குடன் நடத்தப்படுவதில்லை. பல இதழ்கள் இலவசமாகத் தரப்படுகின்றன. சமயப் பரப்பல் ஒன்றே அவற்றின் அடிப்படைக் குறிக்கோள் ஆகிறது.

நூறாண்டுகள் தொடர்ந்து வெளிவரும் கிறித்தவ இதழ்கள் பல உண்டு. சுதேசமித்திரன் தவிரத் தமிழ்நாட்டில் நூற்றாண்டு கடந்தவை அனைத்தும் கிறித்தவ இதழ்கள் தாம் என்பது அ.மா.சாமியின் கருத்து (அ.மா.சாமி, மேலது, ப.85) பாலியர் நேசன் 1848இல் நெல்லை திருமண்டலத்தில் தொடங்கப்பட்டு, தற்போதும் வெளிவருகிறது. 'நற்போதகம்' என்னும் இதழும் அதே அமைப்பில் 1849இல் தோன்றித் தற்போது தொடர்ந்து வெளிவருகிறது. தேசோபகாரி (1861), அருணோதயம் (1863), சத்திய வர்த்தமானி (1870) (தற்போது பேராயமலர் என்று பெயர் மாற்றம் பெற்றுள்ளது), போர்ச்சத்தம், புத்துயிர் (1947), (1989) சற்பரசாத்தூதன், வேளாங்கண்ணி, குரலோசை (1953) போன்ற சிலவற்றை நூற்றாண்டு கண்ட இதழ்களுக்குச் சான்றுகளாகக் குறிப்பிடலாம்.

பணி

கிறித்தவ இதழ்கள் கிறித்தவர்களின் உரிமைக்குக்குரல் கொடுக்கும் போக்கும் காணப்படுகிறது. கிறித்தவர்கள் பாதிக்கப்படும் போதும், சமய உரிமைகள் மறுக்கப்படும் நிலையிலும் அவை குரல் கொடுப்பதுண்டு. மிகக் குறிப்பிடத் தகுந்த தகவல் என்பது தலித்கிறித்தவர்களுக்காகக் கிறித்தவ இதழ்கள் எழுப்பும் குரல் என்பதாகும்.

1996இல் அப்போதைய முதல்வர் அன்னை மேரியாக உருவகிக்கப்பட்டதை அனைத்துக் கிறித்தவ இதழ்களும் கண்டித்தன.

உள்ளடக்கம்

சமயப் பரப்புதலும், பிரச்சாரமும் அடிப்படையான நோக்கம் என்றானதினால் பெரும்பான்மைக் கிறித்தவ இதழ்கள்

விவிலியத்திற்கான விளக்கத்தைத் தருவதைத் தம்முடைய முதன்மைப் பணியாக மேற்கொண்டன.

அண்மைக் காலத்தில் அவ்வப்போது நாட்டு நடப்புகளை வெளியிடும் போக்குக் காணப்படுகிறது. கிறித்தவர்களின் இல்லங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை இவ்விதழ்கள் பிரசுரிப்பதுண்டு. திருமண நிகழ்வுகள், இறப்புச் செய்திகள், போன்றவற்றை அவை வெளியிடுகின்றன. மேலும் நினைவு நாள் அறிவிப்புகளும் அவற்றில் இடம்பெறுவதுண்டு. தற்காலத்தில் சில கிறித்தவ இதழ்களில் மணமகள், மணமகன் தேவைபற்றிய விளம்பரங்கள் வெளியிடப்படுகின்றன. (அன்னையின் அருட்சுவர்)

கிறித்தவக் கருத்துகளைச் சமய இதழ்கள் கட்டுரைகளாக மட்டுமின்றி வினா, விடை அமைப்பாலும் வெளியிடுகின்றன. வாசகர் கடிதங்கள் பெற்று அவற்றிற்குத் தரும் விளக்கங்களும் மதப்பரப்புதலுக்கு நல்ல வழி வகுத்தன. இது பல புதிய கிறித்தவர்களை உருவாக்குவதை முதன்மைப் பணியாகவும், பிற கிறித்தவர்களுக்குக் கருத்து விளக்கங்களாகவும் அமைந்தது.

இதனை, "கிறிஸ்தவர் அல்லாதாரைக் கூட இதழ்கள் கிறிஸ்தவர் ஆக்கும். இதழ்களும் இறைவனின் தூதர்களே. ஒரு கிறிஸ்தவ ஊழியர் நுழையாத வீட்டுக்குள் கூட இந்த தூதன் நுழைந்து விடுவான்" என்று மதுரை கத்ததோலிக்க மிஷன் என்ற ஆங்கில நூல் குறிப்பிடுகிறது. (அ.மா.சாமி, மேலது, ப.88)

தற்போது கிறித்தவ இதழ்களின் போக்கு மாறியுள்ளது. பிற இதழ்களைப் போலவே அரசியலிலும், திரைப்படத்திலும் அவை சிறிது கவனம் செலுத்துகின்றன. அரசியல் நிகழ்வுகள், திரைப்படச் செய்திகள், விமரிசனங்களை அவை வெளியிடத் தொடங்கி உள்ளன. இது வாசகர்களின் பரப்பை மிகுதிப்படுத்தும் ஓர் உத்தியாகக் கையாளப்படுகிறது எனலாம்.

சைவ, வைணவ சித்தாந்தங்கள் பற்றிப் பல கிறித்தவ இதழ்கள் ஆராய்ந்து கட்டுரைகள் வெளியிடுகின்றன.

கிறித்தவ இதழ்கள் பல கிறித்தவ இலக்கியங்களை வெளியிடுகின்றன. 'கிறித்தவக் கம்பன்', என்று புகழப்படும் கிருட்டினப் பிள்ளை இரட்சணிய யாத்ரிகத்தை நற்போதகம் இதழில் நான்கு ஆண்டுகள் எழுதி வந்தார். 1878 முதல் 1891 வரை

தொடர்ந்து 'நற்போதகம்' அதனை வெளியிட்டதால் தான் தன்னால் அக்காப்பியத்தை எழுத முடிந்தது என்று அவரே குறிப்பிடுகிறார் (அ.மா.சாமி.ப.89)

நற்போதகம் 'முக்தி வழி அம்மானை' என்ற காவியத்தைத் தொடராக வெளியிட்டது. திட்டூர் தேசிகரின் படைப்புகளை, தட்சண தீபமும், அந்தோணி இராகவன் 'சுடர்மணி' என்ற இயேசுவின் வரலாற்றுக் காப்பியத்தை "சாவ்வியாபி" என்னும் இதழும் வெளியிட்டன. மணப்பாடு அந்தோணிக்குட்டி அண்ணாவியார் பாடல்கள் "நல்லாயன்" என்னும் இதழில் வெளியிடப்பட்டன.

கிறித்தவ இதழ்களின் நடை அவ்விதழ்களின் வளர்ச்சிக்குப் பெரும்தடையாக இருப்பதாக அருள்திரு இலாரன்சு அடிகளார் குறிப்பிடுகிறார்.

கிறித்தவ இதழ்கள் தமக்கென்று தனிப்பாணியினைக் கொண்டுள்ளதாக பேரா.இர. ஆரோக்கியசாமி குறிப்பிடுகிறார். இலக்கியப் படைப்புகளைத் தனிப்பண்பாட்டுடன் வெளியிடுவதாக அவர் உரைக்கிறார்.

இஸ்லாமிய இதழ்கள்

சமய இதழ்களுள் இஸ்லாமிய இதழ்கள் தனியிடம் பெறுகின்றன. 1800களிலேயே வெளிவரத் தொடங்கிய இஸ்லாமிய இதழ்கள் தொடர்ச்சியான வளர்ச்சியினைப் பெற்றுள்ளன. 1888இல் "சம்-சுல்மான்" எனும் இஸ்லாமிய இதழ் சென்னையிலிருந்து வெளிவந்ததாக மா.சு. சம்பந்தம் குறிப்பிடுகின்றார் (**தமிழ் இதழியல் வரலாறு**, பக்.138). தத்துவ இஸ்லாம், தாரூஸ்லாம் போன்ற இதழ்களும் பரவலாக இஸ்லாமிய சமயக் கருத்துகளை வெளியிடுகின்றன. "விடியல் வெள்ளி" என்பது நாளிதழாகவும், மாத இதழாகவும் வெளிவந்து பரவலான வாசகரைக் கொண்டு விளங்குகின்றது. மணிச்சுடர், வெற்றி முரசு ஆகியன குறிப்பிடத்தக்க இஸ்லாமிய இதழ்களாகும். இதில் மணிச்சுடர் தற்போது வெளிவரவில்லை. "வெற்றி முரசு" வாரம் ஒரு முறை இதழாக வெளிவருகின்றது.

இஸ்லாமிய இதழ்களில் மாத இதழ்களே மிகுதியாகும். அவற்றில் "குர்-ஆனின் குரல்", "சிந்தனைச் சுரம்" ஆகியன மதுரையில் இருந்து வெளியிடப்படுகின்றன. "ரகுமத்", "சமால்

அஃதுல் உலம்" ஆகியன நெல்லையில் இருந்து வெளிவரும் மாத இதழ்களாகும்.

ஐம்பது ஆண்டுகளாகத் தொடர்ந்து வெளிவரும் சிறப்பினைப் பெற்றது "முஸ்லீம் முரசு" என்னும் இதழாகும். மிகப் பரந்த வாசகர் பரப்பைப் பெற்று விளங்கும் இவ்விதழில் கதை, கட்டுரை, கேள்வி-பதில் போன்ற உள்ளடக்கங்களுடன் படங்கள் வெளியிடப்படுகின்றன.

பெண்களாலேயே நடத்தப்படும் பெண்களுக்கான இதழாக "நர்கிஸ்" வெளிவருகின்றது. இஸ்லாம் சமய இதழ்கள் மதப்பரப்பலுக்குப் பெரிதும் காரணமாகின்றன. அவற்றில் நீதிக்கருத்துகள், இஸ்லாமியர் கடைப்பிடிக்க வேண்டிய செயல்கள், இஸ்லாமியர் மேன்மை ஆகியன எடுத்துரைக்கப் படுகின்றன.

திரைப்பட இதழ்கள்

தமிழ்த் திரைப்படத்துறை தொடர்பாகவும் திரைப்படக் கலைஞர்கள் தொடர்பாகவும் அறியக் கூடிய செய்திகளைத் தருவன தமிழ்த்திரைப்பட இதழ்கள் ஆகும். வாசகர்களின் இரசனை முறைகளை உணர்ந்து, அவர்களின் ஆர்வத்தினைத் தூண்டும் வகையிலும் உற்சாகத்தினை ஏற்படுத்தும் வகையிலும் இவ்விதழ்கள் செயல்படுகின்றன. இவ்விதமாகச் செயல்படும் இதழ்கள் பேசும்படம், சினிமாமெயில், சிலுக்கு சினிமா ஆகியன மாதம் ஒரு முறையும், பொம்மை, முந்தானை, சினிமா எக்ஸ்பிரஸ் ஆகியன மாதமிருமுறையும், வண்ணத்திரை, திரைச்சுவை, ஜெமினி சினிமா, சினிமித்ரன், திரைச்சித்ரா ஆகிய இதழ்கள் வார இதழ்களாகவும் வெளியிடப்படுகின்றன.

ஒளித்திரை என்ற திரைப்பட இதழ் 1985ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் இருந்து வெளிவந்தது. ஆனால் ஏதோ சில காரணங்களால் இவ்விதழ் இரண்டு வெளியீடுகளோடு நின்றுவிட்டது. "சிலுக்கு சினிமா" என்ற இதழ் 1985 பிப்ரவரி மாதத்தில் தொடங்கப்பெற்றது. "முந்தானை இதழ்" 1987 தொடக்கத்தில் வெளியிடப்பட்டது.

அமைப்பு

தமிழ்த் திரைப்பட இதழ்கள் பல வெளிவந்து கொண்டிருக்கின்றன. முதலில் தொடங்கப்பட்டு நின்று போன

இதழ்களும் பல உண்டு. இன்றுவரை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கின்ற இதழ்களின் அமைப்பு ஒன்றுக்கொன்று வேறுபட்டு உள்ளது. அதிகமான பிரதிகள் விற்பனையாகும் "வண்ணத்திரை" இதழானது 34 பக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. "சினிமா எக்ஸ்பிரஸ்" அளவில் மிகப்பெரியது. மொத்தம் 62 பக்கங்களைக் கொண்டுள்ளது. "திரைச்சுவை" இதழும் 62 பக்கங்களுடன் வண்ணப்படங்களுடன் அமையப் பெற்றுள்ளது. "சிலுக்கு சினிமா" என்னும் திரைப்பட இதழ் 42 பக்கங்களைக் கொண்டுள்ளது. நடுப்பக்கத்தில் இரட்டைப் பக்கமாக வண்ணத்தில் கவர்ச்சிப் படங்களை வெளியிடுகின்றது. "பேசும்படம்" என்னும் இதழ் 90 பக்கங்களைக் கொண்டதாக விளங்குகின்றது. இவ்விதழில் கவர்ச்சிப் படங்களைக் காண்பது அரிதாகவே உள்ளது. "ஜெமினி சினிமா" இதழ் 36 பக்கங்களைக் கொண்டுள்ளது. அது 7 பக்கங்களைக் கவர்ச்சிப் படங்களுக்கு ஒதுக்குகிறது. "திரைச்சித்ரா" இதழானது 42 பக்கங்களில் 15 பக்கங்கள் வரை பாலுணர்வைத் தூண்டும் படங்களை வெளியிடுகிறது. "முந்தானை" இதழ் 36 பக்கங்களைக் கொண்டது. "பொம்மை" 62 பக்கங்களுடன் அமையப் பெற்றது. "சினிமித்ரன்" 34 பக்கங்களையும், "சினிமா மெயில்" 34 பக்கங்களையும் கொண்டு அமைகின்றன.

பிரபலமான இவ்விதழ்களைப் போன்று 1948இல் "சமாச்சர்" இதழும் 1949இல் "திரை தூதன்" இதழும் தொடங்கப்பட்டன. 'சினிமா மலர்' 1949இலும், "நட்சத்திர உலகம்" இதே ஆண்டிலும், 1950இல் "திரை நேசனும்", 1957இல் "திரைச் செய்தி" இதழும் வெளியிடப்பட்டன. 1953இல் "சினிமா" இதழும், 1954இல் "மூவிபிலிம்ஸ்" இதழும், 1954இல் "தமிழ் சினிமா" இதழும் வெளிவந்தன.

இதனைப் போன்று திராவிட சினிமா (1955), கலைப்படம் (1955), சினிமாஸ்டார் (1955), பிலிம் மெயில் (1955), நாரதர் (1953), கலைப் பூங்கா (1956), திரை உலகம் (1960), திரைச் செய்தி (1963), பேசும் சினிமா (1966), திரை மடல் (1969), பிலிம் ரோல் (1970), சினிமா முரசு (1971), சிவாஜி ரசிகன் (1972), பிலிம் நியூஸ் (1973), இதயக்கனி (1974), சத்திய புதல்வன் (1974), திரைக்கதிர் (1974), டெலிவிஷன் (1975), பிலிமாலயா, ரஜினி ரசிகன், நடிகன் குரல் போன்ற பல திரைப்பட இதழ்கள் வெளிவந்துள்ளன.

உள்ளடக்கம்

திரைப்பட இதழ்கள் பொதுவாகப் பேட்டிகள், கட்டுரைகள், கதைகள், விமர்சனங்கள், துணுக்குகள் போன்ற கூறுகளால் வடிவமைக்கப்பட்டுள்ளன. இக்கூறுகளின் வழியாகத் திரைப்படம், திரைப்படக் கலைஞர்கள் பற்றிய செய்திகளைத் தமக்குரிய பாணிகளில் தருகின்றன. திரைப்படங்கள் பற்றி வாசகர்களுக்குச் சொல்லுவதை இவை நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்த அடிப்படை நோக்கத்திற்காக இவ்வகை இதழ்கள், நிழற்படங்கள், பேட்டிகள், கட்டுரைகள், துணுக்குகள், கதைகள், விமரிசனங்கள், கேள்வி-பதில்கள் முதலிய இதழியல் கூறுகளை உத்திகளாகக் கொண்டிருக்கின்றன.

திரையிதழ்களில் இடம்பெறும் உள்ளடக்கக் கூறுகளில் பெரிதும் இடம்பெற்றிருப்பவை பேட்டிகளும், கட்டுரைகளுமே. திரைப்படக்கலைஞர்களின் வளர்ச்சியோ, வீழ்ச்சியோ, பாராட்டோ, அவமதிப்போ எதையும் இந்த அமிசங்களின் மூலமாகத்தான் அதிகம் அறிய முடிகிறது. பேட்டி என்பது ஏதாவது ஒன்றைப்பற்றிச் செய்தி அறிபவர், செய்தி கொடுப்பவரிடம் உரையாடுவதாகும். கட்டுரை என்பது யாதானும் ஒரு பொருள் பற்றி ஒருவர் எழுத்து வடிவில் முறைப்படுத்திச் சொல்வது. இதனைத் திரைப்படக் கலைஞர்களோ அல்லது பத்திரிக்கை ஆசிரியர்களோ அல்லது பத்திரிக்கைத் துறையில் தொடர்புடையவர்களோ எழுதுவர். இவ்வகைப் பேட்டிகளும், கட்டுரைகளும், திரைப்படத் தொடர்பானதாகவும், திரைப்படத் தொடர்பில்லாததாகவும், திரையிதழ்களின் தனித்தன்மை வாய்ந்த கூறுகளாகவும் அமைந்திருக்கின்றன.

தமிழ்த் திரைப்பட இதழ்களை ஒரு பார்வையில் புரட்டிப்பார்க்கும் போதே திரைப்படக் கலைஞர்களின் பேட்டிகளும், கட்டுரைகளும் தான் கண்களுக்கு அதிகம் புலப்படுகின்றன. திரை இதழ்களின் பெரும்பான்மையான இடத்தைப் பெற்றிருக்கும் இவ்வமிசம் சிறந்து தொடங்குவதற்குக் காரணம் வாசக ரசிகர்களின் ஆர்வம் தான் என்று சொல்ல முடிகிறது. ஒரு கலைஞனைப் பற்றித் திரையில் பார்த்து அறிந்து கொள்ளும் ரசிகர்கள், அக்கலைஞனின் எண்ணங்கள், திரைப்பட அனுபவங்கள் சொந்த வாழ்க்கை இவற்றைப் பற்றியும் அறிந்து கொள்ள எண்ணுகின்றனர். அந்த வகையில் இவ்வம்சம்

முக்கியத்துவம் பெற்று விடுகிறது. தன் அபிமானக் கலைஞன் முன்னணியில் வருவதற்கு எவ்வளவு கடின உழைப்பு மேற்கொண்டிருக்கிறான் என்பதை அறியும் பொழுது அவனையும் அறியாமல் ஒரு மதிப்பு அல்லது அன்பு ஏற்படுகிறது. எதிர்பார்க்கும் விதமாக உயர்ந்து நிற்கும் தன் அபிமானக் கலைஞன் பெருமைப்படுத்தப்படும் போதெல்லாம் அவனும் பெருமைப்படுத்தப்படுவதாக இரசிகன் நினைக்கிறான். ஏதோ திரையில் தெரிந்து இலட்சம் இலட்சமாகச் சம்பாதித்து விட்டுச் செல்கிறான். அத்தோடு அவன் வேலை முடிந்துவிட்டது என்பதன்றி அவனுடைய இரசிகர்களின் பாரட்டிற்கும், மதிப்பிற்கும் பாத்திரமாகும் வகையில் தன் எண்ணங்களைப் பகிர்ந்து கொள்கிறான். இந்த எண்ணங்களையும் திரைப்பட அனுபவங்களையும் பகிர்ந்து கொள்வதற்குப் பத்திரிக்கைகளே நல்ல கருவிகளாகச் செயல்படுகின்றன. வாசக இரசிகர்களின் ஆர்வங்களையும் அவர்களின் வேண்டுதல்களையும் பத்திரிக்கைகள் காலமறிந்து நிறைவேற்றி வைக்கின்றன. இவ்வாறு வாசகர்களையும், கலைஞர்களையும் இணைத்து வைக்கும் பேட்டிகளும், கட்டுரைகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. மேற்கண்ட கூறுகளில் நடிகர்கள், நடிகைகள், பிற கலைஞர்கள், இயக்குநர்கள், நடனக் கலைஞர்கள், பாடகர்கள், பாடகிகள், சண்டைக் கலைஞர்கள், கதாசிரியர், பாடலாசிரியர், வசனகர்த்தா என இவர்கள் சார்ந்த செய்திகள் திரைப்பட இதழ்களில் இடம்பெறுகின்றன. இவை தவிரப் பாலுணர்வுத் தொடர்புடைய கருத்துகளும், சமுதாய நலன் கருதும் கட்டுரைகளும் அமையப் பெறுகின்றன.

பேட்டிகளையும், கட்டுரைகளையும் வெளியிடுவதில் பெரும்பாலும் எல்லாத் திரைப்பட இதழ்களுமே முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவற்றை அணுகும் முறையில்தான் அவற்றிடையே பல வேறுபாடுகள் உள்ளன. பழைய திரைப்படக் கலைஞர்கள் பற்றிச் சொல்வதில் பேசும்படம், பொம்மை, வண்ணத்திரை, திரைச்சுவை முதலிய இதழ்கள் பெரும் பங்கு வகிக்கின்றன.

சிலுக்கு சினிமா இதழ் கதாநாயக, நாயகிகளைப் பற்றியும், திரைப்படத் தொழில் நுட்பங்கள் பற்றியும் இதரக் கலைஞர்கள் பற்றியும் சொல்கிறது. முந்தானை, ஜெமினி சினிமா ஆகிய இதழ்கள் பக்கங்கள் குறைவாக இருந்தாலும் கலைஞர்கள் பற்றிய செய்திகளைத் தருவதில் தனிக்கவனம் செலுத்துகின்றன.

"திரைச்சித்ரா", "சினிமித்ரன்" ஆகிய இதழ்கள் கலைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாகத் தெரியவில்லை. இதன் பார்வை முழுவதும் கவர்ச்சி, பாலுணர்வு ஆகிய உணர்வுகளையே மையமாகக் கொண்டமைவதைக் காண முடிகிறது. மேலும் பேட்டிகளை வெளியிடுவதில் இவை அதிகக் கவனம் செலுத்துகின்றன.

திரைப்பட இதழ்களில் இடம்பெறும் கட்டுரைகளில் தகவல்களே மிகுதியும் இடம்பெறுகின்றன. நடிகர், நடிகைகள் பற்றிய பேட்டிகளும் அதிகம் காணப்படுகின்றன. திரைப்படத் துறை தொடர்பான பேட்டிகள் மேலோங்கி நிற்கின்றன. இவ்வாறாகத் திரை இதழ்களில் இடம்பெறும் கட்டுரைகள் பேட்டிகள் அமையப் பெற்று வருகின்றன.

கதைகளும் – விமர்சனங்களும்

தமிழ்த் திரை இதழ்களில் கதைகளும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இவ்விதழ்களில் பலவகைப்பட்ட கதைகள் அமைந்துள்ளன. இதில் சிறுகதைகளும், தொடர்கதைகளும் குறிப்பிடத்தக்கவையாகும். இதழ்களை இரசனையோடு நோக்கும் வாசகர்களின் எண்ணங்களுக்கு ஏற்றவாறு திரைப்படத் தொடர்பான கதைகளும் பிற கதைகளும் வெளியிடப்பட்டுள்ளன. வாசகர்கள் பல வகையினர். எனவே அவர்களின் மனத்தைக் கவரும் வகையில் கதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

"சினிமித்ரன்", "திரைசித்ரா" ஆகிய இதழ்கள் திரைப்படக் கதைகள் வெளியிடுவதில் ஆர்வத்தைக் காட்டவில்லை. அவை பாலுணர்வுக் கதைகளை வெளியிடுவதில் அதிகக் கவனம் செலுத்துகின்றன.

"பேசும்படம்", "பொம்மை", "சினிமா எக்ஸ்பிரஸ்" ஆகிய மூன்று இதழ்களும் திரைப்படக் கதைகளை வெளியிடுவதில் முதன்மையாக விளங்குகின்றன. "முந்தானை", "திரைச்சுவை" ஆகிய இதழ்கள் ஆர்வநிலையினைத் தூண்டும் கதைகளை அதிகமாகக் கொண்டு திகழ்கின்றன. பேசும்படம் திரைக்கதைச் சுருக்கங்கள், முழுத் திரைப்படக்கதைகள் இவற்றில் அதிகக் கவனம் செலுத்துகின்றது.

"சினிமா மெயில்" சிறு கதைகளை வெளியிடுவதில் அரிதாகத்தான் கவனம் செலுத்துகிறது.

"வண்ணத்திரை" திரைப்படத் தொடர்கதைகளையும், திரைப்பட விமரிசனங்களை வெளியிடுவதிலும் அதிகக் கவனம் செலுத்துகிறது. "ஜெமினி சினிமா" திரைப்பட வாழ்வு பற்றிய கதைகளையும் காட்சிகளுடன் கதை சொல்வதிலும் அதிகக் கவனம் செலுத்துகிறது.

சிறப்புப் பகுதிகள்

திரைப்படக் கலைஞர்களை உற்சாகப் படுத்த இரசிகர்கள் தேவை. அந்த இரசிகர்கள் திரைப்படக் கலைஞர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவும், பத்திரிக்கைகள் வெகுவாக உதவுகின்றன. எந்தத் திரைப்படத் பத்திரிக்கையிலும் வாசகர்கள் இடம் பெறாத நிலையினைக் காண இயலாது. அந்த வகையில் திரைப்பட இதழ்களில் கலைஞர்-வாசகர்-உறவுநிலை மேம்படுத்தப் படுகின்றது. வாசகர்களின் சிந்தனைப் போக்கினைச் செம்மைப்படுத்தும் நோக்கில் திரைப்படத் துறையின் நுணுக்கங்கள், திரைப்பட விமர்சனங்கள், கலைஞர்களின் வாழ்வு, கலைஞர்களின் திறமைகள் போன்றவற்றை அவை வெளிப்படுத்துகின்றன.

சினிமா எக்ஸ்பிரஸ், சிலுக்கு சினிமா, சினிமா மெயில், பேசும்படம், திரைச் சித்ரா, சினி மித்ரன் ஆகிய இதழ்களில் மேற்கண்ட செய்திகளைக் காண முடிகிறது. திரைச்சித்ரா, சினி மித்ரன் ஆகிய இரு இதழ்களில் மட்டும் வக்கிரமான உணர்வுகளை வெளிப்படுத்தும் கேள்விகள் இடம் பெறுவதைக் காணமுடிகிறது.

திரைப்பட இதழ்கள் வாசகர்களை ஊக்கப்படுத்தும் விதத்தில் போட்டிகள் நடத்தி, பரிசுகளையும் வழங்குகின்றன. "புதுமுகம்", "அறிமுகம்" என்ற பகுதி சினிமா மெயிலில் இடம்பெறுகின்றது. இதில் திரைப்படத் தொழிலில் ஆர்வமுள்ள வாசகர்கள் இதழ் ஆசிரியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். அவர்களின் படங்கள் வயது, படிப்பு முதலியவை இதழில் வெளியிடப்படுகின்றன.

பொம்மை இதழில் அன்பர் தபால், நான் பார்த்தபடம், புதிர், குறுக்கெழுத்துப் புதிர் ஆகிய பகுதிகள் அமைந்திருக்கின்றன. மேலும் வாசகர்களின் விருப்ப வெளியீடுகள் தரப்படுகின்றன. திரைப்பட இதழ்களில்

இடம்பெறும் வாசகர்கள் உண்மையானவர்களா, இல்லையா என்பது கேள்விக்குறி. ஆனால் இப்பகுதிகளின் மூலம் திரையுலகினரைப் பற்றி அறிந்து கொள்ள வாய்ப்புக் கிடைக்கிறது.

வாசர்களுக்குத் தம் இதழ்களில் இடம் தருவதில் "சினிமா எக்ஸ்பிரஸ்", "பேசும் படம்" ஆகிய இதழ்கள் முதல் இடத்தினையும், சினிமா மெயில், பொம்மை ஆகிய இதழ்கள் இரண்டாம் இடத்தினையும், சிலுக்கு சினிமா, முந்தானை, ஜெமினி சினிமா ஆகிய இதழ்கள் மூன்றாம் இடத்தினையும், திரைச்சித்ரா, வண்ணத்திரை ஆகிய இதழ்கள் நான்காம் இடத்தினையும், சினிமித்ரன் இறுதி இடத்தையும் பெறுகின்றன எனலாம்.

கவர்ச்சிப் பகுதிகள்

சினிமித்ரன், திரைச்சித்ரா, திரைச்சுவை, சிலுக்கு சினிமா, சினிமா மெயில் ஆகிய இதழ்கள் செய்திகள், படங்கள், கேள்வி-பதில், கட்டுரைகள், துணுக்குகள், கதைகள் ஆகிய கூறுகளின் வாயிலாகக் கவர்ச்சியினை அதிகம் தாங்கியுள்ள இதழ்களாகும். இதன் மூலம் காமவிகாரங்களை அதிகம் விரும்பக் கூடிய வாசகர்கள்தான் இவர்களுக்கு வாசகர்களாக அமைவார்கள் என்ற எதிர்பார்ப்பு இவற்றிற்கு இருக்கின்றது.

ஜெமினி சினிமா, வண்ணத்திரை ஆகிய இதழ்களுள் சினிமா பார்க்க-படிக்க என்ற பகுதியிலும், சில பட விளம்பரங்களிலும் கவர்ச்சி அம்சம். வண்ணத் திரைப்படங்கள் மூலமாகத்தான் இவை முழுமையாகக் கவர்ச்சியினை வெளியிடுகின்றன. பேசும் படம், பொம்மை ஆகிய இரு இதழ்களும் பெரும்பாலும் படவிளம்பரங்களில் மட்டுமே கவர்ச்சியினை வெளியிடுகின்றன. பிற பகுதிகளில் கவர்ச்சி காணப்படவில்லை.

துணுக்குகள்

தமிழ்த் திரைப்பட இதழ்களில் இடம்பெறும் துணுக்குகளிலிருந்து பல விவரங்களை அறிய முடிகின்றது. இத்துணுக்குகளிலிருந்து கலைஞர்களின் பண்பு, திறமை, ஆர்வம், சொந்த வாழ்க்கை கலைஞர்களைப்பற்றி மற்றவர்களின் கணிப்பு,

முன்பிருந்த படங்களின் நிலை, தற்போதைய நிலை, பிறமொழிப் படச் செய்திகள் ஆகிய பல தகவல்களை அறிய முடிகின்றது.

துணுக்குகளின் வகைகள் பலவாக இருந்தாலும் எண்ணிக்கை அடிப்படையில் பார்க்கும் போது 'முந்தானை' இதழ்தான் முதல் இடத்தினை வகிக்கின்றது. இவ்விதழ் இருபதிலிருந்து முப்பது துணுக்குகள் வரை வெளியிடுகிறது.

வண்ணத்திரை, ஜெமினி சினிமா, திரைச்சித்ரா, சினிமித்ரன் ஆகியன இருபதிலிருந்து இருபத்தைந்து துணுக்குகள் வரை வெளியிடுகின்றன. சினிமா எக்ஸ்பிரஸ், சினிமா மெயில், சிலுக்கு சினிமா ஆகிய இதழ்கள் பத்திலிருந்து பதினைந்து வரை துணுக்குச் செய்திகளைக் கொண்டிருக்கின்றன. திரைச்சுவை, பேசும் படம், பொம்மை ஆகிய இதழ்கள் ஐந்திலிருந்து பத்து வரை துணுக்குகளை வெளியிடுகின்றன. இவ்வாறு துணுக்குகளின் மூலமாகத் தமிழ்த்திரைப்பட இதழ்கள் திரைப்படக் கலைஞர்களைப் பற்றியும், திரைப்படச் செய்திகள் பற்றியும் கூறுகின்றன.

திரைப்பட இதழ்கள் அனைத்தும், திரைப்படங்கள் பற்றியும், திரைப்படக் கலைஞர்கள் பற்றியும் சொல்லுவன தான் என்றாலும் இதழுக்கு இதழ் இவ்வுத்திகளைக் கையாளுவதில் வேறுபாடுகள் உள்ளன.

படங்கள்

நிழற்பட அமைப்பினைக் காணும் பொழுது, வண்ணப்படங்கள், கவர்ச்சிப்படங்கள், கதைகளின் தன்மைக் கேற்பவும், துணுக்குகளுக்கு ஏற்பவும் நிழற்படங்களும், வரைபடங்களும், ஓவியங்களும் பயன்படுத்தப்படுகின்றன. புதிய புதிய முறைகளில் ஒவ்வொரு இதழும் போட்டிகளை அறிவிக்கின்றன. இதற்குப் பெரிதும் துணை செய்வன படங்கள்தாம். திரைப்படங்களில் நடிகர், நடிகைகளைப் பற்றிய உருவ அழகுகளைச் சில நொடிகள் அல்லது சில நிமிடங்கள் மட்டும் தான் பார்க்க முடியும். ஆனால் திரைப்பட இதழ்களில் கலைஞர்களின் பல படங்கள் பல கோணங்களில் தரப்படுகின்றன. இதன் மூலமாக இரசிகர்கள் கவரப்படுகிறார்கள். இவ்வாறாகத் தமிழ்த் திரைப்பட இதழ்களின் அமைப்பும், உள்ளடக்கக் கூறுகளும் அமையப்பெற்றுள்ளன.

புலனாய்வு இதழ்கள்

புலனாய்வு இதழ்கள் தமிழ் இதழியலுக்குப் புதிய வரவாகும். நுகர்பொருட் பெருக்கம், தேவைகளின் அதிகரிப்பு, வாழ்க்கைச் சூழ்நிலை மாற்றங்கள், மக்கட் தொகைப் பெருக்கம், தேவைகளின் நெருக்கடி, பண்பாட்டு மாற்றங்கள், இயற்கைச் சூழ்நிலை பாதிப்பு, வேலை இன்மை போன்ற பலகாரணிகள் இன்று மனித வாழ்க்கையைப் புரட்டிப் போட்டிருக்கின்றன.

மக்கள் ஒன்று கூடித் திரளுதலும், பிரச்சினைகளைப் பேசுதலும், அமைப்பு ரீதியில் திரண்டு போராட்டங்கள் செய்தலும் அதிகரித்துள்ளன. தகவல் அறியும் ஆர்வமும் மக்களிடையே பெரிதும் பரவியுள்ளது. இவைபோன்ற காரணங்களே புலனாய்வு இதழ்களின் தோற்றத்திற்கும், பரவுதலுக்கும் காரணமாகும்.

புலன் விசாரணைச் செய்தி என்பது தனி விளக்கம் பெறுகிறது. பிற செய்திகளிலிருந்து புலன் விசாரணைச் செய்தி வேறுபடுகிறது. புலன் விசாரணைச் செய்திகள் பெரும்பாலும் குற்றச் செய்திகளை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றன. ஒரு நிகழ்ச்சி நடந்த இடத்திற்குச் சென்று, பல்வேறு ஆதாரங்களைத் திரட்டி அதன் மூலம் உண்மையை வாசகர்களுக்கு அறிவிப்பது, புலனாய்வு இதழ்களின் நோக்கமாகின்றது. பாதிக்கப்பட்ட பிரிவினருக்காகக் குரல் கொடுப்பதும், பாதிப்பிலிருந்து விடுபட அவர்களுக்கு வழிகூறுவதும், உதவுவதும் புலனாய்வு இதழ்களின் நடவடிக்கைகளாகின்றன.

ஆற்றல்

புலனாய்வு இதழ்கள் பிற இதழ்களை விட வலிமை பெற்றனவாக உள்ளன. இத்துறையில் ஈடுபட்டுள்ள பத்திரிக்கையாளர்கள் பலர் இதனை அனுபவத்தால் உணர்ந்து கூறியுள்ளனர். நக்கீரன் துரை, “ஒரு பத்தாண்டுகளுக்கு முன் ஒரு கிராமவாசி பலிகாடு ஆக்கப்பட்டால் அவன் போலீசுக்குப் போவான். தற்காலத்தில் கிராமவாசி எங்களிடம் வருகிறான். அந்த நம்பிக்கையை நாங்கள் வளர்த்துள்ளோம். அவனுக்கு நீதி கொடுப்போம் என்பதல்ல. அநீதிக்கு எதிராக நாங்கள் குரல் கொடுக்கிறோம். ஜனநாயகத்தை நாங்கள் காப்பாற்றுகிறோம்”

என்று கூறுகிறார். புலனாய்வு இதழியல் துறையில் நல்ல பட்டறிவினைப் பெற்றுள்ள பத்திரிக்கையாளர் ஷியாம், "இந்தப் பத்திரிக்கைகள் ஒரு பலமான அணி" என்கிறார். அவருடைய கூற்றுப்படி இந்தப் புலனாய்வு இதழ்கள் குற்றங்களைக் குறைத்திருக்கின்றன என்பது தெரிகிறது. அரசியல் கட்சிகளிலும், கூட்டுறவுச் சங்கங்களிலும், நிறுவனங்களிலும், நிர்வாகச் சீர்கேடுகள் இந்தப் பத்திரிக்கைகளால் பெருமளவு குறைந்துள்ளன என்று அவர் கருதுகிறார். சாணக்கியன் பெருமாள், "மக்களுடைய கண்ணோட்டத்திற்கான மாறுதல் எங்கள் பத்திரிக்கைகளால் ஏற்பட்டது" என்கிறார். அப்படியாயின் பொது மக்களுக்கு இந்தப் பத்திரிக்கைகள் கல்வி கற்றுத் தருகின்றன என்ற பத்திரிக்கையாளர் ஜெகதீசனின் கூற்று வலுப்பெறுகிறது எனலாம். எனவே இன்று அரசின் போக்குகளை எடுத்துக்காட்டி, சமூகத்தில் நடைபெறும் குற்றங்களை, ஊழல்களை, தவறுகளை அச்சமின்றி எடுத்துக் காட்டி, மக்களிடையே விழிப்புணர்வை ஊட்டி ஒருங்கிணைப்பன புலனாய்வு இதழ்கள் எனலாம். மறைக்கப்படும் உண்மைகளைத் தோண்டித்துருவி வெளிக்கொணரும் காவல் பணியையும் இவை செய்கின்றன.

தம்மை நோக்கி வீசப்படும் போர்க்கணைகளையும், சவால்களையும் புலனாய்வு இதழ்கள் நன்கு எதிர் கொள்ளுகின்றன. புலனாய்வு இதழ்கள் துணிவுடன் செயல்படுகின்றன. இதனால் அவை சந்திக்கும் சிக்கல்களும் மிகப்பல. சான்றாக நக்கீரன் இதழின் வெளியீட்டாளரும், ஆசிரியரும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் தலைமறைவாகி விடுவதுண்டு. ஏனெனில் கைதுக்கு அஞ்சி அல்ல. கைது செய்யப்பட்டால் சனி, ஞாயிறு இரண்டு நாட்களிலும் வார விடுமுறை என்பதால் பெயிலில் வருதலும் முடியாது. நக்கீரன் இதழின் அச்சடிப்பாளர் காவல் துறையினரால் விசாரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார் என்பதும் முக்கியத்தகவலாகும் (ராபின் ஜெப்ரி, முன்னது, ப.193)

தோற்றம்

அமெரிக்காவில் 'வாஷிங்டன் போஸ்ட்' என்னும் இதழில் பணியாற்றிய உட்வர்டு, பெர்னஸ், டெயின் ஆகியோர் அமெரிக்கத் தலைவராக இருந்த நிக்சனின் நிருவாக ஊழல்களைச்

செய்தியாக வெளியிட்டனர். நிக்சனின் நிருவாக ஊழல்கள் வாட்டர்கேட் செய்தியாக வெளியிடப்பட்டன. 1838இல் காம்பட் (con-bat) என்ற வேவு அறியும் பத்திரிக்கையின் ஆசிரியராக அஜிரியா நாட்டைச் சேர்ந்த ஆல்பர்ட் சாமு என்பவர் இருந்தார்.

எர்கஸ்ட் ஹைமிங்வே என்ற அமெரிக்கர் "டோரண்டோ ஸ்டார்" என்ற பத்திரிக்கையின் போர்க்கள இரகசிய நிருபராகப் பண்யாற்றினார். ஐந்தாவது பத்தி (The Fifth Column) என்ற பெயரில் வேவு நாடகம் ஒன்றையும் எழுதினார். வின்ஸ்டன் சர்ச்சில் போர்க்கள உண்மை அனுபவங்களை மார்னிங் போஸ்ட் (Morning Post) பத்திரிக்கையில் வெளியிட்டார் (ஆதாரம்-இதழியல் கலை, புலவர் என்.வி. கலைமணி).

இந்தியாவில் 1780இல் ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்பவரால் வெளியிடப்பட்ட பெங்கால் கெசட் என்னும் இதழ் கிழக்கிந்தியக் கம்பெனியின் ஊழல்களை வெளியிட்டது என்று அறியமுடிகிறது. இந்தியாவின் முதல் இதழ் பெங்கால் கெசட் அந்த முதல் இதழிலேயே புலனாய்வு இதழ்களுக்கான விதை ஊன்றப்பட்டது என்று கருதலாம். இவ்வாறாக உலக அளவில் தோற்றம் பெற்ற புலனாய்வு இதழ்கள் தமிழிலும் வெளிவரத் தொடங்கி உள்ளன.

தமிழ்ப்புலனாய்வு இதழ்கள்

தமிழில் புலனாய்வு இதழை முதன் முதலில் வெளியிட்ட பெருமை ஜூனியர் விகடனைச் சேரும். ஜூனியர் விகடனுக்குக் கிடைத்த வரவேற்பின் வெளிப்பாடு பல புலனாய்வு இதழ்களின் தோற்றத்திற்கு வித்திட்டது. தமிழில் ஜூனியர் விகடன், தராசு, நக்கீரன், நெற்றிக்கண், குமுதம் ரிப்போர்ட்டர், போலீஸ் செய்தி, சிவப்பு நாடா, நமது நிருபர், சாணக்கியன், தமிழன் எக்ஸ்பிரஸ் போன்ற பல புலனாய்வு இதழ்கள் வெளிவந்துள்ளன.

ஜூனியர் விகடன் 1994 வரை இதழாக வெளிவந்த பின் 1995 முதல் வாரம் இருமுறை இதழானது. குமுதம் ரிப்போர்ட்டர் 2000 மார்ச் முதல் வெளிவருகிறது. வாரம் இரு முறை வெளிவரும் குமுதம் ரிப்போர்ட்டரின் ஆசிரியர் சே.இளங்கோவன் ஆவார். அதன் உதவி ஆசிரியர் என்.அசோகன். 1987இல் வார இதழாக தொடங்கப்பட்டுப் பின் வாரம் இருமுறை இதழாக மாறிய நக்கீரனின் ஆசிரியர் கோபால் ஆவார்.

உள்ளடக்கம்

புலனாய்வு இதழ்களின் உள்ளடக்கம் நடந்த நிகழ்ச்சிகளின் அடிப்படையிலும், நடக்க இருக்கும் நிகழ்ச்சியினை ஊகித்தும் எழுதப்படுவதால் பெரும்பாலும் கட்டுரை வடிவமே காணப்படுகிறது. கட்டுரைகளுக்கு இடையில் பெட்டிச் செய்திகளாகவும், சிறிய தகவல்களாகவும், துணுக்குகளாகவும் பல செய்திகள் வெளியிடப்படுகின்றன. திரைப்படம் என்பது தமிழ் இதழ்களில் பிரிக்க முடியாத பகுதியாகி விட்டதால் அவையும் இடம்பெறுகின்றன. புலனாய்வு இதழ்கள் வாசகர் பங்கேற்பிற்கும் இடம் தருகின்றன. புலனாய்வு இதழ்களில் இலக்கியக் கூறுகளுக்குப் பெரிதும் இடமில்லை எனினும் ஒரு தொடர் படைப்பு இடம்பெறுவதை ஜுனியர் விகடனில் காண முடிகிறது.

புலனாய்வு இதழ்கள் அரசுச் செய்திகள், நடவடிக்கைகள், போக்குகள், இரகசியங்கள், அத்து மீறல்கள் போன்ற யாவற்றையும் உள்ளடக்கத்தில் படைக்கின்றன. மேலும் இலஞ்ச ஊழல்கள், சமூக அநீதிகள், சமூகக் குற்றங்கள், மக்கள் இயக்கங்கள், மக்கள் புகார்கள், மனித உரிமை மீறல்கள், விபத்துகள், அதிகாரிகளின் போக்குகள், பலதுறை சார்ந்த தகவல்கள் போன்ற பல கருப்பொருட்களின் அடிப்படையில் கட்டுரைகள் வெளிவருவதைக் காணமுடிகிறது.

வடிவம்

புலனாய்வு இதழ்கள் தமக்கெனத் தனி வடிவத்தைப் பெற்றிருக்கின்றன. இவை பிற சஞ்சிகைகளிலிருந்து இவற்றை வேறுபடுத்திக் காட்டுகின்றன. அனைத்துப் புலனாய்வு இதழ்களுமே ஏறக்குறைய ஒத்த வடிவத்தில், அதிகக் கனமின்றி விளங்குகின்றன. இவற்றின் முகப்பு அட்டை வழவழப்பான வண்ணத்தாளில் அமைகிறது. அட்டையிலேயே பரபரப்பூட்டும் செய்தியையும், படத்தையும் வெளியிடுவது புலனாய்வு இதழ்களின் பாணியாக உள்ளது.

முழக்கம்

புலனாய்வு இதழ்கள் தங்களை மக்களிடையே அறிமுகம் செய்து கொள்ளும் பாணி புதுமையானது. பொதுவாக இதழ்கள் தங்களுக்கென ஒரு வாசகத்தைத் தேர்ந்தெடுத்து அதனை

முழக்கமாக அறிவிக்கும். புலனாய்வு இதழ்களின் முழக்கம், புலனாய்வு நோக்கிலேயே அமைந்திருப்பதைக் காண முடிகிறது. ஜுனியர் விகடன், "தமிழ் மக்களின் நாடித்துடிப்பு" என்பதைத் தன் முழக்கமாகக் கொண்டுள்ளது. இதில் மக்களை அறிந்து மக்களுக்காகக் குரல் கொடுக்கும் இதழ் என்பதை அது தெரிவிக்கிறது. நக்கீரன் இதழ் தன்னுடைய பெயருக்கு ஏற்றாற் போல "நெற்றிக்கண் திறப்பினும் குற்றம் குற்றமே" என்னும் வாசகத்தை முழங்குகிறது. இறைவனை எதிர்த்துப் பாண்டிய மன்னன் அவையில் சற்றும் தடுமாற்றமின்றி இறைவன் எழுதிய பாடலில் பிழை உள்ளது என்பதைப் புலவர் நக்கீரர் சுட்டிக்காட்டியதைப் போலத் தானும் குற்றங்களை எவருக்கும் அஞ்சாமல் எடுத்துரைக்கப் போவதாக அதன் முழக்கம் அமைந்துள்ளது. குமுதம் ரிப்போர்ட்டரோ "நிகழ்காலத்தின் குரல்" என்ற முழக்கத்தைக் கொண்டுள்ளது.

அரசியல் செய்திகள்

புலனாய்வு இதழ்கள் கட்சி சார்பின்றி அனைத்துக் கட்சிச் செய்திகளையும் வெளியிடுகின்றன. அரசியல் வாதிகளைப் பேட்டி கண்டும், அவர்களைத் தாமே உற்று நோக்கியும் அவர்களைப் பற்றிப்பல தகவல்களை அவற்றில் வெளியிடுகின்றன. குற்றங்களை வெளிக்கொணர்வது மட்டுமின்றிக் குற்றம் சாட்டுபவர், சாட்டப்படுபவர் ஆகிய இருதரப்பினரின் கருத்துகளையும் கேட்டறிந்து வெளியிடுகின்றன.

அரசியல் செய்திகளை ஆர்வத்துடன் மக்கள் படிக்க வேண்டும் என்ற எண்ணத்திலும் வித்தியாசமானதொரு வெளியீட்டுப்பாணியிலும் புலனாய்வு இதழ்கள் செய்தி வெளியீட்டைச் செய்கின்றன. நாட்டு நடப்புக்களையும், அரசியல் செய்திகளையும், ஜுனியர் விகடன், கழுகு, ஆந்தையார் என்னும் தலைப்புக்களில் வெளியிடுகிறது. உயரத்தில் பிறந்து பூமியில் எந்த இடுக்கில் இருப்பதையும் கண்டறியும் ஆற்றல் பெற்ற கழுகைப் போல ஜுனியர் விகடனும் தகவல்களைத் துருவி அறிந்து வெளியிடும் என்பதைத் தெரிவிக்கும் வகையில் கழுகு என்னும் பெயர் அமைகிறது. கழுகை "ஆர்" விகுதி கொடுத்துக் "கழுகார்" என்று குறிப்பிடும் போக்கு கற்போருக்கு ஆர்வத்தைத் தூண்ட வல்லது. இருட்டிலும் ஆந்தைக்குக் கண் தெரியும். அதைப்போல இரகசியங்களை அறியும் ஆற்றல் ஜுனியர் விகடனுக்கு உண்டு.

இதையொத்து நக்கீரன் "ரங்கால்" என்றும் குமுதம் ரிப்போர்ட்டர் "சுவாமி வம்பானந்தா" என்றும் சிறப்புப் பெயர்கள் தந்து தகவல்களை வெளியிடுகின்றன. இத்தகவல்கள் தமிழ்நாடு மட்டுமின்றித் தலைநகர் வரையிலும் கூடச் சென்று சேகரிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. நக்கீரன் இதழ் 1990களில் ஆட்டோ சங்கரின் செயல்பாடுகளை அரசு, அரசு அதிகாரிகளின் செயல்களுடன் ஒப்பிட்டு வெளியிட்டது (ராபின் ஜெப்ரி, முன்னது, ப193)

அரசியல் செய்திப் பகுதிகள் அரசுக்கும் மக்களுக்கும் இடையே ஒரு பாலமாக அமைவதற்கும் வாய்ப்பினை உருவாக்குகின்றன. அரசியல் வாதிகளின் தவறுகளைச் சுட்டிக்காட்டுவது மட்டுமின்றி அவர்களைப் பற்றியும், அவர்களின் தொகுதி மேம்பாட்டுக்கான உழைப்பைப் பாராட்டியும் அரசியல் செய்திகள் வெளியிடப்படுகின்றன. சான்றாக "நக்கீரன் டாப் 10 அமைச்சர்கள்" என்ற பகுதியை வெளியிட்டு, இதன் மூலம் தமிழக அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்கள் பற்றிய தகவல்களைத் தருகின்றதைக் குறிப்பிடலாம். அமைச்சர்கள் மக்களுடன் கொள்ளும் உறவு, கட்சியில் அவர்களது பங்கு, பொதுவாழ்வில் ஈடுபாடு போன்றவற்றையும் சேகரித்து அதுவெளியிடுகிறது. அமைச்சர்களின் நடவடிக்கைகளை உற்று நோக்கிக் கவனித்து வெளியிடும் இப்பகுதியை வாசகர்கள் ஆர்வத்துடன் படிக்கின்றனர்.

அரசியல் நிகழ்ச்சிகளுக்கும், செய்திகளுக்கும் ஆர்வத்தைத் தூண்டும் தலைப்புகள் தரப்படுகின்றன. முக்கியமான அரசியல் நிகழ்வெனில் அதுவே அட்டைப்படத்தில் இடம்பெறும் போக்கும் காணப்படுகிறது.

குற்றச் செய்தி

புலனாய்வு இதழ்களில் பெரும்பகுதி குற்றச் செய்திகளுக்காகவே ஒதுக்கப்படுகிறது. குற்றச் செய்திகள் பல வகைப்படுகின்றன. பொதுவாக அவற்றைக் கீழ்க்கண்டவாறு பகுக்கலாம்.

1. தனிமனிதனுக்கு எதிரானவை
2. பொதுமக்கள் நலனுக்கு எதிரானவை

இவ்விருவகைகளில் குற்றங்கள் பல காரணங்களுக்காக நடக்கலாம். தாக்குவது, கடத்துவது, கொலை செய்வது, பலாத்காரம் புரிவது, திருடுவது கொள்ளையடிப்பது, கையாடல் செய்வது, அதிகாரிகளை மிரட்டுவது, சட்டத்தைத் தடுப்பது போன்ற பல வகைகளில் குற்றங்கள் நிகழ்கின்றன. கலகம் செய்வது, போராட்டங்கள் நடத்துவது, பொதுச் சொத்துகளை அழிப்பது, பொது வாழ்க்கையின் அமைதியைக் கெடுப்பது போன்ற யாவும் பொதுமக்கள் நலனுக்கு எதிரானவையாகும். புலனாய்வு இதழ்களுக்குப் பெருமளவில் தீனிதருவது குற்றச் செய்திகள் தான்.

காவல்துறைச் செய்திகள்

காவல் துறையின் உயரதிகாரிகள் காவல்துறைச் செய்திகளில் முக்கிய இடம் பெறுகின்றனர். உயர் அதிகாரிகளின் திறமைகள் வெளிப்படுத்தப்பட்டுப் பாராட்டப்படுகின்றன. காவல் துறையினரின் சாகசங்கள், திறமையான செயல்பாடுகள் பலவற்றையும் வெளியிடும் அதே நேரத்தில் காவல்துறையின் அலட்சியப் போக்கு, அதிகார மீறல்கள், ஆணவ நடவடிக்கைகள், இரகசியத் திட்டங்கள், இலஞ்சப் பரிமாற்றங்கள் போன்ற பல குறைகளையும் புலனாய்வு இதழ்களே வெளியிடுகின்றன. புலனாய்வு இதழ்கள் தவிர வேறு பிற இதழ்கள் இவற்றை விரிவாக வெளியிடுவதில்லை. காவல்துறைச் செய்திகள், காவலர் மக்கள் உறவு நிலை வளர்ப்பதற்கும் உதவுகின்றன. அரசுக்கும், காவல் துறையினருக்கும் இடையே காணும் உறவுகள், பேதங்கள் பேதங்களின் விளைவான பணியிட மாற்றங்கள், பதவிப்பறிப்புகள் போன்ற யாவற்றையும் துப்பறிந்து வெளியிடுகின்றன.

கல்வித்துறைச் செய்திகள்

ஒரு சமூகத்தின் முக்கிய அங்கங்களுள் கல்வி நிறுவனங்களுக்குத் தனியிடம் உண்டு. புலனாய்வு இதழ்கள் அந்நிறுவனங்களில் நடைபெறும் பிரச்சினைகளையே பெரும்பாலும் வெளிக்கொணருகின்றன. ஆசிரியர்கள், நிருவாகம் இவற்றில் காணப்படும் குற்றங்கள், தவறுகள், மாணவர்களுக்கும், நிறுவனத்திற்குமிடையே நேரும் கருத்து வேறுபாடுகள், விதிமீறல்கள் போன்ற பல செய்திகளை அறிந்து வெளியிடுகின்றன. மாணவர்களின் போராட்டம், மாணவர்கள்

தொடுக்கும் வழக்குகள், மாணவர்களின் எதிர்பார்ப்புகள் போன்றவற்றைப் புலனாய்வு இதழ்கள் வெளிக்கொணருகின்றன. பள்ளிகளில் மனித உரிமைக்கு எதிராக மாணவர்க்கு இழைக்கப்படும் தண்டனைகள், மாணவியர் மீதான பாலியல் பலாத்காரங்கள் போன்றவற்றைப் புலனாய்வு இதழ்கள் அறிந்து வெளியிடுகின்றன. பிரச்சினைகளை வெளியிடும் போது சட்டங்களையும், சட்ட வல்லுநர்களையும் அணுகி, அக்கருத்துகளை வெளியிடும் போக்கும் உள்ளது.

விழிப்புணர்வுச் செய்திகள்

புலனாய்வு இதழ்களில் போதைப் பொருள் பயன்பாடு, சைபர் குற்றங்கள், போலித்தொழிலில் ஈடுபடுவோர், போலி நிறுவனங்கள், தொழிலாளர் சிக்கல்கள், திருமண மோசடிகள், வரதட்சிணைப் பிரச்சினைகள், வேலை தேடும் இளைஞர்கள் சந்திக்கும் பிரச்சினைகள், சமூகக் குற்றவாளிகள், போலிகள் போன்ற பல தரப்பினருட்பட்ட பலவகைச் செய்திகள் வெளியிடப்படுகின்றன. இச்செய்திகள் குற்றங்களை எடுத்துக்காட்டுவது மட்டுமின்றி மக்களுக்குச் சமூகத்தில் நிகழும் பல ஏமாற்று வேலைகள், பொய்-புரட்டுகள், பித்தலாட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை ஊட்டி எச்சரிக்கை செய்யும் சாதனங்களாகவும் விளங்குகின்றன. போலிச்சாமியார்கள் பற்றிய விவரங்களும், போலிமந்திரவாதிகள் பற்றிய தகவல்கள் இதில் முக்கியமானவை. குறிப்பாகப் பெண்கள் போலிகளிடம் ஏமாறாமல் இருக்க இச்செய்திகள் உதவுகின்றன.

விவசாயச் செய்திகள்

புலனாய்வு இதழ்களில் விவசாயச் செய்திகள் மிகக் குறைவாக வெளிவருகின்றன. விவசாயத் தொழில், நீர்மேலாண்மை போன்றவற்றில் சிக்கல் நேரும் காலக் கட்டங்களில் மட்டும் விவசாயச் செய்திகள் இடம்பெறுகின்றன. விவசாயக் கூலிகள், விளைச்சல் விவரங்கள், விவசாயிகளின் சிக்கல்கள், தண்ணீர்ப் பிரச்சினை, விலை நிர்ணயம் போன்றன இன்றும் அதிகமான தகவல்களையும், சட்ட அறிவையும் மக்களுக்குத்தர வேண்டிய அவசியம் உள்ளது.

தொடர் நடவடிக்கை

புலனாய்வு இதழ்களில் ஃபாலோ அப் (Followup) செய்யப்படுகிறது. அதாவது ஏதாவது ஒரு பிரச்சினை

வெளியிடப்பட்டால் அதனைத் தொடர்ந்து நடிவடிக்கை எடுத்து, அதற்கான தீர்வையும் பெற்றுத் தருவது தொடர் நடவடிக்கையாகும். சான்றாகக் கல்விக் கடன் பெற முடியாது தவித்த மாணவர் பற்றிய தகவலை வெளியிட்டுப்பின் வங்கி அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு, மாணவர்க்குக் கடன் உதவி பெற்றுத் தந்ததைக் குறிப்பிடலாம். (ஜூனியர் விகடன்). நக்கீரன், ஜூனியர் விகடன் போன்ற புலனாய்வு இதழ்கள் இப்பணியைச் செய்கின்றன. இத்தொடர் நடவடிக்கைச் செய்திகள் ஆதாரங்களுடன் முந்தைய செய்திகளைக் குறிப்பிட்டு வெளிருகின்றன.

சமுதாயத்தின் பல பகுதிகளிலும், பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கையை எல்லோருக்கும் எடுத்துக்காட்டுவதே புலனாய்வு இதழ்களின் குறிக்கோள் ஆகும் என்கிறார் பத்மநாபன். தமிழ்ப்புலனாய்வு இதழ்கள் அண்மைக்காலத்தில் தோன்றியவை எனினும் இத்தகைய வளர்ச்சி நிலையை எட்டி விட்டன என்றே கூறலாம். அதிகார வர்க்கத்தின் உண்மை முகங்களை வெளிக்கொணரும் ஆக்கபூர்வமான பணியினைப் புலனாய்வு இதழ்கள் செய்து கொண்டுள்ளன. காந்தியடிகள் குறிப்பிட்டதைப் போலக் குற்றங்குறைகளை அச்சமின்றிச் சுட்டிக்காட்டும் புலனாய்வு இதழ்கள் மேலும் வளர்ச்சி பெறும் என்பதில் ஐயமில்லை.

அறிவியல் இதழ்கள்

தமிழில் இதுவரை வெளிவந்துள்ள அறிவியல் இதழ்களின் எண்ணிக்கை 185 என்று கணக்கிடப்படுகிறது. (இராபாவேந்தன், தமிழில் அறிவியல் இதழ்கள், ப.139)

தொடக்கக் காலத்தில் பிற பொதுச் செய்திகளுடன் அறிவியலையும் வெளியிட்டு வந்தன. இதற்குச் சான்றாகத் "தமிழ் மேகசின்" என்னும் இதழைக் குறிப்பிடலாம். பின்னர்ப் பொது இதழ்களில் அறிவியலை வெளியிடும் போக்கு உருவானது. 1831இல் தொடங்கிய இப்போக்கு 1900 வரை நீடித்தது எனக் காண முடிகிறது. இதனால் 1831-1900க்கு இடைப்பட்ட காலக்கட்டத்தை அறிவியல் இதழ்களின் "வளர் முகக் கட்டம்" என்று இரா.பாவேந்தன், மேலது, ப.140) குறிப்பிடுகிறார். தமிழ் இதழ்களில் அறிவியல் கருத்துகள் தொடக்கக் காலத்திலிருந்தே

வெளியிடப்பட்டு வந்தன என்பதன்றி அனைவராலும் படிக்கப்படும் ஒரு பகுதியாகவும் விளங்கின.

அறிவியல் இதழ்கள் பொதுவாகப் பல தரப்பினவாக உள்ளன. இதழ் முழுவதும் அறிவியல் செய்திகளையும் தகவல்களையும் தாங்கி வரும் இதழ்கள் ஒருபுறமிருக்கத் தனித்தனித் துறை சார்ந்தும் பல அறிவியல் இதழ்கள் வெளிவரத் தொடங்கின. அவற்றுள் வேளாண்மை சார்ந்த இதழ்கள் குறிப்பிடத் தகுந்தன. மருத்துவ இதழ்களும் பல்கிப் பெருகியுள்ளன. இவை தவிரப் பிறதொழில் நுட்பத் துறைகள் பற்றியும் இதழ்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன.

உழவு, உழவன் தொடர்பான இதழ்களை வேளாண்மை இதழ்கள் எனலாம். "கிருஷி" என்ற பெயரில் விடுதலைக்கு முன்பே வேளாண்மை இதழ்கள் வெளிவந்தன. விவசாயி, கருவிகள், பயிர்த்தொழில், விவசாய உலகம், வேளண்மை வளம், உங்கள் விவசாயம் போன்ற பல இதழ்கள் உழவு சார்ந்த தகவல்களையும், செய்திகளையும், வெளியிடுகின்றன. வேளாண்மை இதழ்களில் உழவுத் தொழில் முறைகள், உழவு சார்ந்த பணிகள், பயிர்த் தன்மைகள், விளைச்சல் பெருக்கம், விற்பனை வசதி, அரசின் உதவி போன்ற பல தகவல்கள் இடம்பெறுகின்றன. மேலும் உழவுடன் மிக நெருங்கிய தொடர்புடைய கால்நடை பற்றிய தகவல்களும் வெளிவருகின்றன. கால் நடை வளர்ப்பு, கால் நடை மருத்துவம், ஆடு கோழி வளர்ப்பு, பண்ணை அமைத்தல் பற்றிய தகவல்கள் அவற்றின் முக்கிய உள்ளடக்கங்களாகின்றன.

மனித வாழ்விற்கு உடல் நலம் மிக இன்றியமையாதது. இதை வலியுறுத்தும் வகையில் மருத்துவத் துறையில் கணக்கிடலங்கா இதழ்கள் வெளிவரத் தொடங்கியுள்ளன. சித்த மருத்துவம், ஆயுர்வேதம், யுனானி, இயற்கை மருத்துவம், அலோபதி போன்ற பல வகை மருத்துவ முறைகளுக்கும் தனித்தனியே இதழ்கள் உள்ளன. ஆண்கள், பெண்கள் குழந்தைகள் போன்றோருக்கான தனித்தனி இதழ்களும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. மூலிகைகள் பற்றிய கருத்துகள், யோகாசனத் தேவை, கண் மருத்துவம், புற்றுநோய் பற்றிய தகவல்கள், கருவுறுதல் தொடர்பான விவரங்கள், குழந்தை வளர்ப்புப் போன்றன மக்களிடையே வரவேற்பைப் பெற்றுள்ள உள்ளடக்கக் கருத்துகளாகும். 'ஹெல்த்', 'உடல் நலம்' போன்ற இதழ்கள் இவ்வகையில் குறிப்பிடத் தக்கன.

தொழில் நுட்பம், இயந்திரங்கள், வாகனங்கள் தொழில் சார்ந்த தகவல்களைத் தரும் இதழ்கள் இன்று பெருகிவருகின்றன. "பொறியியல்", களஞ்சியம் போன்ற இதழ்கள் அவ்வகையில் குறிப்பிடத் தகுந்தன. தற்போது ஜூனியர் விகடனில் வெளிவரும் நாணய விகடனும், மோட்டார் விகடனும் இவ்வகையினவே. தொழில் செய்வோருக்கு இவ்விதழ்கள் தேவையான கருத்துகளை வழங்குகின்றன.

பொது இதழ்கள்

அறிவியலின் தனித்த எந்தப் பிரிவையும் சாராத பொது இதழ்கள் ஒரு குறிப்பிடத் தகுந்த வாசகர் பரப்பைப் பெற்றுள்ளன. இவ்வகையில் கலைக்கதிர் (1948), விஞ்ஞானி (1965), விஞ்ஞானச்சுடர் (1974) போன்றன குறிப்பிடத்தகுந்தன. பலவகை அறிவியல் தகவல்களைப் பெரும்பாலும் கட்டுரை வடிவில் இவை வழங்குகின்றன. பலவகையான அறிவியல் தகவல்களைத் தாங்கிய கனமான இதழ்களாக இவை வெளிவருகின்றன.

அறிவியல் இதழ்கள் தோன்றி மறையும் தன்மையினவாக உள்ளன. விளம்பர உத்திகள் பலவற்றுடன், மக்களைக் கவரும் தோற்றத்துடன் வெளிவரும் வெகுஜன இதழ்களுக்கிடையே அறிவியல் இதழ்கள் பலவித இடையூறுகளுக்கிடையே தங்களை நிலைநிறுத்திக் கொள்ள நாளும் போராடுகின்றன. குறிப்பிட்ட வாசகர்களை மட்டுமே நம்பி வெளிவரும் அறிவியல் இதழ்கள் சில குன்றாத ஊக்கத்துடன் வெளிவருவது குறிப்பிடத்தகுந்தது. "மஞ்சரி", "கலைக்கதிர்" போன்ற இதழ்கள் அத்தகையனவே. எனினும் மருத்துவ இதழ்களை நோக்கி வாசகர் கவனம் திரும்பப் பட்டிருப்பதைக் காண முடிகிறது. உடல் நலத்தைக் கணக்கில் கொண்டு உணவுப் பழக்கவழக்கங்களைக் கடைப்பிடிக்கவும், உடல் நலம் பேணவும் விரும்பும் மக்கள் மருத்துவ இதழ்களை நாடிச் செல்கின்றனர் எனலாம்.

சிற்றிதழ்கள்

அச்சுவழிச் சாதனத்தின் வீச்சு மிகப் பெரிதாக இருக்கக் கூடிய காலக்கட்டத்தில் அதே அச்சு வழி ஊடகமாக வெளிவருவனவே சிற்றிதழ்களாகும். ஏதாவது ஒரு குறிக்கோளைக் கொண்டு அதை வெளியாக்கும் நோக்கத்தில் பிறப்பவை

சிற்றிதழ்கள். சிறு குழுவினருக்கிடையில் குறைந்த பக்கங்களில் இவை வெளிவருகின்றன.

"குறைந்த எண்ணிக்கையுடைய பிரதிகளுடன் கொஞ்சகாலமே வாழ்ந்தாலும் குறிப்பிட்ட வாசகர்களையுடைய தனிச்சுற்று வட்டத்தில் சுற்றிக் கனமான கருத்துகளை உள்ளடக்கிப் படைப்பாளர்களுக்குப் படிக்கட்டாகிப் புதிய இலக்கிய முயற்சிகளுக்குச் சோதனைக் களமாகி, மனித நல மேம்பாட்டிற்காக எழுதுவதையே குறிக்கோளாகக் கொண்டு வீரிய விதைகளாக முளைவிடுபவை சிற்றிதழ்கள்" என்று சிற்றிதழ்களுக்கு விளக்கம் தரப்படுகிறது (நசன், சிற்றிதழ்கள், ப.24)

படைப்பாளிகள் தங்களின் திறமைகளை நிலைநாட்டவும், வெளி உலகிற்கு அறிவிக்கவும், அச்சு வடிவில் அவற்றைக் காணும் ஆர்வத்திலும் சிற்றிதழ்களைத் தொடங்கி வெளியிடுகின்றனர். அதுமட்டுமின்றி வெகுஜன இதழ்களால் புறக்கணிக்கப்பட்டும், குறிக்கோள்களிலிருந்து விலக முடியாமல் தவித்தும், கொள்கைகளை வலியுறுத்த வேண்டும் என்ற தீவிர முனைப்புடன் இருந்தும் வருகிற படைப்பாளிகளின் புகலிடமே சிற்றிதழ்களாய் முகிழ்க்கின்றன. இதனை "ஒவ்வொரு சிற்றிதழும் அந்தந்தக் காலக்கட்டத்தில் உருவான அடக்கு முறைக்கு எதிரான மனவெழுச்சிப் பதிவுகள்" என்று குறிப்பிடுகிறார் நசன்.

சிற்றிதழ்கள் மொழி, கலை, கலாச்சார, சமூக வளர்ச்சியை எதிர்பார்த்துத் தொடங்கப்படுகின்றன. பொதுவாகச் சிற்றிதழ்கள் வடிவத்திலும் பக்க எண்ணிக்கையிலும் குறைவானதாகவே வெளிவருகின்றன. மாதம், இருமாதம், காலாண்டு போன்ற கால இடைவெளிகளில் இவை வெளிவருகின்றன. சிற்றிதழ்கள் சிறந்த படைப்பாளிகளை இனம் காட்டுகின்றன. புதிய படைப்பாளிகளை அறிமுகப்படுத்துவது மட்டுமின்றி ஊக்க மூட்டவும் செய்கின்றன. சிற்றிதழ்கள் புதிய படைப்பாளிகள் உருவாவதற்கும் வளருவதற்குமுரிய சிறந்த களங்களாகின்றன. இவை அவர்களுக்குப் பயிற்சிப் பட்டறைகளாக விளங்குகின்றன. தங்களின் படைப்புகளை அச்சில்காண விரும்பும் படைப்பாளிகள் முதலில் சிற்றிதழ்களில்தான் இடம்பிடிக்கின்றனர்.

சிற்றிதழ்களுக்கு வணிக நோக்கமில்லாததால் அவை இலாபத்தைக் குறிக்கோளாக்குவதில்லை. கலை, இலக்கியம்,

சமூகக் கருத்து அல்லது சிந்தனை என்ற ஏதோ ஓர் இலக்கினைக் கொண்டு அவை பிறக்கின்றன. ஒத்த கருத்துடையவர்களை இணைத்துக் கொண்ட ஒரு குழுவாகச் செயல்பட்டுத் தாம் தொடங்கப்பட்ட நோக்கத்திலிருந்து சற்றும் பிறழாமல் அதனை வலுப்படுத்தும் வகையில் அவை உள்ளடக்கக் கூறுகளை அமைக்கின்றன.

நடப்புக்கால வரலாற்றின் பதிவுகள் எனச் சிற்றிதழ்களைக் குறிப்பிடலாம். கலை, இலக்கியம், சமூகம், அரசியல் போன்ற பல்வேறு தளங்களில் நடந்த நிகழ்வுகளை, உண்மைகளை விமரிசனப் போக்குடன் அலசி ஆராய்ந்து பதிவு செய்வன சிற்றிதழ்களேயாம்.

சிற்றிதழ்கள் இலக்கிய வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கின்றன. சமூக மாற்றங்களுக்கும் வித்திடுகின்றன. இதனால் இவை பொழுது போக்கை முதன்மைப்படுத்தி வெளிவரும் ஜனரஞ்சக இதழ்களிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றன. வாசகரின் மனத்தில் சிந்தனையைத் தூண்டி, அதன் அடிப்படையில் அவனுடைய செயல்பாட்டை நோக்கி உந்திச் செல்வன சிற்றிதழ்கள். வெற்று வருணனைகளுக்கும், சொல் ஜாலங்களுக்கும் இவற்றில் இடமில்லை. எனவே சிற்றிதழ்கள் பல வகைகளில் வெகுஜன இதழ்களிலிருந்து வேறுபடுகின்றன. உள்ள பக்கத்தில் மட்டுமில்லாமல் விலையிலும் இவ்விரண்டும் எதிரெதிர் எல்லையில் நிற்கின்றன. இலாப நோக்கில் வெளியிடப்படும் பிறவற்றிலிருந்து விலகித் தயாரிப்புச் செலவினம், வசகரின் வாங்கும் சக்தி இரண்டையும் கொண்டே சிற்றிதழ்களின் விலை தீர்மானிக்கப்படுகிறது.

வகைகள்

சிற்றிதழ்களை உருவத்தைக் கொண்டும், உள்ளடக்கத்தைக் கொண்டும் வகைப்படுத்தலாம். பெயருக்கேற்றாற் போலச் சிறிதாக விளங்கும் சிற்றிதழ்கள் தங்கள் உருவத்தில் அதாவது வடிவத்தில் மிகுந்த கவனம் செலுத்துகின்றன. உள்ளடக்கத்தில் தங்களைப் பிற இதழ்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டும் முனைப்புடன் சிற்றிதழ்கள் விளங்குகின்றன.

வடிவம்

உள்நாட்டு அஞ்சல் வடிவத்தில் சிற்றிதழ்கள் வெளிவருகின்றன. அஞ்சல் அட்டையில் நடத்தப்படும் இதழ்களும் உண்டு. வட்டவடிவமான கையெழுத்துச் சிற்றிதழும் உண்டு. பலவகை வடிவங்களைச் சிற்றிதழ்கள் கொண்டு விளங்குவதாக நசன் குறிப்பிடுகிறார். (நசன், மேலது, ப.25)

உள்ளடக்கம்

சிற்றிதழ்களின் உள்ளடக்கத்தைக் கொண்டு புதிய கருத்துகளை வெளியிடுவன, புரட்சிக்கருத்துகளை வெளியிடுவன, பல்சுவைக் கருத்துகளை வெளியிடுவன என்று பிரிக்கமுடியும் என்கிறார் நசன். மேலும் மருத்துவம், சோதிடம், சாதி, சமயம், இலக்கியம் போன்ற பல்துறை உள்ளடக்கங்களை வெளியிடும் சிற்றிதழ்கள் அவ்வவ் வகையைச் சார்ந்தனவாக இருக்கின்றன. இலக்கியச் சிற்றிதழ்களுள் கவிதை, நாடகம் போன்ற தனித்தனி வகைகளிலும் சிற்றிதழ்கள் வெளிவருகின்றன. சான்றுகளாக அரும்பு, கனவு, கணையாழி, கவிதாசரன், சாரதா, திணை போன்ற இலக்கியச் சிற்றிதழ்களையும், நாடகவெளி அரங்கம் போன்ற நாடகச் சிற்றிதழ்களையும், மொழியை மையமிட்டனவாக அன்றில், தெளிதமிழ், தமிழினமே எழுக, வெல்லும் தூய தமிழ் போன்றனவற்றையும் குறிப்பிடலாம். கவிதைக்கெனச் சிற்றிதழ்கள் தனியே வெளிவருவதுண்டு. அவற்றுள் மரபு வகையைச் சார்ந்த கவிதை, கவிக்குயில், சோலைக் குயில்கள் போன்றனவும், புதுக் கவிதை வகையைச் சார்ந்த நவீனக் கவிதை, மௌனம், உங்கள் கவிதைக்காரன் போன்றனவும் அடங்கும். சமுதாய அடக்குமுறைக்கு எதிரானவையாக நிகழ், நிறப்பிரிகை, செய்திச்சரம், மனுசங்க, புறப்பாடு, விழுது, மக்கள் மன்றம் போன்றன அமைகின்றன. மருத்துவச் சிற்றிதழாக "ஹோமியோ நண்பன்'' சாதிச் சிற்றிதழாக மள்ளர் மலர் போன்றன வெளிவருகின்றன. நூல் விமரிசனங்களுக்காகவே "புத்தக உலகம்", "புத்தக நண்பன்", "நூலகர் ஓலை", "புத்தக விமரிசனம்", "நூல் நயம்", "நூலகம்'' என்பனவும் செய்தி மடல் இலக்கியம் போன்ற இதழ்களும் வெளிவந்துள்ளன.

இதழாசிரியர்கள்

சிற்றிதழ்களின் குறிக்கோளும், அதை வாசகர் இடையில் எடுத்துச் செல்லும் மதி நுட்பமும் இதழாசிரியர்களைப் பொறுத்ததாகும். தரத்தைக் கட்டிக் காத்துச் சிக்கல்களை நன்கு

நுணுக்கமாக ஆராய்ந்து நல்ல வடிவங்களைத் தேர்ந்தெடுத்து வெளியிடும் பொறுப்பு இதழாசிரியர்களுக்கு உள்ளது. சிறந்த இதழாசிரியர்களால் நடத்தப்பட்ட இதழ்கள் எத்தனை ஆண்டுக்காலம் வெளிவந்தன என்ற அளவுகோலின்படிக் கணிக்கப்படுவதில்லை. எத்தகைய கனத்துடன் வெளிவந்தன என்பதே அவற்றை மதிப்பிடும் துலாக்கோல் ஆகிறது. குறைந்த கால அளவில் எனினும், நல்ல தரத்துடன் வெளியிடப்பட்ட சிற்றிதழ்கள் காலாகாலத்திற்கும் பேசப்படும் உயர்வை எட்டும். இதற்கு இதழாசிரியர்களே முக்கியப் பொறுப்பாளர் களாகின்றனர். பல மொழிகளிலும் வெளிவரும் சிற்றிதழ்கள் நல்ல தரத்துடன் வெளிவருகின்றன (நசன், மேலது, ப.85)

சிற்றிதழ்களின் ஆசிரியர்கள் நல்ல கருத்துச் செறிவுள்ள படைப்புகளை வெளியிடுவதில் ஆர்வம் காட்டினால்தான் அவ்விதழ்கள் நன்கு வேரூன்றி நிற்கும். முதல் இதழைப் பெரும் பொருட் செலவில் தொடங்குதல், நண்பர்களைச் சமாளிப்பதற்காக எல்லாவகைப்படைப்புகளுக்கும் இடமளித்தல் போன்றன தவிர்க்கப்பட வேண்டியவை. இதழாசிரியர்கள் தமது இலக்குக் குறித்த பரந்த வாசிப்பினையும், தேடல்களையும் நிகழ்த்தினால்தான் இதழ்கள் முத்திரை பதிக்க முடியும். பழைய, படைப்பாளிகளை அரவணைத்தல், புதிய படைப்பாளிகளை வரவேற்றல் போன்ற இருநிலைகளும் இதழாசிரியர்களுக்குத் தேவை. விளம்பரம், பாராட்டுரைகள், புகழ்ச்சி மொழிகள் போன்றவற்றிற்கு மயங்காமல் தம் தொலை நோக்கு ஒன்றையே மையப்படுத்திச் செயல்படும் இதழாசிரியர்களுக்குச் சிற்றிதழ் உலகில் தனித்த ஓர் இடம் உண்டு.

வாசகர்கள்

சிற்றிதழ்களின் வாசகர் வட்டம் மிகக் குறுகியது. பொதுவாகவே சந்தா கொடுத்து இதழ் வாங்கிப் படிக்கும் பழக்கம் குறைந்திருக்கும் நமது நாட்டில் சிற்றிதழ்களை வாங்கி வாசிக்கும் வாசகர்கள் மிகச் சிலரே. ஆயின் ஒரு சிற்றிதழின் வளர்ச்சி வாசகர்களின் கையில்தான் உள்ளது. வாசகர்கள், விமர்சகர்களாகி அதில்வெளிவரும் படைப்புகளை அலசி, ஆராய்ந்து கருத்துத் தெரிவிக்கும் போதே ஒரு சிற்றிதழ் வளர்ச்சிப் பாதையில் செல்ல முடியும். நல்ல தரமான வாசகர்களே சிற்றிதழின் ஆணிவேர். ஆழ்ந்த படிப்பு தேவைப்படும் சிற்றிதழ்

வாசிப்பிற்குப் பெரும்பான்மையானோர் இன்று தயாராக இல்லை.

சிற்றிதழ்கள் வாசகர்களைப் படைப்பாளர் களாக்குகின்றன. பிறகு அவர்கள் இதழாளர்களாகவும் மாறுகிறார்கள். இத்தகைய வாசகர் கூட்டம் தான் சிற்றிதழ்களைப் புதிது புதிதாக, ஒன்று மறைந்தாலும் மற்றொன்று என்ற நிலையில் பிறப்பித்துக் கொண்டே இருக்கிறது. சிற்றிதழ்கள் பலவும் வாசகர்களை நன்கு மதிக்கின்றன. வாசகர் கடிதங்களுக்கான பகுதியைச் சில இதழ்கள் தனியே ஒதுக்குகின்றன. அப்பகுதி எதிரொலி, மீட்டல்கள், உரைகல், சிற்பிகளின் குரல் போன்ற பலபெயர்களில் வெளிவருகின்றன. நடுநிலைமையுடன் நல்ல புரிதலோடு எழுதப்படும் வாசகர் கடிதம் இதழை உயர்த்தும்.

புதிய போக்கு

சிற்றிதழ்களுக்காகக் கண்காட்சிகள், மாநாடுகள் நடத்தப்படுகின்றன. மேலும் வெகுஜன இதழ்கள் சிற்றிதழ்களில் வரும் படைப்புக்களை மறுபிரசுரம் செய்ய முனைகின்றன. எனினும் விற்பனையில் முன்னேற்றம் இன்னும் தேவை.

சிற்றிதழ் நூலகம் உருவாகி இருப்பது மிகக் குறிப்பிடத்தக்க முயற்சியாகும். அவ்வப்பொழுது தோன்றித் தோன்றி மறைகின்ற சிற்றிதழ்களைப் பற்றிய தகவல் திரட்டல் மிகத் தேவையான பணியாகும். அதனைச் "சிற்றிதழ்ச் செய்தி" என்னும் இதழ் செய்து வருகிறது. ஏறக்குறைய இரண்டாயிரம் சிற்றிதழ்கள் பற்றிய தகவல் தொகுப்பினை இதுவரை இது திரட்டியுள்ளது. இவற்றுள் முழுமையாகக் கிடைத்த சிற்றிதழ்களும் உண்டு. தற்போதைய தொழில் நுட்ப முறையில் இவை பதிவாக்கப்பட்டு (Micro Film) வந்துள்ளன. இது சிற்றிதழ்கள் வளர்ச்சியின் புதிய போக்கு எனலாம்.

சவால்கள்

சிற்றிதழ்களுக்கு விற்பனை என்பது மிகப்பெரிய சிக்கலாக இருக்கிறது. வணிக நோக்குடன் மிகப் பரவலாக நடத்தப்பட்டு வரும் ஜனரஞ்சக இதழ்கள் விற்பனையாகும் அளவில் ஒரு விழுக்காடு கூடச் சிற்றிதழ்கள் விலைபோவதில்லை. சிற்றிதழ்களைப் போலப் பல மடங்கு விலையில் விற்கப்பட்டாலும் அவற்றை வாங்குவதற்கு மக்கள்

தயங்குவதில்லை. எனவே அவற்றுடன் விற்பனைப் போட்டி நடத்த முடியாமல் சிற்றிதழ்கள் தடுமாறும் நிலை உள்ளது. பெரும் முதலீடு செய்ய முடியாத நிலையில் சிறுசிறு குழுக்கள் சேர்ந்து நடத்தும் இச்சிற்றிதழ்கள் குறுகிய கால எல்லைக்குள் தங்கள் வாழ்வை முடித்துக் கொள்வது வழக்கமாக இருக்கிறது. தற்போதைய காலக்கட்டத்தில் சின்னத்திரை, பெரியதிரை ஆகியவையும் இதழ்களுக்குப் போட்டியை உருவாக்குகின்றன. வெகுஜன இதழ்கள் இலாபம் ஈட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்டு வெளி வருகின்றன. சிற்றிதழ்களோ கொள்கைப் பிடிப்புடன் கருத்துகளைப் பரப்புவதையே நோக்கமாகக் கொண்டு வெளிவருகின்றன.

தற்போது இதழ் வெளியிடுதல் மிகப்பெரும் பொருள் முதலீட்டில் செய்யப்படும் பெரிய வியாபாரமாக ஆகிவிட்டது. எனவே மேலும் மேலும் இலாபம் தேடும் நோக்கில் தான் உள்ளடக்கங்கள் தெரிவு செய்யப்படுகின்றன. இச்சூழலில் கொள்கைகளின் அடிப்படையில் பிறக்கும் சிற்றிதழ்கள் மக்களின் சிக்கல்களையும் எடுத்துரைக்கத் தயங்குவதில்லை. அரசை விமரிசனம் செய்வதற்கும் அவை அஞ்சுவதில்லை. இதுமட்டுமின்றி வெகுஜனப் பத்திரிக்கைகளின் வணிக நோக்கினை இவை குறை கூறுவதுண்டு. இத்தகைய பல்வேறு காரணங்களால் அரசின் ஆதரவையும், பொதுமக்களின் அரவணைப்பையும் இவ்விதழ்கள் இழக்க நேரிடுகிறது. சிற்றிதழ்களின் விற்பனைக் குறைவு இதழ்களை நிறுத்தும் நெருக்கடியை உருவாக்குகிறது. இச்சூழலில் சமூகப் பிரக்ஞை உள்ள அமைப்புகள், இலக்கிய ஆர்வம் மிகுந்த அமைப்புகள், சேவைச் சங்கங்கள் போன்றன முன்வந்து இச்சிற்றிதழ்களுக்கு உதவிட வேண்டும்.

சிற்றிதழ்கள் எதிர்கொள்ளும் சிக்கல்கள்

1. சிற்றிதழ்கள் தொடங்கும் போது இருந்த ஆர்வம் தொடங்கிச் சில நாட்களில் குறைவதுண்டு.

2. தொடங்கும் போது இணைந்திருந்தவர்கள் குறுகிய நாட்களில் பல்வேறு காரணங்களினால் பிரிதல் (இடமாற்றம், கருத்துமாறுபாடு முதலானவை).

3. விற்பனை குறைவு, தேக்கம் மிகுதி.

4. இலக்கியத்தை விரும்பிக் கற்கும் வாசகர் பரப்பு மிகக் குறைவு.

5. ஜனரஞ்சக இதழ்களுடன் போட்டியிட்டு நிலைக்க இயலாமை.

6. இதழாசிரியரின் மனஊக்கம் குறைதல்.

7. இடம், பொருளாதாரம் சார்ந்த சிக்கல்கள்.

8. சொந்தப் பணத்தைச் செலவிட்டுப் பின் இயலாமல் போதல்.

9. தொலைக்காட்சியின் ஆதிக்கம்.

10. கடன் தொல்லைகள்.

11. காகித விலை உயர்வு, அச்சுக்கூலி போன்றன பொருளாதார நெருக்கடி தரும் போக்கு.

12. விற்பனையில் முகவர்களிடையே காணப்படும் ஆர்வமின்மை.

13. மக்களிடையே வாசிப்புத்திறன் குறைந்துள்ளமை.

14. கம்பி வழி, விண்வழித் தொலைக்காட்சி, திரைப்படம் போன்றவற்றின் புதிய வரவால் வாசிக்கும் பழக்கம் குறைந்துள்ளமை.

குறைகள்

சிற்றிதழ்களை வெளியிடுவோர் தங்கள் சொந்தக் கருத்துகளை மட்டும் வலியுறுத்தி எழுதும் போக்கினைக் கொண்டுள்ளனர். ஒருவர் பல புனைப் பெயர்களில் இதழ்களில் எழுதுவதும் அதன் வீழ்ச்சிக்கு ஒரு காரணமாகிறது. தாம் அறிந்தவர்களை மட்டுமே நம்பி இதழ் தொடங்கும் போக்கும் காணப்படுகிறது. விற்பனை முயற்சிகள் சிற்றிதழ்களைப் பொறுத்த வரை மிகக் குறைவாகும்.

“கால ஓட்டத்தில் அடிபட்டுப் போகிற தாள்களாக இராது, காலத்தினூடு நிலைபெற்று நின்று பெயர் சொல்லக்கூடிய சாதனையாகத் திகழ வேண்டும் என்ற இலட்சியதாகத்தோடு நடத்தப்படுகிற சிறு பத்திரிக்கைகளே சிறப்பானவையாக அமையும். அவையே இலக்கியத்துக்கும், மொழிக்கும் நல்லது செய்ய முடியும்” என்பது எழுத்தாளர் வல்லிக்கண்ணனின் கூற்றாகும் (தமிழில் சிறு பத்திரிக்கைகள், ப.336).

இலக்கியச் சிற்றிதழ்கள்

ஜனரஞ்சக இதழ்களின் பெருக்கத்திற்கு இடையில் உண்மையான ஆர்வத்துடன் இலக்கிய நேயத்துடன் வெளியிடப்படுபவை இலக்கியச் சிற்றிதழ்கள் ஆகும். சந்தாவை மட்டும் நம்பி வெளிவரும் இலக்கியச் சிற்றிதழ்கள் இலக்கிய ஆர்வத்தின் காரணத்தினால் மட்டுமே தொடங்கப்படுகின்றன. இச்சிற்றிதழ்களை இலக்கிய அமைப்புகளும், தமிழ்ச் சங்கங்களும், மடங்களும் நடத்துகின்றன.

விடுதலைக்கு முந்தைய காலத்திலேயே இலக்கிய இதழ்கள் தோன்றின. மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் "செந்தமிழ்" என்னும் மாத இதழ் 1902ஆம் ஆண்டில் சேதுபதி மன்னரின் ஆதரவுடன் தொடங்கப்பட்டது. அதே ஆண்டில் இலக்கிய ஆய்வினை மையமிட்டு வெளிவந்த மற்றொரு இலக்கிய இதழ் ஞானசாகரம் என்பதாகும். இதில் மறைமலையடிகளின் கட்டுரைகள் தொடர்ந்து வெளியிடப்பட்டன. இதுவே பின்னர் "அறிவுக் கடல்" என்றும் பெயர் மாற்றம் பெற்றது.

விடுதலைக்குப் பிந்தைய நாட்களில் தோன்றிய இலக்கியச் சிற்றிதழ்களுள் குறிப்பிடத்தக்கது 1948இல் எம்.வி. வெங்கட்ராம் தொடங்கிய "தேனீ" இதழாகும். அதே காலக்கட்டத்தில் காதம்பரி என்ற இதழும் வந்தது. 1950களில் திருக்குறளை மையமிட்டு இலக்கியச் சிற்றிதழ்கள் தொடங்கப்பட்டன. இவற்றுள் "குறள் மலர்" (1950), "திருக்குறள் குமரேச வெண்பா" (1954), என்பன குறிப்பிடத்தக்கன. பின் வந்த காலங்களில் "முல்லைச் சரம்", "செம்பரிதி" "மாணாக்கன்", "தமிழாசிரியன்", "தென்மொழி", "தேனோலை", "குறளீயம்", "குறள் நெறி", "நித்திலக் குவியல்" என்று பல இதழ்கள் வெளிவந்தன. சைவமடங்கள் சமய இலக்கியச் சார்புடைய சிற்றிதழ்களை வெளியிட்டன. அவற்றுள், குறிப்பிடத்தக்கன "ஞானசம்பந்தம்", "மெய் கண்டார்", "குமர குருபரர்" போன்றனவாம்.

இலக்கியப் போக்குகள் இயக்கங்களை நோக்கித் திரும்பிய காலக்கட்டத்தில் அவற்றிற்கேற்றாற் போலச் சிற்றிதழ்கள் தோன்றின. திராவிட இயக்கமும், மார்க்சியமும் இலக்கியச் சிற்றிதழ்கள் தோன்ற வழிவகுத்தன. 1954இல் தொ.மு.சி. ரகுநாதன் நெல்லையில் சாந்தி என்னும் சிற்றிதழைத் தொடங்கினார்.

அக்காலக் கட்டத்தில் வெளிவந்த "சரஸ்வதி" இதழும் குறிப்பிடத் தகுந்தது. 1959 ஜனவரியில் சி.சு. செல்லப்பா எழுத்து என்னும் இதழைத் தொடங்கினார். இலக்கிய உலகில் பல சாதனைகளைச் செய்த இவ்விதழ் பதினோரு ஆண்டுக் காலம் வெளிவந்தது. "இலக்கிய வட்டம்" என்னும் இதழைக் க.நா.சு. 1963 நவம்பரில் தொடங்கினார். மாதமிரு இதழாக வெளிவந்த இலக்கிய வட்டம் பத்தொன்பது மாதங்கள் வெளிவந்தது. இவை தவிர அஃ, கசடதபற, நடை, தீபம், கணையாழி போன்ற சிற்றிதழ்களும் தோன்றின. இவை தவிர மரபுக் கவிதைகளுக்கென்று தனியாகவும், புதுக்கவிதைகளுக்கென்று தனியாகவும் சிற்றிதழ்கள் தோன்றின. வானம்பாடி, ஐ, தெருக்கூத்து, ழ, கவனம், ஸ்வரம், மீட்சி போன்றவை புதுக்கவிதைகளுக்காகத் தோன்றியவை. வானம்பாடிக் கவிஞர்கள் மிகவும் பிரபலமாக அறியப் பட்டார்கள். கவிதை (சுரதா) முல்லைச்சரம், குயில் (வஹாப்) போன்றன மரபுக் கவிதைகளுக்காகத் தொடங்கப்பட்டன. இன்னும் பவித்ரா, சதங்கை, இலக்கிய வெளிவட்டம், படிகள், பிரக்ஞை, பரிணாமம், சிகரம், மனஓசை, புதியகலாச்சாரம் போன்ற இதழ்கள் தோன்றின. இவற்றுள் இடதுசாரிப் பின்னணியில் தோன்றியவையும் உண்டு.

தற்போது வெளிவரும் இலக்கியச் சிற்றிதழ்களுள் "காலச் சுவடு" குறிப்பிடத் தகுந்தது. "புதுவிசை" என்னும் இதழும் தற்போது சில புதிய முயற்சிகளைச் செய்து வருகிறது. மிகப்பெரிய வெகுஜனப் பத்திரிக்கையாகிய "குமுதம்" நிறுவனத்தின் வெளியீடாக வரும் "தீரா நதி" பேசப்பட்டு வரும் ஓர் இலக்கியச் சிற்றிதழாக உருவாகி வருகிறது.

உள்ளடக்கம்

இலக்கியச் சிற்றிதழ்கள் பலவகை நோக்கங்களுடன் தங்கள் உள்ளடக்கங்களை அமைத்துக் கொண்டன. தொடக்கக் காலத்தில் சிறுகதை, நாடகம், தொடர்கதை, நூல் விமரிசனம், சிறுவர் பகுதி, மதிப்புரைகள் போன்ற உள்ளடக்கங்களுடன் அவை வெளிவந்தன. அக்காலக் கட்டத்தில் கவிதைகள் குறைவு. திருக்குறளை மையப்படுத்திய சிற்றிதழ்கள் குறட்பாக்களுக்குப் பொருத்தமான கதைகளைச் சான்று காட்டி விளக்கின. தமிழ் மொழி, இலக்கியம் ஆகியவற்றின் அடிப்படையில் உள்ளடக்கம்

அமைந்தது. ஆயின் 1950களில் இலக்கியச் சிற்றிதழ்களின் போக்கில் மாற்றங்கள் ஏற்பட்டன. "புதுக்கவிதை" என்னும் புதிய வரவு இலக்கியச் சிற்றிதழ்களில் பெருமிடத்தைப் பிடித்துக் கொண்டது. எழுத்து இதில் தனிக் கவனம் செலுத்தியது. இலக்கிய வட்டமும் பெருமளவு விமரிசனங்களுக்கு இடம் தந்தது.

மேனாட்டு ஆய்வுப் போக்குகள் - விமரிசனங்கள் அவற்றில் வெளியிடப்பட்டன. இலக்கிய வட்டம் "படித்த புத்தகம்" என்னும் தலைப்பில் தனிப்பகுதி அமைத்து நூல் விமரிசனங்களை வெளியிட்டது. இது தவிர "வரி விமரிசனங்கள்" என்று அழைக்கப்பட்ட சிறு விமரிசனங்களும் எழுதப்பட்டன. மேலும் இலக்கியத்திற்கு உருவம் முக்கியமா? உள்ளடக்கம் முக்கியமா? என்ற விவாதங்களும், இலக்கியம் சமூகத்துடன் கொள்ளும் தொடர்புகளும் பற்றி அவை கருத்துகளை வெளியிட்டன. இவ்விதழ்கள் தொடர்ந்து பல கருத்துப் போராட்டங்களை நிகழ்த்தின.

சோதிட இதழ்கள்

அறிவியல் மிகப் பெருகிவிட்ட இன்றைய காலக்கட்டத்திலும் சோதிடம் மீதான நம்பிக்கைகள் இன்னமும் இருந்து வருகின்றன. இதன் விளைவாக நாளிதழ், வார இதழ்களின் ஓர் உள்ளடக்கக் கூறாகச் சோதிடம் இடம்பெறும் போக்குக் காணப்படுகிறது. அதன் அடுத்தகட்ட வளர்ச்சியாகச் சோதிடம் இன்று தனி இதழாக வெளிவரத் தொடங்கி உள்ளது. சோதிடத்தின் பால் மக்கள் கொண்டிருக்கும் ஈடுபாடும் அதிலும் குறிப்பாய்ப் பெண்கள் காட்டும் ஆர்வமுமே இதற்கு முக்கியக் காரணம் ஆகின்றது.

சோதிட இதழ்களின் வரவு நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. விடுதலைக்கு முன்னரும் பல சோதிட இதழ்கள் வெளிவந்துள்ளன. விடுதலைக்குப் பின்னர் ஜோதிட மணி (1953), ஜோதிட போதினி (1959)இல் மீண்டும் (1962), ஸ்ரீ சிந்தாமணி (1962), ஜோதிட மலர் (1962), கற்பக மணி (1957), விதி, தலையெழுத்து போன்ற இதழ்கள் வெளிவந்துள்ளன.

"உங்கள் எதிர்காலம்", "ராசி", "பால ஜோதிடம்", "பொய்யாமொழி", "சக்கரவாணி", "ஜோதிடக்கடல்", "உங்கள் நல்ல காலம்", "எண்கள்" போன்றவை இன்றளவும் வெளிவந்து

கொண்டுள்ள சோதிட இதழ்களாகும். தனி இதழ்களாக வெளிவருவதுடன் ஜோர்திடக்கூறுகள் நாளிதழ்களிலும் தனிக்கூறுகளாக வெளிவருகின்றன.

தினமணி, தினத்தந்தி, தினமலர் போன்ற நாளிதழ்கள் சோதிடச் செய்திகளை வெள்ளி மற்றும் ஞாயிற்றுக் கிழமைகளில் நான்கு பக்க அளவில் வெளியிடுகின்றன. மாலை முரசு நாளிதழ் தனி இணைப்பாகச் செவ்வாய்க்கிழமை தோறும் சோதிட முரசு என்ற பெயரில் சோதிடச் செய்திகளை வெளியிடுகின்றது. குமுதம், நக்கீரன், கோகுலம், கதிர், ராணி போன்ற வெகுஜன இதழ்களிலும் தவிர்க்க முடியாத ஒரு பகுதியாக வாரம் தோறும், மாதம் தோறும் வெளியிடப்படுகின்றன.

வடிவம்

ஜோதிட இதழ்கள் பொதுவாக டெம்மி அளவிலும், கிரவுண் அளவிலும் வெளிவருகின்றன. ஏ4 அளவுகளிலேயே பெரும்பாலான சோதிட இதழ்கள் வெளிவருகின்றன. குமுதம், ஜோதிடம், பால ஜோதிடம் போன்ற சோதிட இதழ்கள் பளபளப்பான அட்டையினைக் கொண்டுள்ளன. இவை தவிர மற்றைய சோதிட இதழ்கள் பளபளப்பில்லாத அச்சுத்தாளினையும், வண்ணமிலாத் தாள்களையுமே பயன்படுத்துகின்றன. இவ்விதழ்கள் தரம் குறைந்த தாளினையே பெரும்பாலும் பயன்படுத்துகின்றன.

உள்ளடக்கம்

சோதிட இதழ்களில் துணுக்குகள், கேள்வி-பதில் சிறப்புக் கட்டுரை போன்றன உள்ளடக்கக் கூறுகளாகின்றன. அவற்றில் பஞ்சாங்கக் குறிப்புகள் கிரக நிலைகள், கிரகப் பெயர்ச்சிகள் பற்றி எழுதப்படுகின்றன. சாஸ்திரங்கள், ஆன்மீகக் கட்டுரைகள், சோதிடம் சார்ந்த விளம்பரங்கள், இராசி பலன்கள், பிறந்த நாள் பலன்கள், நாள் பலன்கள், நட்சத்திரப் பலன்கள் போன்றன வெளிவருகின்றன. தல வரலாறு இந்த வார நாட்கள் போன்றனவும் வெளிவருகின்றன. புத்தக மதிப்புரைகள், போட்டிகள், போன்றனவும் உள்ளடக்கங்களாக அமைகின்றன.

சோதிட இதழ்கள் தனி இதழ்களாக வெளிவருகின்ற பொழுது 34 முதல் 40 பக்கங்கள் வரை வெளிவருகின்றன.

நாளிதழ்களில் நான்கு பக்கங்களிலிருந்து எட்டுப்பக்கங்களும், இணைப்புகளில் 32 பக்கங்களும் வரை அவை இடம்பெறுகின்றன.

இதன் உள்ளடக்கங்களில் பெரும்பாலானவை தோஷ நிவர்த்திகள், திருமணத்தடை, காதல் தோல்வி, தொழில் முன்னேற்றம் போன்ற மனித எதிர்ப்புகள் சார்ந்தும், பரிகார பலன்கள், பரிகாரக் கோவில்கள் சார்ந்தும் விளங்குகின்றன.

சோதிடம், ஆன்மீகம் சார்ந்த துணுக்குகளும் அதிக அளவில் இடநிரப்பிகளாக அமைந்துள்ளன. சில பிரசித்தி பெற்ற இதழ்கள் புகைப்படங்களையும், வண்ணப்படங்களையும் அதிக அளவு வெளியிடுகின்றன. உங்கள் நல்ல காலம், எண்கள் போன்ற இதழ்கள் வண்ணப் படங்களை அதிக அளவில் வெளியிடுவதில்லை.

முடிவுகள்

இந்திய விடுதலைக்குப்பின் தமிழ் இதழ்களில் பல வரவேற்கத்தக்க மாற்றங்களும், போக்குகளும் புகுந்துள்ளன. இதழ்களிடையே கடும் போட்டி நிலவுவதைக் காண முடிகிறது. இது விற்பனைப் பெருக்கத்திற்கும், இதழ்களின் நிலைத்த தன்மைக்கும் தேவையானதே.

பல தமிழ் இதழ்கள் அண்மைக் காலத்திய தொழில் நுட்பங்களைக் கையாளுகின்றன. பொதுமக்களிடையே கருத்துருவாக்குதல், விழிப்புணர்வு ஊட்டுதல், மாற்றத்தை ஏற்படுத்துதல் போன்ற முயற்சிகளில் இதழ்கள் வெற்றி பெற்றுள்ளன.

இதழ்கள் பல துறைகளில் வெளிவருவதும் இதழ்களுக்கு வாசகர்கள் பெருகி இருப்பதும் வரவேற்கத்தக்க நல்ல போக்காகும். தேசியச் செய்திகள், சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகள் போன்றவற்றை இதழ்கள் வெளியிடுகின்றன. நடப்புச் செய்திகளை அலசிச் சீர்தூக்கும் போக்கும் காணப்படுகிறது.

தொலைக்காட்சியின் தாக்கம் அச்சுவழி ஊடகத்திற்குப் பெரிய சவால் என்பதில் ஐயமில்லை. எனினும் தங்களது தொடர்ந்த மாற்று முயற்சிகளிலும், அச்சு ஊடகம் நிலைத்த தன்மையைப் பெற்றுள்ளது. எனினும் வாசகர்களைக் கவர்வதற்காக இதழ்கள் மலினப்பட்டு விடக்கூடாது என்பது கவனத்தில் கொள்ள வேண்டியதாகும். அரசியல் சார்பு தலைதூக்கும் தருணங்களில் தகவல் தெரிவித்தலில் மிகையும், குறையும் இருப்பதைக் காணமுடிகிறது. இதனால் சமூகத்தின் முக்கியப் பிரச்சினைகளின் உண்மைத் தகவலை மக்கள் அறிய முடியாத நிலை உருவாகிறது.

ஒருதலைச் சார்பு என்பது இதழ்களில் தவிர்க்கப்பட வேண்டியது. கொள்கைகளின் அடிப்படையில் வெளிவரும் இதழ்களில் இக்கோட்பாடு நிலைபெறுவது இல்லை. சில

சமயங்களில் தனி நபர்கள், நிறுவனங்கள், அதிகார வர்க்கத்தினர் போன்றோர் பல முக்கிய ஆவணங்களை இதழ்களுக்குத் தரும் சூழலும், அவற்றை இதழ்கள் வெளியிட நேர்கையில் எதிர்மறை விளைவுகளும் நிகழ்ந்து விட வாய்ப்புகள் உருவாகின்றன.

இதழ்களைச் சமூக நிறுவனங்கள் எனலாம். அவை தாம் வெளிவரும் சமூகத்தின் தன்மைகளுக்கு ஏற்றவாறு தம்மை வெளிப்படுத்திக் கொள்ள வேண்டும். தமக்கு உரிய தரக்கட்டுப்பாட்டைத் தக்க வைத்துக் கொண்டு, தன் கடமைகளை வரையறுத்து, சுய ஒழுக்கத்துடன் சுயக்கட்டுப்பாட்டுடன் இதழ்கள் செயல்பட வேண்டிய அவசியம் ஒரு குடியரசு நாட்டில் உள்ளது.

பாரம்பரியக் கலாச்சாரம், சமயம், தேசியம் போன்றவற்றைப் புலப்படுத்தித் தக்க வைக்கும் பாங்கில் இதழ்கள் வெளிவர வேண்டும். மேற்கத்தியத் தொழில் நுணுக்கங்கள் பின்பற்றப்படலாம். ஆயின் மேற்கத்திய மதிப்பீடுகளைப் பின்பற்றுவது பொருந்தாது. பிரபலமாவதற்குரிய முயற்சியில் தன் மதிப்பீடுகளை இதழ்கள் குறைத்துக் கொள்ளக் கூடாது.

இணைப்பு

அட்டவணை-1

கல்வி கற்றோர் தொகை
1951-1991

ஆண்டு	மில்லியன்	சதவிகிதம்
1951	50	18
1961	100	28
1971	162	35
1981	234	44
1991	352	52

ஆதாரம் : இந்திய மக்கள் தொகை-1991.

அட்டவணை-2

பிரதிகள் விற்பனையில் வளர்ச்சி
(மில்லியன் பிரதிகள்)

	நாளிதழ்கள்	வார இதழ்	மாதம் இருமுறை	மாத இதழ்கள்	மற்றவை	மொத்தம்
1956	2.908	3.020	0.785	3.479	0.769	10.932
1966	6.320	5.883	1.268	7.060	1.156	21.687
1976	9.461	9.154	2.745	10.836	1.876	34.075
1986	21.849	18.201	5.901	15.836	2.264	64.051
1993	29.488	21.380	5.807	9.860	1.076	67.611

23	35	50	31	31	36	30	1.87	3.70	7.31	10.55	7.
7	11	17	39	10	12	24	2.40	2.27	4.94	8.36	9.
12	28	47	78	26	34	39	1.68	5.68	8.31	8.20	6.

துணைநூல்கள்

1. அனுசுயா, வி. — மக்கள் தொடர்புப் பிரச்சினைகளும், தீர்வுகளும், 258, பாரதியார் தெரு, ஜெய்ஹிந்த்புரம், மதுரை-625011. முதல் பதிப்பு, நவ.21, 1993.

2. இரத்தினம், கா.பொ., — எழுத்தாளர் கல்கி, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-600 014. முதல் பதிப்பு, ஏப்.14, 1966.

3. இராமசாமிப்புலவர், சு.அ. — நாள், கிழமை, திங்கள் இதழ் விளக்க வரிசை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், திருநெல்வேலி-6.

4. இராசா, கி. — இதழியல், பார்த்திபன் பதிப்பகம், 12, கமாண்டிங் ஆபீசர், தெரு II. மேலமாசி வீதி, மதுரை.

5. -------- — இதழியல் நுட்பங்கள், பார்த்திபன் பதிப்புகம், திருச்சிராப்பள்ளி, முதல் பதிப்பு, ஜுன், 1995.

6. இளங்கோ, ச.சு. — பாரதிதாசனின் தலையங்கம், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ் (பி) லிமிடெட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை-98. முதல் பதிப்பு, ஜுலை, 1997.

7. இளங்கோவன், மா.ரா. — இந்திய இதழ்கள், 14, சித்திரைக் குளம், மேற்குமாசி வீதி, மயிலாப்பூர், சென்னை-4. முதல் பதிப்பு, டிச.1998.

8. -------- — தலையங்க இலக்கியம், சேகர் பதிப்பகம், 66, பெரியார் தெரு, எம்.ஜி.ஆர். நகர், சென்னை-78. முதல் பதிப்பு, ஜூன், 1980.

9. -------- — இந்திய இதழ்கள், சேகர் பதிப்பகம், சென்னை-78. முதல் பதிப்பு, ஜன.5, 1981.

10. இறையரசன், பா. — இதழாளர் பாரதி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிடெட் 41பி, சிட்கோ இண்டஸ்ரியல் எஸ்டேட், சென்னை-98. முதல் பதிப்பு, ஜன, 1995.

11. கலைவாணி, சோ. — செய்தி சேகரித்தலும், எழுதுதலும் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்-627 802 முதல் பதிப்பு, டிச. 1997.

12. கிரி., பி.வி. — செய்தி இதழ்களின் கதை, திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், 1/40, பிரகாசம் சாலை, சென்னை-600 001. முதல் பதிப்பு.

13. குருசாமி, ம.பா. — இதழியல் கலை, கஸ்தூரி அச்சகம், சாத்தான் குளம், முதல் பதிப்பு, ஏப்.1988.

14. குரும்பூர் குப்புசாமி — அமைச்சர் ஆதித்தனார், ராணி பதிப்பகம், சென்னை-7, முதல் பதிப்பு, ஏப்.1, 1969.

15. குளத்தூரான், க. — தகவல் தொடர்பியலும், இலக்கியச் சிற்றிதழ்களும், தஞ்சை ஆய்வியல் கழகம், 77-78, கொடிமரத்து மூலை, கீழ ராஜ வீதி, தஞ்சாவூர்-613 001 முதல் பதிப்பு, ஜூன், 1998.

16. சக்திவேல், சு. — **இதழியல்**,
மணிவாசகர் பதிப்பகம்,
87, சங்கர் தெரு, பாரிமுனை,
சென்னை-600 108.

17. சம்பந்தம், மா.சு. — **தமிழ் இதழியல் களஞ்சியம்**,
பாரி நிலையம், 59, பிராட்வே,
சென்னை-600 001.
முதல் பதிப்பு, டிச. 1990.

18. சாமி, அ.மா. — **தமிழ்க் கிறிஸ்தவ இதழ்கள், ஓர் ஆய்வு**, நவமணி பதிப்பகம்,
12, 2-வது பெருஞ்சாலை, நகர
வளர்ச்சிக் குடியிருப்பு,
சென்னை-600 004. முதல் பதிப்பு.

19. சாந்தா, அ. — **மக்கள் ஊடகத் தொடர்பியல் அடிப்படைகள்**,
52, வீரமுத்து கார்டன்,
ஸ்ரீ நகர் (விசாலம்), ஆனையூர்,
(அஞ்சல்), மதுரை - 625 017.
முதல் பதிப்பு, மார்ச், 2001.

20. சிங்காரம், ச. — **இதழியல்**, நர்மதா பதிப்பகம்,
நல்ல நூல் வெளியீட்டாளர்கள்,
16/7, ராஜாபாதர் தெரு
தியாகராய நகர், சென்னை-17.
முதல் பதிப்பு, டிச. 1995.

21. சித்ரா, இரா. — **தமிழ்த் திரைப்பட இதழ்கள்**,
இராசி வெளியீடு,
சின்னாளப்பட்டி,
அண்ணா மாவட்டம்,
முதல் பதிப்பு, டிச 21,1987.

22. சிவக்குமார் — **உடலே திரையாக**
(தகவல் தொடர்பு ஊடகங்கள்),
ஸ்ரீ சக்தி பிரிண்ட்ஸ்,
பெங்களூர்-560005,
முதல் பதிப்பு, டிச. 1995.

23. சிவகாமி, ச. காலச் சூழலில் பெண், மாதவி பதிப்பகம், ஸ்ரீ புரம் இரண்டாவது தெரு, சென்னை-600 014.

24. சுப்பிரமணியன், சுவ. சினிமா, தமிழ்ப் புத்தகாலயம், 58, டிபி. கோயில் தெரு, பெண்கள் பள்ளி எதிரில், திருவல்லிக்கேணி, சென்னை-5 முதல் பதிப்பு, நவ. 1990.

25. சுந்தரமூர்த்தி, இ. இந்திய விடுதலைக்கு முந்தைய தமிழ் இதழ்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை-113.

26. தங்கமணியன் பத்திரிக்கை மொழிநடை, மாணிக்கப் பதிப்பகம் பரணம், (அஞ்சல்) உடையார்பாளையம் (வழி), திருச்சி மாவட்டம்-621 804. முதல் பதிப்பு, 1986.

27. தமிழரசி, து. ஒரு நாளிதழ் உருவாகிறது, சங்கப்பலகை வெளியீடு, 32, கக்கன் வீதி, செனாய் நகர், மதுரை-625 020. முதல் பதிப்பு, ஆகஸ்ட், 1987.

28. பரமசிவம், மு. மக்கள் எழுத்தாளர் விந்தன், பூக்கூடை பதிப்பகம், சென்னை-600 014. முதல் பதிப்பு, 1983.

29. பாவேந்தன், இரா. தமிழில் அறிவியல் இதழ்கள், சாமுவேல் ஃபிஷ்கிறீன் பதிப்பகம், பி-29, பேராசிரியர்கள் இல்லம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகம், கோவை-641 003.

30. பூரணச் சந்திரன், க. **செய்தித் தொடர்பியல் கொள்கைகள்,**
4/261, மேலத் தெரு,
உய்யக் கொண்டான் திருமலை,
திருச்சி-620 102.
முதல் பதிப்பு, மே.1991.

31. முத்து கிருஷ்ணன், தி. **கடல்தாமரை,**
கிரியேடிவ் வொர்க் ஷாப்,
சென்னை, முதல் பதிப்பு, ஜன. 1996.

32. மு.பி.பா. **இதழியல் பதிவுகள்,**
பூங்கொடி பதிப்பகம்,
14, சித்திரைக்குளம் மேற்கு வீதி,
மயிலாப்பூர், சென்னை-600 004.

33. லேனா தமிழ்வாணன் (ப.ஆ.) **இந்தியப் பத்திரிக்கைகளின் தோற்றமும்-வளர்ச்சியும்,**
மணிமேகலைப் பிரசுரம்,
தபால் பெட்டி எண்-1447,
4, தணிகாசலம் ரோடு,
தியாகராய நகர், சென்னை-17.
முதல் பதிப்பு, 1987.

34. லேனா தமிழ்வாணன் **தமிழ்ப் பத்திரிக்கைகளின் தோற்றமும் வளர்ச்சியும்,**
மணிமேகலைப் பிரசுரம்,
தபால் பெட்டி எண்-1447
4, தணிகாசலம் ரோடு,
தியாகராய நகர், சென்னை-17.
முதல் பதிப்பு, 1987.

35. ஜான் லோப்பஸ் **மக்கள் தொடர்பு கலை,**
நர்மதா பதிப்பகம்,
16/7, ராஜாபதர் தெரு,
பாண்டிபஜார், தியாகராய நகர்,
முதல் பதிப்பு, செப்., 1988.

36. எஸ்.சி.பட் — இந்தியப் பத்திரிக்கைகள் 1955 முதல், பப்ளிகேஷன்ஸ்டிவிஷன், தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை அமைச்சகம், இந்திய அரசு, முதல் பதிப்பு, ஆகஸ்ட், 2000.

37. வல்லிக்கண்ணன் — தமிழில் சிறுபத்திரிக்கைகள், ஐந்திணைப் பதிப்பகம், 279, பாரதி சாலை, திருவல்லிக்கேணி, சென்னை-5. தொலைபேசி-849410

38. Bhat S.C. — **Indian Press Since-1955,** Publication division, Ministry of Information & Broad Casting, Govt. of India, F.P. April. 1997.

39. Karthigesu Sivthamby — **The Tamil Film as a Political Communication,** New Century Book House Pvt. Ltd. 41-B Sidco Industrial Estate, Ambattur, Chennai-600 098. F.P. March, 1981.

40. Nadig Krishnamurthy — **Indian Journalism, Prasaranga,** University of Mysore, Mysore (Indi), F.P. 1996.

41. V. Natarajan K.Mani H.S.A. Khan — **Outlines of Communication H.M.V.** Syndicated Service Post Box: 1688. 387-D. Kamaraj Road, Lakshmipuram, Coimbatore-641004.

42. Puri G.K. — **Competition Success Revien,** Competition Revien Pvt. Ltd. 604, Prabhatkiran, Rajendra Place, New Delhi-110008.

43. Robin Jeffrey — **India's News Paper Revolution,** Oxford University Press, F.P. 2000.

44. ----- — **Journalism Today, A Selected Bibliography,** Indra Prastha Press (CBT), Nehru House, New Delhi.

45. Thirty Eighth Annual Report of the Registrar of News papers for India — **Press in India - 1994,** Under the press of Registration of Books Act. 1867.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

	ரூ.பை.
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300	100.00
பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார்	40.00
பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண் எழுத்தும்	40.00
தொல்காப்பியப் பொருளதிகாரம் (அகம்-புறம்) ஆங்கில மொழிபெயர்ப்பு	50.00
தமிழ் ஆய்வு இதழ்கள்	50.00
வேதாத்திரியத்தில் சமூகவியல் இறையியல் சிந்தனைகள்	130.00
மக்கள் நேயச் சுயமரியாதை	30.00
ஏ.என். சிவராமனின் பத்திரிகை உலகம்	30.00
தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 3	150.00
தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 2	115.00
தமிழிலக்கிய வகைமையியல் தொகுதி - 1	130.00
தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல் - தொழில்நுட்பம் II	100.00
தமிழரின் மரபுச் செல்வங்கள் - அறிவியல் - தொழில்நுட்பம் I	90.00
மௌனத்தின் அதிர்வுகளும் மொழியும் - பெண்	40.00
உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000	180.00
தமிழர் கண்ட தாவரவியல்	40.00
இதழாளர் பெரியார்	160.00
திராவிட இயக்க இதழ்கள் - தொகுதி 1	60.00
சைவ சித்தாந்தத்தில் ஆன்மக் கொள்கை	65.00
பெரியபுராணம் - திருமுறைகளின் கவசம்	55.00
காஞ்சிபுரம் கி.பி. 6-ஆம் நூற்றாண்டுக்கு முன்	65.00
திருவாவடுதுறைப் புராணம்	250.00
மகாவித்துவான் ரா. ராகவையங்கார்	30.00
சித்தாந்தச் செல்வர் க. வெள்ளைவாரணனார்	25.00
தமிழ் உரைநடையும் கிறித்தவர் பங்களிப்பும்	20.00
திருக்குறளில் பொதுநிலை உத்திகள்	30.00
தமிழிலக்கித்தில் மனித நேயம்	115.00
தமிழ்க்கடல் இராய சொக்கலிங்கம்	30.00
தமிழில் பிறதுறைக் கோட்பாட்டாய்வுகள் வரலாறும் மதிப்பீடும்	25.00

563 தமிழ் இதழ்கள் - விடுதலைக்குப்பின் 40.00